REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஒக்டோபர் 30 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්

வரு. 91 இல. 257 | Monday 30, October, 2023 | 20பக்கங்கள் | 50/-

## தேர்தல் திருத்தம்: அடுத்தவாரம் 3 சட்டமூலங்கள் மீது விவாதம்

### பாராளுமன்றம் நவ. 07 முதல் 10 வரை கூடும்



உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம், பாராளுமன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலம், மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் ஆகிய மூன்று தேர்தல் திருத்தச் சட்டமூலங்களும் எதிர்வரும் 06

# எம்.பிக்கள் குற்றமிழைத்தால் பதவி நீக்கம் செய்ய அதிகாரம்

## சுயாதீன பாராளுமன்ற தர நிர்ணய அதிகாரசபை ஊடாக நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாரதூரமான குற்றச்செயல்களின்போது குற்றவாளிகளாகக் காணப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களை அந்த பதவியிலிருந்து நீக்கும் அதிகாரங்களைக் கொண்டதாக உத்தேச சுயாதீன பாராளுமன்ற தர நிர்ணய அதிகார சபை அமையுமென நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற அதிகாரங்களில் அரைவாசியைக் கொண்டதாக (semi judicial power) ஸ்தாபிக்கப்படவுள்ள இந்த அதிகார சபை, ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியொருவரின் தலைமையில் நியமிக்கப்படவுள்ளதாகவும் அதற்காக எந்தவொரு அரசியல்வாதியும் நியமிக்கப்படமாட்டாரென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் மக்கள் நம்பிக்கையை ஏற்படுத்தல், பொறுப்பு மற்றும் தொழில் கௌரவத்தை 06



**semi judicial power கொண்ட இந்த அதிகார சபை மூலமாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வழிவகுக்கும் வகையில் அதிகாரம் கொண்ட உத்தேச சுயாதீன சபையை உருவாக்கவுள்ளதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு**

### குறிக்காட்டுவான் இறங்குதுறை விவகாரம்

## நீண்டகால நெருக்கடிக்கு தீர்வு வழங்கிய அமைச்சர்

### களத்துக்கு நேரடியாக சென்று தீர்வு



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம்_குறிக்காட்டுவான் இறங்குதுறைக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளையும் நேற்று உடனடியாக வழங்கியுள்ளார்.

யாழ். குறிக்காட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கு பயணத்தை மேற்கொள்ளும் படகுகளுக்கு இறங்குதுறையில் இடங்கள் ஒதுக்கப்படாததால், 06

## ஜப்பானின் தற்காப்புப்படை கப்பல் திருமலை வருகை

### நாளை நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லும்



**ஸாதிக் ஷிஹான்**

ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படைக்குச் சொந்தமான (JMSDF) அகேபோனோ என்றழைக்கப்படும் தாக்கியழிக்க பயன்படுத்தப்படும் (DD 108) கப்பல் நேற்றுமுன்தினம் இலங்கை வந்தது. உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு 06

## ஐ.ம.சக்தி கட்சியிலிருந்து பலர் விரைவில் ஐ.தே.கவில் இணைவர்

### அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐக்கிய மக்கள் சக்தி தம்மை கட்சியிலிருந்து விலக்க மேற்கொண்ட தீர்மானம் தொடர்பில் உயர் நீதிமன்றம் சரியான தீர்ப்பை வழங்குமென சுற்றாடல் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் அந்த தீர்ப்புடன் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பலர் 06



## 2025ஆம் ஆண்டு முதல் புதிய சொத்துக்கள் வரி அறிமுகம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



2025 ஆம் ஆண்டு முதல் புதிய சொத்துக்கள் வரியை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் பாரியளவில் சொத்துக்களை கொண்டுள்ள வர்களிடமிருந்து இந்த வரியை அறவிடுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கமையவே இந்த வரியை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 06

## பழம்பெரும் பாடகர் சுனில் சிறிவர்தன காலமானார்



இலங்கையின் பழம்பெரும் பாடகர் சுனில் சிறிவர்தன தனது 82 ஆவது வயதில் காலமானார். அவர் நேற்றுமுன்தினம் (28) காலமானதாக அவரது குடும்பத்தினர் உறுதிப்படுத்தினர். 06




அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி சம்மேளனத்தின் 50ஆவது வருட பொன் விழா மாநாட்டை முன்னிட்டு தபால் திணைக்களத்தினால் 25 ருபா முத்திரையும் ஞாபகார்த்த தபால் உறையும் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டன. தபால் உறையின் முதற்பிரதி பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரிடம் தபால் மாஅதிபர் எஸ்.ஆர்.டபிள்யூ. எம்.ஆர்.பி.சத்குமாரவினால் கையளிக்கப்பட்டது. (படம்: தெஹிவளை, கல்கிஸ்ச விசேட நிருபர்)

## வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகும் மக்களுக்கு வேறிடத்தில் வீடுகள்

### கொழும்பு மாநகரில் புதிய வேலைத்திட்டம் ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கடும் மழையினால் ஏற்படும் வெள்ளப்பெருக்கு காரணமாக கொழும்பில் பாதிக்கப்படும் பல்வேறு பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரில் 27 பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் கொழும்பு மாநகர ஆணையாளர் சந்திராணி ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். 06



### தேரர் மீதான குற்றச்சாட்டுகள், முறைப்பாடுகள்

## அம்பிட்டிய சுமணரத்ன தேரரை விசாரணைக்குட்படுத்த தீர்மானம்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உறுதி

நாட்டில் சட்டம், ஒழுங்கை நடைமுறைப்படுத்துவதற்கும், அமைதியைப் பேணிக் காப்பதற்காகவும் உரிய நடவடிக்கைகள் பாரபட்சமின்றி முன்னெடுக்கப்படும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். 06





06 மதுபோதையில் வாகனம் செலுத்திய முன்னாள் DIG கைது
01 ஆம் திகதி வரை விளக்கமறியல்




03 மத்தியகிழக்கில் இலங்கையருக்கு அவசரகால உதவிகள் தேவையா?
வெளிவிவகார அமைச்சினால் புதிய தொலைபேசி எண்

## மஸ்கெலியாவில் மாயமான சிறுவர் மூவர் மட்டுநகரில் மீட்பு

### வேலைதேடிச் சென்றதாக தெரிவிப்பு

**மஸ்கெலியா நிருபர்**

சாமிமலை பகுதியில் மாயமான மூன்று மாணவர்களும் மட்டக்களப்பு பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் 06



### இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறல்;

## இந்திய மீனவர்கள் 37 பேர் கடற்படையினரால் கைது!

**மன்னார் குறூப் நிருபர்**



இலங்கை கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக தலைமன்னார் கடற்பரப்பில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 03 படகுகள் கைப்பற்றப்பட்டு அதிலிருந்து 23 மீனவர்களை கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர். 06

## இலங்கைக்கு துருக்கி நேரடி விமானசேவை

### வாரத்தில் 04 நாட்கள் நடத்த முடிவு



துருக்கி விமான நிறுவனமான டேர்கிஷ் எயார் லைன்ஸ், இன்று 30 ஆம் திகதி முதல் இலங்கைக்கான நேரடி விமான சேவையை ஆரம்பிக்கிறது. 06

### சுற்றுலாத்துறைக்கு ஊக்கமளிக்கும் முயற்சி

## பருத்தித்துறை–திக்வெல்ல சைக்கிள் பயணம் ஆரம்பம்



**யாழ். விசேட நிருபர்**

இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் முயற்சியாக சர்வதேச சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் பருத்தித்துறை முதல் திக்வெல்ல வரையிலான சைக்கிள் பயணமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 06

### இஸ்ரேல் தாக்குதல்கள் தீவிரம்;

## காசா பள்ளத்தாக்கில் இலங்கையர் 17 பேர் சிக்கிக் கொண்டதாக தகவல்



காசா தலைநகர் மீதான தாக்குதல்களை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ளதையடுத்து முழுமையான போர் தொடர்பில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

இதற்கு மத்தியில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 17 இலங்கையர் தொடர்ந்து காசா பள்ளத்தாக்கில் சிக்குண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இலங்கையர் தற்போது தென் காசாவில் 06

### அதிக வட்டி பெற்றுத் தருவதாகக் கூறி

## ரூ. 1,000 கோடிக்கும் அதிகமான நிதிமோசடி செய்த இருவர் கைது

### முன்னாள் படையினர் இருவர்மீது CID விசாரணை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அதிக வட்டியைப் பெற்றுத் தருவதாகக் கூறி பெருமளவில் பணத்தைப் பெற்றுக் கொண்டு சுமார் 1,000 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ள சந்தேகநபர்கள் இருவர் குற்றத்தடுப்பு விசாரணை பிரிவு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இரண்டு 06

## செஸ் போட்டியில் கிடைத்த முதல் தங்கம்

### ஒஷினி தேவிந்தியாவுக்கு பாராட்டு



எகிப்தில் நடைபெற்ற உலக இளையோர் செஸ் போட்டியில் முதன்முறையாக நாட்டுக்காக 06

## கிழக்கின் குரல்

# சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் தேசிய பாடசாலைக்கு வர்ணப்பூச்சு அன்பளிப்பு



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் தேசிய பாடசாலை கல்வி சமூகத்தின் சார்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோளைத் தொடர்ந்து ஒரு தொகுதி வர்ணப் பூச்சு பெட்டிகளை றிஸ்லி முஸ்தபா கல்வி உதவி சமூக சேவை அமைப்பு பாடசாலை அதிபர் நஸ்லின் றிப்கா அன்சாரிடம் வழங்கி வைத்தது.

வகுப்பறைகளில் பிள்ளைநேய கற்றல் சூழலினை உருவாக்கும் நோக்கத்துடன் இவ்வுதவியினை இப்பாடசாலை மாணவர்களின் நலன்களுக்காக வழங்கியுள்ளமை மிகவும் பெறுமதியான ஒரு செயற்பாடாகும் .

இந்நிகழ்வில் றிஸ்லி முஸ்தபா அவர்களின் இணைப்பதிகாரியும் திடீர்மரண விசாரணை அதிகாரியுமான அல் ஜவாஹிர், பாடசாலை ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்றில் உணவகங்கள் மீது சுகாதார அதிகாரிகள் திடீர் சோதனை!

(ஒலுவில் விசேட நிருபர்)

அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் எப். எம்.ஏ. காதர் தெரிவித்தார்.

உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய பொதுச்சுகாதாரப் பரிசோதகர் குழுவினரால் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள் என்பவற்றில் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.



பரிசோதனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள், பொருட்கள், காலவதியான பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டு அழித்தொழிக்கப்பட்டு வருவதோடு, உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகார சட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும் உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனவும், உணவகங்களில் பணியாற்றுபவர்கள் கையுறை பாவிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அதன் உரிமையாளருக்கெதிராக உணவுப் பாதுகாப்பு சட்டத்திட்டத்திற்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், குறித்த உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள் மூடப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# காத்தான்குடியில் தனது வீட்டையே தீக்கிரையாக்கி அழித்த இளைஞர்!

## போதைவஸ்து பாவனையே காரணம்!

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதிய காத்தான்குடியில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை இளைஞர் ஒருவர் தனது சொந்த வீட்டை தானே தீ வைத்து எரித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக 27வயது இளைஞன் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவரை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நீதிமன்ற நீதிபதி பீட்டர் போல் உத்தவிட்டார்.

வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதுடன் வீட்டிலிருந்த பொருட்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகியுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.ஏம்.ஏ.றஹீம் தெரிவித்தார்.



காத்தான்குடி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

போதைவஸ்து பாவனை காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. வீட்டுக்குத் தீவைத்து அந்த நபர் ஐஸ் உட்பட மற்றைய சில போதை வஸ்துகளுக்கு அடிமையானவர் என கைதான நபரின் தந்தை தெரிவித்துள்ளார்.

# தங்கப்பதக்கம் வென்ற களுதாவளை மாணவன்

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட விளையாட்டுப் போட்டி_ 2023 இல் மட்டக்களப்பு பட்டிருப்பு வலயக் கல்விப்பணிமனைக்குட்பட்ட களுதாவளை மகாவித்தியாலய தேசிய பாடசாலையின் மாணவன் கு.பகிர்ஜன் உயரம் பாய்தல் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

14 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் கலந்து கொண்டு 1.69. மீற்றர் உயரம் பாய்ந்தே தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார். தேசியமட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் 2016 இற்குப் பின்னர் களுதாவளை தேசியப் பாடசாலை தங்கப்பதக்கத்தை வென்றெடுத்துள்ளது. தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு தங்கப் பதக்கம் வென்ற மாணவன் பகிர்ஜன் உள்ளிட்ட மாணவர்கள் மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் வைத்து அதிபர் க.சத்தியமோகன் தலைமையிலான பாடசாலை சமூகத்தினரால் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர்.



# இலங்கை - துருக்கி இடையே நவம்பர் முதல் நேரடி விமான சேவையை ஆரம்பிக்க முடிவு

## துருக்கிக்கான இலங்கைத்தூதுவர் ஹசந்தி திசாநாயக்க தெரிவிப்பு

இலங்கைக்கும் துருக்கிக்குமிடையிலான 'துருக்கி ஏர்லைன்ஸ்' நேரடி விமானச் சேவையை எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் ஆரம்பிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக துருக்கிக்கான இலங்கைத் தூதுவர் ஹசந்தி திசாநாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினம் மற்றும் இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையிலான 75ஆவது வருட இராஜதந்திர உறவுகளை முன்னிட்டு அங்காரா அன்தாலியாவில் அண்மையில் நடைபெற்ற சுற்றுலா மற்றும் கலாசார ஊக்குவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்படுவதால் இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பையும், நேர்மறையான மற்றும் நெருக்கமான தொடர்புகளும் அதிகரிக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அன்தாலியா உள்ளூராட்சி நிறுவனம் மற்றும் முன்னணி தனியார்த் துறை நிறுவனங்கள், அரச அதிகாரிகள், அன்தாலியாவின் சுற்றுலாத்துறையின் பிரதிநிதிகள் மற்றும் நாட்டின் ஊடகத்துறையினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இலங்கை சுற்றுலாத்துறை தொடர்பான காணொளிகள், இலங்கை இசை மற்றும் பதிக் உற்பத்திகளும் இங்கு காட்சிப் படுத்தப்பட்டன. விருது பெற்ற தொழில்முறை புகைப்படக் கலைஞர் ரவி ரணசிங்க மற்றும் கலாநிதி உம்பர்டோ பினெட்டி ஆகியோரின் புகைப்படங்களுடன் இயற்கை மற்றும் காலநிலை மாற்ற தாக்கங்கள் மற்றும் கலாசாரத்தை சித்திரிக்கும் இலங்கை புகைப்படங்கள் மற்றும் பிரபல இலங்கை கலைஞர் வசந்த பெரேராவின் பல ஓவியங்களின் கண்காட்சியும் இலங்கை ரத்தினம் பதித்த நகைகளின் கண்காட்சியும் இதன்போது நடைபெற்றது.



விழாவிற்குப் பின்னர் இலங்கைத் தூதுவர் அன்தாலியாவில் உள்ள அதன் தொழிற்சாலையையும் பார்வையிட்டார். சூரிய சக்தி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் சாத்தியமான இணைந்த முயற்சிகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## நகர்வலம்

# பேராசிரியர் மு. இளங்கோவனுக்கு உலகத் தமிழ் மாமணி விருது



புதுச்சேரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற விழாவில், புதுச்சேரி அரசின் காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தமிழ்ப் பேராசிரியர் மு. இளங்கோவனுக்கு புதுச்சேரி சட்டப்பேரவையின் தலைவர் ஆர். செல்வம் உலகத் தமிழ் மாமணி எனும் விருதினை வழங்கி கௌரவித்தார். அருகில் பேராசிரியர் பாஞ். இராமலிங்கம், புலவர் ந. ஆதிகேசவன், ஜெய பாலகிருஷ்ணன் ஆகியோரும் அருகில் காணப்படுகின்றனர்.

# காலி தலங்கஹ சரஸ்வதி தமிழ் வித்தியாலய கட்டட புனரமைப்புக்கு "Seeda Foundation" உதவி

## நௌஸர் பௌஸிக்கு பாடசாலை சமூகம் பாராட்டு



காலி மாவட்டத்திலுள்ள தமிழ் பாடசாலைகளிலொன்றான நாகியாதெனிய தலங்கஹ சரஸ்வதி தமிழ் பாடசாலையின் வகுப்பறை கட்டடங்ளை புனரமைப்பு செய்வதற்கு இலங்கையிலுள்ள "Seeda Foundation" அமைப்பு நிதியுதவி வழங்கியுள்ளது. காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி மேற்படி அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான நௌஸர் பௌஸியிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் மேற்படி பாடசாலை கட்டடங்களை புனரமைக்க 35 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந் நிதியுதவியை கையளிக்கும் நிகழ்வு சரஸ்வதி தமிழ் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றபோது அமைப்பின் பணிப்பாளர் நௌஸர் பௌஸி மற்றும் சந்திம வீரக்கொடி எம்.பி ஆகியோர் இணைந்து பாடசாலை அதிபரிடம் உத்தியோகபூர்வமாக காசோலையை கையளித்தனர். இந் நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உட்பட மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# இஸ்ரேல் தாக்குதலில் பலியானோருக்கு பேருவளை நிகழ்வில் துஆ பிரார்த்தனை

இஸ்ரேல் காஸா மீது மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலினால் ஷஹீதான மற்றும் காயமுற்றவர்களுக்காக விஷேட துஆப் பிரார்த்தனை நிகழ்வு பேருவளை மருதானை யாஸிர் அரபாத் வீதியில் உள்ள யாஸிர் அரபாத் பள்ளிவாசல் முன்னாள் தர்மகர்த்தா முஸம்மில் ஹாஜியாரின் இல்லத்தில் அண்மையில் இடம் பெற்றது. களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த விஷேட துஆப் பிரார்த்தனை நிகழ்வில் மௌலவி எம்.ஆர்.உவைஸுல் கர்னி (அல்அஸ்ஹரி) துஆ பிரார்த்தனை புரிந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன தலைவர் எம்.எம்.ஜௌபர், பொதுச் செயலாளர் எம்.ஸம்ஸுல் மக்கி, பொருளாளர் அர்சத் ஸவாஹிர் உட்பட பல பிரமுகர்கள், முன்னணி உறுப்பினர்கள் இதில் பங்குபற்றினர்.



பாலஸ்தீனத்தில் அமைதி சமாதானம் நிலவ பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டதுடன் காஸா மக்கள் மீது இஸ்ரேல் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு கண்டனமும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2023 ஒக்டோபர் 30 திங்கட்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.41
ளுஹர் - 11.56
அஸர் - 03.17
மஃரிப் - 05.53
இஷா - 07.04

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஐப்பசி 13
ராகுகாலம் : காலை : 7.33 - 9.03வரை
சுபநேரம் : பகல் : 12.03 - 1.33வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



பாரம்பரிய அரசியலைக் குறை கூறாமல்

## பன்முகப்படுத்தப்பட்ட ஏற்றுமதியூடாவே நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த முடியும்

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

"ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தாமல், பாரம்பரிய அரசியலைக் குறை கூறுவதால் நாட்டை பொருளாதார ரீதியாக உயர்த்த முடியாதுதென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனதெரிவித்துள்ளார்.

இலங்கை அச்சக சங்கத்தின் ஏற்பாட்டில் 2023 தேசிய அச்சக விருதுகள் (SLAP award) வழங்கும் நிகழ்வு கொழும்பில் நடைபெற்றது.

விருது வழங்கும் நிகழ்வில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன பிரதம அதிதியாகவும், நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

அச்சிடும் துறையில் சிறந்த படைப்பு மற்றும் தொழில்நுட்ப



திறன்களை வெளிப்படுத்திய அச்சுத் துறையில் ஈடுபட்டுள்ள பல நிறுவனங்கள் பல பிரிவுகளின் கீழ் விருது வழங்கி பாராட்டப்பட்டன.

பரிசளிப்பு விழாவில் அமைச்சர் பேசுகையில்,

"சுதந்திரத்துக்குப் பிறகு எமது நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்ததால், 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 08 வீதம் பின்னோக்கிச் சென்றது. ஒவ்வொரு தொழிற்துறையும், ஒவ்வொரு வியாபாரமும், ஒவ்வொரு உற்பத்தித் துறையும் கடுமையாக வீழ்ச்சியுற்றன. எவர் எந்த வகையான அரசியல் அறிக்கைகளை வெளியிட்டாலும், இந்நிலைக்குக் காரணமான உண்மையான நிலைமைகளை நாம் சரியாகப் புரிந்துகொண்டுள்ளோம். நீண்ட காலமாக, நாடு தாங்க முடியாதளவு வரவு செலவு திட்ட பற்றாக்குறைக்கு முகம் கொடுத்ததால் பெரும் அழுத்தத்தைக் கொண்டுவரும் கடன் வலையில் சிக்கித் தவிக்க வேண்டியுள்ளது.

மேலும், நிலுவைத் தொகை பற்றாக்குறையால், நாடு கடுமையான பொருளாதாரப் படுகுழியில் விழுந்துள்ளது.

இந் நிலைமைகளால் அச்சுத் தொழிலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், வர்ணம், காகிதம், இயந்திரங்கள் போன்ற மூலப்பொருட்கள் மற்றும்

06

## காஸாவில் உடனடி போர் நிறுத்தம்: ஐ.நாவில் தீர்மானம் நிறைவேற்றம்

இலங்கை உட்பட 120 நாடுகள் ஆதரவு

காஸாவில் மனிதாபிமான அடிப்படையில் போர் நிறுத்தத்தை அமுல்படுத்த வலியுறுத்தி அரபு நாடுகள் கூட்டமைப்பு சார்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

193 உறுப்பினர்களைக் கொண்ட இந்த அமைப்பில், இலங்கை உட்பட 120 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாகவும், 14 நாடுகள் எதிராகவும் வாக்களித்தன.

கனடா, இங்கிலாந்து, இத்தாலி, இந்தியா, ஜெர்மனி மற்றும் உக்ரைன் உள்பட 45 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. இந்த தீர்மானத்தில், உடனடியாக மனிதாபிமான அடிப்படையில் போர் நிறுத்தத்தை அமுல்படுத்த வேண்டுமெனவும், காஸா பகுதிக்குள் அத்தியாவசிய பொருட்கள் சேவைகளை தொடர்ந்து தடையின்றி வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணயக்கைதிகள் அனைவரையும் உடனடியாக நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டுமென்றும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும், ஹமாஸுக்கும் இந்த மாதம் மோதல் ஆரம்பமாகியதிலிருந்து இதுவரை ஏற்பட்டுள்ள உயிரிழப்பு எண்ணிக்கை 10 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

காஸாவில் கடந்த 20 நாட்களாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் இதுவரை 7,326 போ் உயிரிழந்ததாக காஸாவின் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## முஸ்லிம் லீக் வாலிப முன்னணி சம்மேளன 50ஆவது வருட பொன்விழா நேற்று

புதிய தலைவராக ஷாம் நவாஸ் தெரிவு







(அஷ்ரப் ஏ சமத்)

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி சம்மேளனத்தின் 50ஆவது வருட பொன் விழா மாநாடு நேற்று (29) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு 07, விளையாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் சம்மேளனத்தின் தலைவர் லுக்மான் சஹாப்தீன் அடுத்த ஆண்டுக்கான தலைவர் ஷாம் நவாஸ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இம் மாநாட்டுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சார்பில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமசிங்க, இந்திய லோக் சபா தமிழ் நாடு பாராளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி, பலஸ்தீன் நாட்டின் இலங்கைத் தூதுவர் கலாநிதி சுகையிர் ஹம்துல்லாஹ் செய்யட் ஆகியோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

அத்துடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈரான் நாட்டின் முன்னாள் தூதுவருமான எம்.எம். சுஹைர் இங்கு சிறப்புரை நிகழத்தினார். பொன் விழா மாநாட்டை முன்னிட்டு தபால் திணைக்களத்தினால் 25 ரூபா முத்திரையும் ஞாபகார்த்த தபால் உரையும் வெளியீட்டு வைக்கப்பபட்டன. தபால் உரையின் முதற்பிரதியை

06

## கைதான தமிழக மீனவர் 23 பேருக்கும் 09 ஆம் திகதி வரை விளக்கமறியல்



மன்னார் குறூப் நிருபர்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து நேற்று சனிக்கிழமை (28) இரவு கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 09ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் பதில் நீதவான் நேற்று ஞாயிற்றுக்கிழமை (29) மாலை உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்து வரப்பட்டு தலைமன்னார் கடற்படை முகாமில் மலேரியா பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 23 இந்திய மீனவர்களும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை (29) மாலை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

இதன் போதே விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பதில் நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 09ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## மதுபோதையில் வாகனம் செலுத்திய முன்னாள் DIG கைது

01 ஆம் திகதி வரை விளக்கமறியல்

லோரன்ஸ் செல்வநாயகம்



முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்னவை எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிசை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் வெள்ளவத்தை பொலிசார் அவரை நேற்று முன்தினம் இரவு கைது செய்து நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளனர். அதனையடுத்தே நீதிமன்றம் அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொழும்பு கோட்டைப் பகுதியிலிருந்து தெஹிவளை நோக்கி

06

## மத்தியகிழக்கில் இலங்கையருக்கு அவசரகால உதவிகள் தேவையா?

வெளிவிவகார அமைச்சினால் புதிய தொலைபேசி எண்

கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சின் தூதரக விவகாரப் பிரிவு, இலங்கைப் பிரஜைகளுக்கு வெளிவிவகார அமைச்சை தொடர்புகொள்வதற்கும், மத்திய கிழக்கின் தற்போதைய மோதல் நிலைமை தொடர்பில் ஏதேனும் உதவிகளைப் பெறுவதற்கும் இரண்டு அவசர தொலைபேசி இலக்கங்களை அறுமுகம் செய்துள்ளது.




அவசர தொலைபேசி எண்கள் வருமாறு: 0094711 757 536 மற்றும் 0094711 466 585 என்ற 02 இலக்கங்களை வழங்கியுள்ளது.

இதற்கு மேலதிகமாக வெளிவிவகார அமைச்சின் தூதரக விவகாரப் பிரிவை வழக்கமான அலுவலக நேரங்களில் +94 112 338 837 என்ற தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல்: repatriation.consular@mfa.gov.lk மூலம் தொடர்பு கொள்ளலாம்.

06

புத்தளம் ஆனைமடு பகுதியில்

## திருமண வீட்டில் விருந்துண்ட யுவதி மறுநாள் திடீர் மரணம்

உடற்பாகங்கள் பகுப்பாய்வுக்கு அனுப்பிவைப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



புத்தளத்தில் திருமண நிகழ்வில் கலந்துகொண்ட 20 வயது யுவதியொருவர் திடீரென சுகயீனமடைந்து அதிகாலை உயிரிழந்துள்ளார்.

ஆனமடுவ, தசநாயக்க புரத்தைச் சேர்ந்த அயோத்திய தேசானி (வயது 20) யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளாரென புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, உயிரிழந்த மாணவி கடந்த வருடம் உயர்தரப் பரீட்சை எழுதியவர் எனவும், புத்தளத்திலுள்ள தனது நண்பியின் திருமண நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வியாழக்கிழமை இரவு புத்தளத்துக்கு சென்றுள்ளார். திருமண நிகழ்வில் முழுமையாக கலந்துகொண்ட யுவதி, திருமண விருந்தை சாப்பிட்டதன் பின்னர் தனது உடல்நிலை சரியில்லை எனவும் உடனடியாக தான் வீட்டுக்குச் செல்ல வேண்டுமெனவும் நண்பியிடம் கூறிவிட்டு, அங்கிருந்து முச்சக்கர வண்டி ஒன்றில் தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். இவ்வாறு முச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருக்கும் போது யுவதி திடீரென சுகயீனமடைந்ததுடன், அவர் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட யுவதிக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், அந்த யுவதி வெள்ளிக்கிழமை அதிகாலை 02 மணியளவில் உயிரிழந்துள்ளார். புத்தளம் பகுதிக்கான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் இவ்வாறு தெரிவித்தார்.

உயிரிழந்த யுவதியின் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனையின் பின்னர், சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். உயிரிழந்த மாணவியின் சில உடல் அவயங்கள் இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னரே மரணத்துக்கான காரணத்தை தெரிவிக்க முடியும் எனவும் புத்தளம் பகுதிக்கான திடீர் மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

## இஸ்ரேலில் சுட்டுக் கொல்லப்பட்ட அனுலாவின் இறுதிக்கிரியை இன்று

எஜமானியை காப்பாற்றி உயிர்த் தியாகம் செய்த வீரப்பெண் என இஸ்ரேல் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

இஸ்ரேலுக்கும் காஸாவுக்குமிடையிலான மோதல்களில் உயிரிழந்துள்ள இலங்கை பெண் அனுலா ரத்நாயக்க துப்பாக்கிச் சூடு காரணமாகவே மரணமடைந்துள்ளதாக பிரேத பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவிக்கையில், மேற்படி பெண்ணின் உடலிலிருந்து துப்பாக்கி ரவைகளின் துண்டுகள் சில மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் நாட்டில் வீட்டுப் பணிப் பெண்ணாக பணியாற்றியுள்ள அனுலா ரத்நாயக்க இம் மாதம் 07ஆம் திகதி ஹமாஸ் இயக்கம் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

தாம் பணி புரிந்த வீட்டு உரிமையாளரின் உயிரைக் காப்பாற்றுவதற்கு முற்பட்டபோதே அவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளதாக இஸ்ரேலிலுள்ள இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

மோதல்கள் இடம் பெற்ற போது அவரது வீட்டு உரிமையாளரான எவி மொராடோ என்ற பெண்மணியை வீட்டில் ஒரு அறையில் கட்டிலுக்கு கீழே மறைத்து வைத்துவிட்டு வெளியில் என்ன நடக்கிறது என்பதை கண்காணிப்பதற்காகவே அவர் வீட்டுக்கு வெளியே வந்துள்ளாரென்றும் அதன் போதே அவர் ஹமாஸ் அமைப்பின் துப்பாக்கி சூட்டு தாக்குதலில் உயிரிழந்துள்ளதாக இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளார். அதற்காக அவரை ஒரு வீரப் பெண்மணியாக கௌரவிப்பதற்கு அந்த நாடு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனுலா ரத்நாயக்கவின் பூதவுடல் நேற்று முன் தினம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

துபாயிலிருந்து எப். இசட் 547ஆம் இலக்க விமானத்தில் அவரது பூதவுடல் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட அவரது பூதவுடல் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

பிரேத பரிசோதனையில் அவர் எந்த வித தாக்குதல் அல்லது சித்திரவதைக்கும் உள்ளாக்கப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். அவரது இறுதிக் கிரியைகள் களனி, வேவெல்துவ பொது மயானத்தில் இன்று இடம் பெறவுள்ளதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். களனி, ஈரியவெட்டிய பகுதியைச் சேர்ந்த அனுலா ரத்நாயக்க கடந்த 2019 ஆம் ஆண்டு இஸ்ரேலுக்குப் பணிப் பெண்ணாக சென்றிருந்தார். அவர் இரண்டு பிள்ளைகளின் தாய் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஒலுவிலில் இன்று நூல் வெளியீடு

(கல்முனை நிருபர்)

இலங்கை வானொலி பிறை எப்.எம். அறிவிப்பாளரும் பல்துறைக் கலைஞருமான ஆசிரியர் ஜே.வஹாப்தீன் எழுதிய 'அவனுக்கும் சிறகுகள் உண்டு' சிறுகதை நூல் வெளியீட்டு நிகழ்வு ஒலுவில் ஸஹீட் ஹாஜி இல்லத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 04.00 மணிக்கு ஒலுவில் மீடியா நெட்வேர்க் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

2022 கொடகே ஆக்க இலக்கியப் போட்டியில் சிறந்த சிறுகதைப் பிரதியாக தேர்வு செய்யப்பட்ட இச்சிறுகதை நூல் வெளியீட்டு நிகழ்வில் விசேட உரையினை பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, எழுத்தாளர் உமா வரதராஜன், கவிஞர் சோலைக்கிளி, பிறை எப்.எம். பிரதிப் பணிப்பாளர்

பஷீர் அப்துல் கையூம், பேராசிரியர் எஸ்.எம்.ஐயூப், கலாநிதி ஹனீபா இஸ்மாயில் விரிவுரையாளர் அப்துர் ரஸாக், அதிபர் யூ.கே அப்துர்ரஹீம் மற்றும் இலக்கிய ஆர்வலர், ஏ.எல் முஹிதீன் பாவா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834

தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321


சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 13ஆம் நாள் திங்கட்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் ஆகிர் பிறை 14

### குறள் தரும் சிந்தனை



கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்

உரிய கடமையைச் செய்வதில் சோர்வு காணாமல் எவனொருவன் முயற்சிகளை விடாமல் மேற்கொள்கிறானோ அந்தப் பெருமைக்கு மேலாக வேறொரு பெருமை கிடையாது.

# நாட்டின் முன்னேற்றத்துக்கு ஒன்றுபட்ட பயணம் அவசியம்

சுமார் 445 வருடங்கள் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்திற்கு உள்ளாகி இருந்த இலங்கை சுதந்திரமடைந்து 75 வருடங்கள் கடந்து விட்டன. இருந்தும் இந்நாடு இன்னும் வளர்முக நாடாகவும் மூன்றாம் மண்டல நாடாகவுமே அடையாளப்படுத்தப்படுகிறது. நாட்டின் பொருளாதார நிலைமை அவ்வாறுதான் காணப்படுகிறது.

1948 இல் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் பிடியில் இருந்து இந்நாடு சுதந்திரம் பெற்றுக் கொண்டது. அச்சமயம் இந்நாடு பொருளாதார ரீதியில் ஆசியாவில் ஜப்பானுக்கு அடுத்த இடத்தில் இருந்தது. ஆசியாவின் ஏனைய நாடுகள் எல்லாம் இலங்கைக்கு கீழ்மட்டத்தில்தான் காணப்பட்டன.

அந்த வகையில் கடந்த 75 வருட காலப்பகுதியின் பொருளாதாரப் பயணப் பாதையை எடுத்து நோக்கினால், இலங்கைக்கு கீழ்மட்டத்தில் காணப்பட்ட பெரும்பாலான நாடுகள் இந்நாட்டை விடவும் பல மடங்கு முன்னேற்றமடைந்துள்ளன. இந்நாட்டுக்குக் கீழ்மட்டத்தில் இருந்த பல நாடுகளின் உற்பத்திகளை இறக்குமதி செய்யக்கூடிய நிலைக்கு இலங்கை உள்ளாகியுள்ளது. அந்தளவுக்கு அந்நாடுகளின் உற்பத்திகள் இந்நாட்டுச் சந்தையில் இடம் பிடித்திருக்கின்றன.

இந்நாடு நாலாபுறமும் கடலால் சூழப்பட்ட தீவு நாடாக இருந்த போதிலும், ஆரம்பகாலம் முதல் உணவு பொருளாதார ரீதியில் தன்னிறைவு அடைந்ததாகவே காணப்பட்டுள்ளது. அக்காலப்பகுதியில் எந்தவொரு பொருளுக்காகவும் வெளிநாடுகளில் இந்நாடு தங்கி இருந்ததாகத் தெரியவில்லை.

மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான அனைத்து வளங்களும் இந்நாட்டின் நிலத்திலும் நாட்டைச் சூழவுள்ள கடலிலும் நிறையவே காணப்படுகின்றன. அவற்றைப் பயன்படுத்தி மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்தளவுக்கு இயற்கை வளங்கள் நிறைந்த பூமி இது.

இருந்த போதிலும் ஐரோப்பிய ஏகாதிபத்தியம் இந்நாட்டை கைப்பற்றிய பின்னர் முன்னெடுத்த தவறானதும் பிழையானதுமான கொள்கைகள், அறிமுக வேலைத்திட்டங்கள் என்பன காரணமாக நாட்டின் சுதேச விவசாய பொருளாதார ஒழுங்குகளில் மாற்றங்களும் பாதிப்புக்களும் ஏற்பட்டன. அவை சமூக, பொருளாதார ஒழுங்கமைப்புகளிலும் தாக்கங்களைச் செலுத்தலாயின. அந்தத் தாக்கங்கள் நாடு சுதந்திரம் பெற்றுக்கொண்டதோடு முடிவுக்கு வரவில்லை. மாறாக அவை நீடிக்கலாயின. அதற்கு சுதந்திரத்திற்கு பின்வந்த சில ஆட்சியாளர்கள் முன்னெடுத்த கொள்கைகளும் வேலைத்திட்டங்களும் துணைபுரிந்தன.

இவற்றின் விளைவாக தொடர்ந்தும் வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடாக இருந்து வருகிறது இலங்கை. இப்பின்னடைவுகள் கட்டம்கட்டமாக வளர்ச்சி பெற்றவேயொழிய அவை வீழ்ச்சியடையவில்லை. அதற்கு நாட்டில் முன்னெடுக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் வழிவகை செய்தன. இதன் விளைவாக கடந்த வருடத்தின் (2022) ஆரம்பப்பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கும் நாடு முகம்கொடுத்தது. அதனால் நாடும் மக்களும் எதிர்கொண்ட அசௌகரியங்களும் தாக்கங்களும் பாதிப்புகளும் கொஞ்சநஞ்சமல்ல. அவை வரலாற்றில் அழியாத்தடம் பதித்து விட்டன.

இச்சூழலில் நாட்டின் தலைமையைப் பொறுப்பெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கலானார். அதன் பிரதிபலன்களை குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டு மக்களால் அடைந்து கொள்ள முடிந்துள்ளது. இதன் விளைவாக கடந்த வருடத்தின் ஆரம்ப காலப்பகுதியில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் பாதிப்புகளும் நீங்கியுள்ளன. பொருளாதாரம் மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்திருக்கிறது. ஆனால் பொருளாதார ரீதியில் நாட்டை முழுமையாகக் கட்டியெழுப்ப வேண்டும். அதற்காக அனைத்துத் தரப்பினரும் ஆதரவும் பங்களிப்பும் நல்குவது அவசியம். இதன் முக்கியத்துவமும் உணரப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் கொழும்பு றோயல் கல்லூரியின் பிரதான மண்டபத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற 'ரீட் மாவத்தையின் நூற்றாண்டு விழா' நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'அனைவரும் ஒன்றுபட்டு புதிய நாட்டைக் கட்டியெழுப்புவோம். பாராளுமன்றத்திலும் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படுவோம். கட்சி ஜனநாயக அரசியல் வேறுபாடுகளை அவ்வண்ணமே தக்க வைத்துக்கொண்டு அனைவரும் ஒன்றுபடுவோம்' என அழைப்பு விடுத்துள்ளார்.

இது காலத்திற்கு அவசியமான அழைப்பு என்பதுதான் மக்களின் கருத்தாகும். அதனால் ஜனாதிபதியின் இவ்வழைப்பை சாதமாகப் பயன்படுத்திக் கொண்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அனைவரும் பங்களிக்க வேண்டும் என்பதே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் சாத்தியமாகும் நாள் வருமா?

யாழ் மண்ணில் இருந்து புலிகளால் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதியான இன்று 33 ஆண்டுகளாகின்றன. 33 ஆண்டுகள் கடந்த நிலையிலும்கூட அந்த துரதிர்ஷ்டமான கோரச் சம்பவம் யாழ் முஸ்லிம் மக்களின் மனதில் அழியாத வடுக்களாக என்றுமே நிலைத்திருக்கின்றது.

1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதி துரதிர்ஷ்ட நாள். சுமார் காலை 8 மணியளவில் 1000 இற்கும் மேற்பட்ட ஆயுதமேந்திய புலிகள் யாழ்ப்பாணம் சோனகத் தெருவை சுற்றி வளைத்தனர். முஸ்லிம் மக்கள் செறிவாக வாழும் பகுதிதான் சோனகத் தெரு. புலிகளின் திட்டத்தை அறியாத முஸ்லிம்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் என அனைவரும் வெ ளியேற்றப்பட்டனர்.

அனைவரும் பிறந்த மண்ணை விட்டு புறப்பட்டனர். பெண் புலி உறுப்பினர்கள் பெண்களையும் ஆண் புலி உறுப்பினர்கள் ஆண்களையும் உடல் பரிசோதனை செய்தனர்.

இப்படியான ஓர் அவலநிலை இனி இந்த நாட்டில் யாருக்குமே வரக்கூடாது. சொந்த ஊரில் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு பெருமிதமாக வாழ்ந்துகொண்டிருந்த எம்மை வெளியூர்களில் அகதி எனும் பட்டத்தோடு கூனிக்குறுகி நாலாபுறமும் சிதறி வாழ வைத்துவிட்டார்கள்.

வடக்கில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதற்கும் தமிழ் மக்களுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. அவர்கள் வெளியேற்றப்பட்டமைக்கு புலிகள் மாத்திரமே காரணம். முஸ்லிம்களை வெளியேற்றும்போது தமிழ் மக்களின் முக்கியமானவர்கள், இந்து சமய குருக்கள், கிறிஸ்தவ பாதிரிமார்கள் முஸ்லிம்களின் வெளியேற்றத்தினை தடுத்து நிறுத்த புலிகளிடம் உடனடி அவசரப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியும்கூட அவை தோல்வியிலேயே முடிவடைந்தன.



## சொந்த மண்ணிலிருந்து இடம்பெயர்ந்து 33 ஆண்டுகள் பூர்த்தி



2002 ஆம் ஆண்டு வட்டக்கச்சியில் நடந்த புலிகள் இயக்கத் தலைவர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் பங்குபற்றிய மதியுரைஞரான அன்டன் பாலசிங்கம் முஸ்லிம்களின் வெளியேற்றம் ஒரு துன்பியல் சம்பவம் என்று மட்டும் கூறி இது தொடர்பில் முஸ்லிம் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்திருந்தார்.

காலம் தாழ்த்தியாவது வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியமை தவறு என உணர்ந்தனர் புலிகள். இது எமக்கு ஓரளவு ஆறுதலளித்தது.

முஸ்லிம் மக்களை மீளக் குடியமர்த்த காத்திரமான, அர்த்தபுஷ்டியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

33 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ் முஸ்லிம்களாகிய நாங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் என்று எவ்வாறு ஒன்றாக இருந்தோமோ அந்நிலைமை ஏற்பட வேண்டும்.

தற்போது வடக்கில் முஸ்லிம்கள் தன்மானத்துடனும் சுயமரியாதையுடனும் பாதுகாப்புடனும் எமது சமய, கலாசாரத்துடனும் வாழ நல்ல சூழல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் காத்திரமான, அர்த்தபுஷ்டியான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டுகிறோம்.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசியல் பேதமின்றி ஒற்றுமையுடன் செயற்பட்டு முஸ்லிம்களின் மீள்குடியேற்ற திட்டத்தில் கூடிய கவனம் எடுக்குமாறு வேண்டுகிறோம்.

யாழ் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 33 ஆண்டுகள் கடந்த நிலையிலும் மீள்குடியேற்ற கனவு நனவாக பிரார்த்திக்கிறோம்.

கலாபூஷணம் **பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# காஸாவுக்காக 120 நாடுகளுடன் இணைந்து வாக்களித்த இலங்கை



காஸாவில் உடனடி போர்நிறுத்தத்தை வலியுறுத்தும் தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. 193 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா. சபையில் 'காஸாவில் உடனடியானதும், நீடித்து நிலைக்கக்கூடியதும் நிலைபேறானதுமான மனிதாபிமான போர்நிறுத்தம்' என்ற தொனிப்பொருளில் ஜோர்தான் கொண்டு இப்பிரேரணைக்கு இலங்கை உட்பட 120 நாடுகள் ஆதரவாக வாக்களித்து நிறைவேற்றியுள்ளன. இப்பிரேரணைக்கு அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட 14 நாடுகள் எதிராக வாக்களித்ததோடு 45 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை 27 ஆம் திகதி ஐ.நா. பொதுச்சபைக்கு கொண்டுவரப்பட்ட இப்பிரேரணை 120 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளமை உலகின் விஷேட அவதானத்தையும் வரவேற்பையும் பெற்றுள்ளது. ஏனெனில் இம்மாதம் (ஒக்டோபர்) 07 ஆம் திகதி ஹமாஸ், இஸ்ரேல் மீது மேற்கொண்ட தாக்குதலோடு ஆரம்பமான யுத்தத்தினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யுத்தத்தை உடனடியாக நிறுத்தி அமைதி வழிக்குத் திரும்புமாறு உலக நாடுகளின் தலைவர்கள் கோரி வருகின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மன்னாரில் நடைபெற்ற தேசிய மீலாதுன் நபி விழாவில் உரையாற்றும் போது, 'இஸ்ரேல்_ஹமாஸ் மோதலினால் ப லஸ்தீனின் சாதாரண மக்கள் பா திக்கப்படுவதை அங்கீகரிக்க முடியாது. மோதல்களை நிறுத்தி அமைதியை நிலைநாட்ட ஐக்கிய நாடுகள் சபை முன்னெ டுக்கும் வேலைத்திட்டத்திற்கு இலங்கை பூரண ஆதரவை வழங்கும். அந்த மக்களின் துயரத்தை நாங்கள் அங்கீகரிக்க முடியாது. அவர்களுக்குத் தேவையான உணவுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். உணவு எகிப்திலிருந்து வழங்கப்படுகின்றது. இஸ்ரேல் பகுதியில் இருந்தும் உணவு வழங்கப்பட வேண்டும். மேலும் தண்ணீர் கொடுக்க வேண்டும். இப்போராட்டத்தில் சாதாரண பலஸ்தீன மக்கள் பலியாகிவிடக் கூடாது. எனவே அதனை தீர்க்க எகிப்து உள்ளிட்ட அரபு நாடுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. மற்ற நாடுகளும் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளன. குறிப்பாக இப்பிரச்சினையைத் தீர்த்து அந்தப் பிரதேசங்களில் அமைதியை ஏற்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகள் சபை பொதுச்செயலாளரின் செயற்பாடுகளுக்கு, எமது பூரண ஆதரவை வழங்குவோம். பலஸ்தீன் என்றொரு நாடு உருவாக வேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு இந்த யுத்தத்தை நிறுத்தக் கோரி உலகின் பல பகுதிகளிலும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் இடம்பெற்ற வண்ணமுள்ளன. இவ்வாறான நிலையில் ரஷ்யா, 15 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ. நா. பாதுகாப்பு சபையில் 'மனிதாபிமான யுத்தநிறுத்தம், அனைத்து பணயக் கைதிகளும் விடுவித்தல், நிவாரண பொருட்களை வழங்குதல், மக்களின் பாதுகாப்பான வெளியேற்றம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கடந்த 16 ஆம் திகதி பிரேரணையொன்றைக் கொண்டு வந்த போதிலும் நிறைவேற்றப்படவில்லை, அதனைத் தொடர்ந்து அமெரிக்கா, இஸ்ரேல் தன்னைப் பாதுகாத்துப் கொள்ள உரிமை கொண்டுள்ளது' எனக்குறிப்பிட்டு கடந்த 18 ஆம் திகதி கொண்டு வந்த பிரேரணையை சீனாவும் ரஷ்யாவும் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி செல்லுபடியற்றதாக்கின. அதே தினம் பிரேசில் 'காஸாவில் மனிதாபிமான யுத்த நிறுத்தம்' என்ற தொனிப்பொருளில் கொண்டு வந்த பிரேரணையை அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி செல்லுபடியற்றதாக்கியது.

இவ்வாறான சூழலில்தான் ஐ.நா. பொதுச்சபையில் ஜோர்தான் கொண்டு வந்த தீர்மானம் இலங்கை உட்பட120 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்பிரேரணைக்கு ஆதரவளித்ததன் ஊடாக பலஸ்தீன் விவகாரத்தில் தமது நிலைப்பாட்டை மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தியுள்ள இலங்கை, இவ்விவகாரத்தில் உலக நாடுகளுடன் இணைந்திருப்பதையும் வெளிப்படுத்தியுள்ளது.

அதேநேரம் இஸ்ரேல் ஹமாஸ்_ யுத்தம் ஆரம்பமானதும் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் எனும் இரு நாட்டுக் கொள்கைக்கான இலங்கையின் நீண்டகால ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது நடாத்திய தாக்குதலுக்கு இலங்கை அரசாங்கம் கண்டனம் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அத்தோடு கடந்த 13 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற இந்து சமுத்திரத்தில் நிபுணத்துவம் பெற்ற சர்வதேச ஆராய்ச்சி நிறுவனமான Geopolitical Cartographer ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி, 'இஸ்ரேல் ஹமாஸ் மோதலுக்கு தீர்வு காண உலகளாவிய ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

மேலும் தற்போதைய அரசாங்கத்தின் பிரதான கட்சியாக விளங்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பிலுள்ள பலஸ்தீன தூதரகத்திற்கு நேரில் சென்று பலஸ்தீன மக்களுக்கான தமது ஒத்துழைப்பை கடந்த 16 ஆம் திகதி பலஸ்தீன தூதுவரிடம் தெரிவித்தார். அத்தோடு பலஸ்தீன மக்கள் முகம்கொடுத்துள்ள நெருக்கடிகள் குறித்த சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதான விவாதமும் கடந்த 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

கடந்த ஏழு எட்டு தசாப்தங்களாக நீடித்துவரும் பலஸ்தீன்_ இஸ்ரேல் பிரச்சினைக்கு இரு நாட்டுக் கொள்கையே சரியான தீர்வு என்ற கொள்கையை இலங்கை கடைப்பிடித்து வருகின்றது.

அந்த வகையில் காஸா யுத்த நிறுத்தம் குறித்த ஜோர்தானின் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்து உரையாற்றிய இலங்கையின் ஐ. நா.வுக்கான நிரந்தர பிரதிநிதி மொஹான் பீரிஸ், 'யுத்தத்தை நிறுத்துதல், பணயக்கைதிகளை விடுவித்தல் மற்றும் தேவைப்படுபவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குதல் ஆகியவை இந்த காலத்தின் முக்கிய தேவையாகும். ஜோர்தான் முன்வைத்த தீர்மானத்தின் சாராம்சம் இந்த தேவைகளை போதுமான அளவு கொண்டுள்ளது. அதேநேரம் சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் என்பன மதிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் இது வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை கடந்த ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேலில் மக்கள் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் உள்ளிட்ட பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் அதன் வெளிப்பாடுகளையும் இலங்கை கண்டிக்கிறது. ஆயினும், ஒக்டோபர் 7 ஆம் திகதி இத்தாக்குதல் மற்றும் அதன் பின்னர் வன்முறை அதிகரித்துள்ளமை குறித்து ஜோர்தானிய தீர்மானம் கவனத்தில் கொண்டுள்ளது. அதனால் பலஸ்தீனிய மற்றும் இஸ்ரேலிய குடிமக்களுக்கு எதிரான அனைத்து வன்முறைச் செயல்களையும் அது கண்டிக்கிறது, இதில் அனைத்து பயங்கரவாத செயல்கள் மற்றும் கண்மூடித்தனமான தாக்குதல்கள், அடங்லாக ஆத்திரமூட்டும் அனைத்து செயல்களும் அழிவுகளும் தூண்டுதல்களும் அடங்கும்.

அதனால் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து குடிமக்களையும் உடனடியாகவும் நிபந்தனையின்றியும் விடுவிக்க அழைப்பு விடுக்கிறது. சர்வதேச சட்டத்திற்கு இணங்க அவர்களின் பாதுகாப்பு, நல்வாழ்வு மற்றும் மனிதப் பண்புகளை மதித்து பேணுமாறு கோருகிறது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே பலஸ்தீன் இஸ்ரேல் விவகாரத்தில் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள இலங்கை உலக நாடுகளுடன் இணைந்து செயற்படுவதையும் ஐ.நா. சபையிலும் வெளிப்படுத்தியுள்ளது. அதனால் அமைதி சமாதானத்தை உண்மையாக விரும்பும் ஐ.நா. உட்பட நாடுகளும் தலைவர்களும் விடுக்கும் அழைப்பும் கோரிக்கையும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பலஸ்தீனில் அமைதி, சமாதானம் உருவாக வேண்டும். அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும். அதுவே அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பாகும்.



**மர்லின் மரிக்கார்...**

# திருகோணமலை ரோட்டரி கழகத்தால் அனுஷ்டிக்கப்பட்ட உலக போலியோ தினம்

திருகோணமலை ரோட்டரி கழகம் சார்பில் 'உலக போலியோ தினம் 2023' திருகோணமலை மாதுமை அம்பாள் தமிழ் வித்தியாலய மாணவர்கள் மத்தியில் நினைவுகூரப்பட்டது.

2023 ஆம் ஆண்டின் உலக போலியோ தினத்தின் கருப்பொருள் 'தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆரோக்கியமான எதிர்காலம்' என்பதாகும்.

உலக போலியோ நிலைமை மற்றும் சர்வதேச ரோட்டரி கழகத்தின் போலியோவை உலகில் இருந்து நீக்குவதற்கான செயல் பற்றிய முக்கிய விபரங்களை டொக்டர் ஞானகுணாளன் வழங்கினார். அத்துடன் இலங்கையில் இருந்து எவ்வாறு போலியோ நோய் ஒழிக்கப்பட்டது என்ற விபரத்தையும் அவர் எடுத்துக் கூறினார்.



சர்வதேச ரோட்டரி கழகத்தின் போலியோவை உலகில் இருந்து நீக்குவதற்கான செயற்பாடுகள் பற்றிய முக்கிய விபரங்களை மாணவர்கள் கேட்டு அறிந்து கொண்டார்கள். மேலும், ரோட்டரி தலைவர் டொக்டர் சௌந்தரராஜன் நூலகத்திற்கு புத்தகங்களை வழங்கினார்.

**தம்பலகாமம் குறூப் நிருபர்...**

## மானுடவியல்



139

சைவ உலகில் சிவனடியார்களை வணக்கத்துக்குரியவர்களாக்கிய சிறப்பில் திருத்தொண்டர் தொகைக்கு உயரிய சிறப்புண்டு. சுந்தரருக்குப் பின்னே தோன்றிய நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி பாடுவதற்கும், சேக்கிழார் பெரிய புராணம் பாடுவதற்கும் பெருந்துணை புரிந்த நூல் திருத்தொண்டர் தொகையாகும்.

**தேவாரங்களை அருளல்**

தேவாரமுதலிகள் என அழைக்கப்படுகின்ற மூவருள் இறுதியாக அமைபவர் இவர். இவர் இறைவனைத் தோழனாகக் கொண்டு தனது லௌகீக வாழ்வின் தேவைகளுக்கெல்லாம் இறைவனைத் துணை போகக் கேட்டு யோக மார்க்கத்தில் வாழ்ந்து யோகநெறி தழைக்க வழிவகுத்தவராவார். இவர் பாடிய தேவாரங்களில் நமக்கு கிடைத்துள்ள தேவாரங்களின் தொகை 1026 ஆகும். ஆயினும் சேக்கிழாரது கருத்துப்படி இவர் 114 தலங்களுக்கு சென்று பதிகங்கள் பாடியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் 83 தலங்கள் சார்பான பதிகங்களே தற்போது கிடைத்துள்ளன. ஆலயங்கள் சார்பான பதிகங்களை விட சில பொதுவான பதிகங்களும் காணப்படுகின்றன. திருத்தொண்டர் தொகை, நாட்டுத்தொகை, ஊர்த்தொகை என்பன அவற்றுள் சிலவாகும் இவருடைய பாடல்களைத் 'திருப்பாட்டு' எனவும் அழைப்பர்.

**சமூகப் பணிகள்**




சுந்தரமூர்த்தி நாயனாரின் சமயப்பணிகளைப் போன்று அவரது சமூகப்பணிகளும் சைவசமய வளர்ச்சிக்கு வலுவூட்டுவனவாக அமைந்துள்ளன.

(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# கேதார கௌரி விரதம் அருளும் குடும்ப ஒற்றுமை




கேதார கௌரி விரதம் என்பது சிவபெருமானை நினைத்து ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்படும் முக்கியமான விரதம் ஆகும்.

கேதார கௌரி விரதம் மேற்கொண்டே பார்வதி தேவி சிவபெருமானின் இடப்பாகத்தைப் பெற்றார். அதனால் இறைவன் அர்த்தநாரீஸ்வரர் ஆனார் என்று கூறப்படுகிறது.

இது ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாத வளர்பிறையான தசமி (விஜய தசமி) முதல் ஐப்பசி மாதம் தீபாவளி அமாவாசை வரை மொத்தம் 21 நாட்கள் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இவ்விரத்தினை ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி எல்லோரும், எல்லா வயதினரும் கடைப்பிடிக்கின்றனர்.

இவ்விரதத்தின் போது இறைவனுக்கு பிரசாதமாக அதிரசம் எனப்படும் பச்சரிசி மாவு, வெல்லம் கலந்து தயாரிக்கப்படும் பதார்த்தம் பிரதானமாகப் படைக்கப்படுகிறது.

வழிபாட்டின்போது நோன்புக் கயிறு வைத்து வழிபட்டு இறுதியில் நோன்பிருக்கும் எல்லோருடைய கைகளிலும் அணியப்படுகிறது. இவ்வழிபாடு வீடுகளிலும், கோவில்களிலும் மேற்கொள்ளப்படுகிறது.

வழிபாட்டின்போது உணவருந்தாமல் விரத முறை பின்பற்றப்படுகிறது.

இவ்விரத முறையை மேற்கொள்வதால் கணவன் மனைவி ஒற்றுமையுடன் வளமையான வாழ்க்கை வாழ்வார்கள் என்றும், நற்புத்திரப்பேற்றுடன் இணைபிரியாத சுக வாழ்வு கிடைக்கும் என்றும், நல்ல எண்ணங்கள் ஈடேறும் என்றும் கருதப்படுகிறது.

**கேதார கௌரி விரத மகிமை**

கேதார கௌரி விரதத்தைப் பின்பற்றியே மகாவிஷ்ணு வைகுண்டத்தைப் பெற்றார் எனவும், பிரம்ம தேவன் படைப்புத் தொழிலை பெற்றார் எனவும், தேவேந்திரன் பொன்னுலகை ஆண்டு வெள்ளை யானையை பெற்றார் எனவும் கருதப்படுகிறது.

திருமணமான பெண்கள் கணவரின் தீர்க்க ஆயுள் வேண்டியும், தம்பதி ஒற்றுமைக்காகவும் குடும்ப சுபிட்சம் வேண்டியும் இவ்விரத முறையினை மேற்கொள்கின்றனர்.

கன்னிப்பெண்கள் நல்ல கணவர், நிறைந்த திருமண வாழ்க்கை, நற்புத்திரர்கள் வேண்டி இவ்விரத முறையினை மேற்கொள்கின்றனர்.

இவ்விரதத்தினால் கணவன் மனைவி ஒற்றுமை, நல்ல வளமான திருமண வாழ்க்கை நற்புத்திரர்கள், நல்ல எண்ணங்கள் ஈடேறுதல் ஆகியவை ஏற்படுவதாகக் கருதப்படுகிறது.

நாமும் இவ்விரத முறையை மேற்கொண்டு குடும்ப ஒற்றுமையுடன் இறையருளால் இம்மை மறுமைகளில் சுக வாழ்வு வாழ்வோம்.

**கேதார கௌரி விரதம் பெயர் காரணம்**

கேதாரம் என்ற சொல்லுக்கு இமயமலைப் பகுதியைச் சார்ந்த வயல் பகுதி என்பது பொருளாகும்.

கௌரி எனப் போற்றப்படும் பார்வதி அம்மை கேதாரப் பகுதியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை நினைத்து மேற்கொண்ட விரதமாயின் இது கேதார கௌரி விரதம் என அழைக்கப்படுகிறது.

இவ்விரத முறையினைப் பின்பற்றி உமாதேவியார் சிவனுடன் ஐக்கியமானார் என்பதே இதன் சிறப்பாகும்.

இவ்விரதம் கௌரி நோன்பு, அம்மன் விரதம், கௌரி காப்பு நோன்பு, நோன்பு என பல பெயர்களில் வழங்கப்படுகிறது.

**விரதம் கடைப்பிடிக்கும் முறை**

இவ்விரத முறையில் வழிபாடானது வீடுகளிலோ அல்லது கோவில்களிலோ மேற்கொள்ளப்படுகிறது. மொத்தம் 21 நாட்கள் இவ்விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது.

முதலில் கலசத்தில் தேங்காய் வைத்து கும்பம் தயார் செய்யப்படுகிறது.

பின் மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைக்கப்படுகிறார். வழிபாட்டில் பூக்கள், அதிரசம், அப்பம், சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, நோன்புக் கயிறு ஆகியவை படைக்கப்படுகின்றன.

நோன்புக் கயிறானது 21 இழைகளால் பின்னப்பட்டுள்ளது. முதலில் விநாயகருக்கு தீப தூபம் காட்டி வணங்கப்படுகிறது.

பின் கும்பத்தில் அம்மையப்பரை ஆவாகனம் செய்து தீப தூபம் காட்டி சிவன் மற்றும் சக்திக்கான பாடல்கள் பாடப்பட்டு வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது.

வழிபாட்டின் ஒவ்வொரு நாளும் நோன்பு கயிற்றில் முடிச்சு ஒன்று போடப்படுகிறது.

விரத நாட்களில் பகலில் உணவு உண்ணாமல் இரவில் படையலிடப்பட்ட அதிரசம் மட்டும் உட்கொள்ளப்படுகிறது. இவ்வாறாக 21 நாட்கள் விரதம் பின்பற்றபடுகிறது.

21ம் நாளான அமாவாசை அன்று முழுவதும் உணவு உண்ணாமல் வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. அன்றைய தினம் பிரதோஷ வேளைக்கு பின் நோன்புக் கயிறு கட்டப்படுகிறது.

நோன்புக் கயிறு முழங்கைக்கும் தோளுக்கும் இடைப்பட்டப்பகுதியில் அணியப்படுகிறது.

ஆண்கள் வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் நோன்புக் கயிற்றினை அணிகின்றனர்.

முந்தைய வருடம் கட்டப்பட்ட நோன்புக் கயிறு பூஜையின் மறுநாள் நீர்நிலைகளில் விடப்படுகிறது. தற்போது இவ்விரதம் 9 அல்லது 7 அல்லது 5 அல்லது 3 நாட்கள் அல்லது அமாவாசை அன்று மட்டும் கடைப்பிடிக்கப்படுகிறது.




உடப்பு குறூப் நிருபர் புத்தளம் தெற்குக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட முந்தல் தமிழ் வித்தியாலயத்தின் விஜயதசமி பூஜைகள் செவ்வாய்க்கிழமை (24) பாடசாலையில் இடம்பெற்றது.

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 60



சுகபோக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தால், முக்திக்கான வாழ்க்கை எட்டாக் கனியாகிவிடும். பசிக்கு உணவு, உடம்பை மறைப்பதற்குத் துணி, என்று வாழ்ந்து சுகபோகங்களை துறந்தால், முக்திக்கான வாழ்க்கை நம் எதிரில் நிற்கும். ஆண்டவன் உலகை படைத்த நாள் முதல், இன்றளவும் ஒவ்வொரு மேன்மையானவரின் சரித்திரம் இதுவே. சுகபோகங்களை துறந்து, தியாக வாழ்க்கையை மேற்கொள்வது மேன்மையை அடைவதற்கான வழியாகும். ஆத்ம முன்னேற்றத்திற்கு இது ஒன்றே சிறந்த வழியாகும்.

தீர்த்தயாத்திரை மூலமோ, விரதம் இருப்பதாலோ, யோகப் பயிற்சி, மூச்சு பயிற்சி செய்வதாலோ, மனம், உடல் ஆகியவை வலுப் பெறுமே தவிர, கடவுளை அடைய முடியாது. கடவுளை வயப்படுத்த, மன உறுதி, மனக்கட்டுப்பாடுடன் கூடிய, செயலில் வெற்றி கொள்ளத் தக்க, சாதனாவின் மூலம் மட்டுமே இயலும். தனிமனித வாழ்வில் பிறருக்கு முன் உதாரணமாக வாழ்ந்தவர்கள் போற்றத் தகுந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் மூலமே உலகத்தில் மக்கள் நலம் உண்டாகியுள்ளது. எனவே நாம் மன பலம் படைத்தவர்களாகவும் ஆத்ம பலம் படைத்தவர்களாகவும் மாறுவோமாக.

இன்றைய உலகம் மூடத்தனம் மற்றும் மூட நம்பிக்கை என்னும் சங்கிலிகளால் இறுக்கப்பட்டுள்ளது. இச்சங்கிலியில் கட்டுப்பட்டு கிடக்கும் மாந்தரை நினைத்தால் என் மனம் துடிக்கிறது. ஒவ்வொரு மனிதனின் துன்பத்திற்கும், சமுதாயத்தின் இந்த அவல நிலைக்கும் மக்களின் மூட நம்பிக்கை தான் காரணமென, கிழக்கில் உதிக்கும் சூரியன் போல் தெள்ளத் தெளிவாக எனக்குத் தெரிகிறது.

உலகில் எங்கிருந்து ஒளி பிறக்கும்? தியாகத்தினால் மட்டுமே இது நிறைவேறும். தியாக உள்ளம் கொண்ட வீரன் மற்றவர்க்கு முன்னுதாரணமாய்த் திகழ்கிறான். பின்னர் பலரும் அவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகின்றனர். வெளிச்சத்தை உருவாக்கும் இந்த தியாக வீரர்களின் செயல், ஆதிகாலத்திலிருந்தே நடந்து வருகிறது. இப்பூவுலகில் பற்பல வீரர்கள், உத்தமர்கள், புனிதர்கள், மஹாத்மாக்கள் தோன்றியுள்ளனர்.

அவர்கள் யாவரும் தியாக வாழ்க்கை மேற்கொண்டு வாழ்ந்து காட்டினர். நாம் நம் சுகபோகங்ளை துறந்தால் தான், மற்றவர்களுக்கு சுகங்களை நாம் வழங்க முடியும். அதற்கான வழியைக் காட்ட முடியும். உண்மையான அன்பு எல்லையில்லா கருணை கொண்ட இதயங்கள் துணிச்சலுடன் செயலாற்றுபவர்கள், எந்தளவிற்கு இன்றைய நாளில் தேவைப் படுகிறதோ, அந்தளவிற்கு வேறு எந்த காலத்திலும் தேவைப்பட்டதில்லை.




## உலகமே சிவசக்தி மயம்

➢ சக்தி வழிபாடு என்பது மிக, மிக தொன்மையானது. ஆதி காலத்தில் இந்த வழிபாட்டை 'தாய்மை வழிபாடு" என்றே கூறினார்கள்.

➢ உலகின் முதல் வழிபாடாக சக்தி வழிபாடு கருதப்படுகிறது. ஆதி சக்தி என்றால் "முதல் சக்தி" என்று அர்த்தமாகும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் வசிக்கின்ற தொடக்கநிலை சக்தியாகும். இந்த சக்தி பெண்மை வடிவமாகும்.

சக்தி என்பது அண்டசராசத்தில் உள்ள உயிரனங்களுக்கு உயிர் கொடுக்கும் ஒரு கருத்தமைவு அல்லது மனிதப் பண்புகளை மனிதர் அல்லாதவைகளுக்கு ஏற்றிச் சொல்லும் தெய்வீகம்



கம்பளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவிலில் இடம்பெற்ற நவராத்திரி நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் டி.வசந்தகுமார்

## சிவபெருமான்



சிவம் என்றும் சிவபெருமான் என்றும் பரவலாக அழைக்கப்பெறும் இவருக்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெயர்கள் இருக்கின்றன. இவர் பிறப்பும் இறப்பும் இல்லாதவர் என்றும், இவரே மும்மூர்த்திகளையும், தேவர்களையும், அசுரர்களையும் உலகினையும், உலக உயிர்களையும் தோற்றுவிப்பதாகவும், பிரளயக் காலத்தில் அனைவற்றையும் அழித்துத் தன்னுள் ஒடுக்கிச் சிவன் மட்டும் நிலையாக இருப்பதாகச் சைவ சமய இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. இந்து சமய புராணங்களிலும், இந்து தொன்மவியல் கதைகளிலும் மும்மூர்த்திகளில் அழிக்கும் கடவுளான ருத்திரன் இவரின் அம்சமாக கருதப்படுகிறார்.

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

19886.திருநாவுக்கரசரின் இயற்பெயர் தெரியுமா?
மருள் நீக்கியார்

19887. சுப்ரபாதம் என்பதன் பொருள் தெரியுமா?
நல்ல காலை வேளை

19888. பிரகலாதனுக்கு தாயின் கருவிலேயே உபதேசித்தவர் ?
நாரதர்.

19889. கூடற்கலாப மயில் என அழைக்கப்படும் அம்பிகை யார்?
மதுரை மீனாட்சி அம்மன்.

19890. ஆழ்வார்களில் அமர்ந்த படி காட்சி அளிப்பவர்.
நம்மாழ்வார்.

19891.விஸ்வாமித்திரருக்கு ராஜரிஷி பட்டம் தந்தவர்....
பிரம்மா

19892.தசரதன் என்பதன் பொருள் தெரியுமா?
பத்து திசைகளிலும் தேர் செலுத்துபவன்.

19893. ஆதிசேஷனின் அம்சமாக பிறந்த ராமனின் சகோதரர் யார்?
லட்சுமணன்.

19894.சீதையின் இன்னொரு பெயர் என்ன தெரியுமா?
வைதேகி.

19895. சிவ வடிவங்களில் வசீகர மூர்த்தியாக திகழ்பவர் யார்? பிச்சாடனர்

19896. ஸ்ரீ ருத்ரம் ஜெபித்து சிவனருள் பெற்றவர்
ருத்ரபசுபதி நாயனார்.

19897. பெரியபுராணத்திற்கு சேக்கிழார் இட்ட பெயர் எது?
திருத்தொண்டர்புராணம்.

19898. கடைவிரித்தேன் கொள்வாரில்லை என்று கூறியவர் யார்?
வள்ளலார்.

19899. தாமரையின் பெயரால் குறிக்கப்படும் சங்கரரின் சீடர்?
பத்ம பாதர்.

## எம்.பிக்கள் குற்றமிழைத்தால்...

உறுதிப்படுத்துதலுக்கான ஒழுக்கநெறி கோவையொன்று உருவாக்கப்படவேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை முன்வைத்திருந்தார்.

மேற்படி அதிகாரசபையை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலம் தொடர்பில் சபாநாயகர் மற்றும் கட்சித் தலைவர்களது கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து சமர்ப்பித்திருந்த யோசனைக்கு கடந்த 24 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது ஊழல், மோசடிகள் மற்றும் திருட்டுக்கள் தொடர்பில் குற்றவாளிகளாகக் காணப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தண்டனை வழங்குவதற்கு சட்டமொன்று கிடையாதென்றும் அவ்வாறான தருணங்களில் இரண்டு வார காலம் அல்லது மூன்று வார காலம் பாராளுமன்ற அமர்வு தடை மட்டுமே விதிக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த அதிகார சபையை ஸ்தாபிப்பதற்காக அரசியல் கட்சிகளின் தலைவர்களது கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர், இந்த புதிய சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதித் தேவை தொடர்பில் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் அறிக்கையொன்று தயாரிக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

அந்த சந்தர்ப்பத்தில் ஏதாவது அதில் பொருத்தமின்மை காணப்படின் அதன்போது சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரின் தகவல்களை வெளியிட வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் சட்ட மூலப் பிரிவின் மூலம் புதிய அதிகார சபையை உருவாக்குவதற்கான சட்ட மூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

புதிய அதிகார சபையை ஸ்தாபிப்பது தொடர்பில் கருத்துக்கள் மற்றும் யோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த அதிகார சபையின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வசதிகளை தீர்மானிப்பது மற்றும் மீளாய்வுசெய்வது அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் ஒழுக்கநெறிக் கோவையை நடைமுறைப்படுத்துவது மற்றும் கண்காணிப்பது ஆகிய நடவடிக்கைகள் இடம்பெறும்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்க நெறி கோவையை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் பாராளுமன்ற அனுமதியின் கீழ் ஒழுக்க தர்மம் மற்றும் சிறப்புரிமை தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழு மூலம் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கான பொறுப்பும் அந்த அதிகார சபைக்கு வழங்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் திருத்தம்: அடுத்தவாரம்...

பாராளுமன்ற வாரத்தில் விவாதிக்கப்பட உள்ளன. எதிர்வரும் வாரம் நவம்பர் 07ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை இவ்விவாதம் நடைபெறவுள்ளதுடன், இது தொடர்பான நிகழ்ச்சி நிரல் கடந்த 19ஆம் திகதி கூடிய பாராளுமன்ற விவகாரக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம், எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் பாராளுமன்ற வாரத்தின் இறுதி நாளான 10ஆம் திகதி பரிசீலிக்கப்படவுள்ளதுடன், பாராளுமன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதமும் மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதமும் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு அல்லது வரவு செலவுத் திட்ட உரையை நவம்பர் 13ஆம் திகதி திங்கட்கிழமை நடத்துவதற்கு பாராளுமன்ற விவகாரக் குழு தீர்மானித்துள்ளது.

இதன்படி, அதன் இரண்டாம் வாசிப்புக்கான விவாதம் நவம்பர் 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை ஒரு வார காலத்துக்கு நடைபெறவுள்ளதுடன், நவம்பர் 21ஆம் திகதி மாலை 06.00 மணிக்கு வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் அல்லது குழுநிலை விவாதம் நவம்பர் 22ஆம் திகதி முதல் டிசம்பர் 13ஆம் திகதி வரை 19 நாட்களுக்கு நடைபெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மஸ்கெலியாவில் மாயமான...

தெரிவித்துள்ளனர். மஸ்கெலியாவில் மூன்று மாணவர்கள் காணாமல் போனாதாக பொலிஸ் நிலையத்தில் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

மஸ்கெலியா, சாமிமலை பகுதியிலுள்ள தோட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் மூவரையே கடந்த 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் முதல் காணவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாமிமலை 200 ஏக்கர் தோட்டத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன் மனோஜ், சாமிமலை கொழும்பு தோட்டத்தைச் சேர்ந்த காளிமுத்து புலேந்திரன், சாமிமலை ஸ்ரஸ்பி தோட்ட தெய்வகந்தை பிரிவைச் சேர்ந்த பி.துஷாந்தன் என்ற 15 வயதுடைய மூவரே காணாமல் போயிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மூவரும் நீராடச் சென்ற பின் வீடுகளுக்குத் திரும்பவில்லையென அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களைத் தேடும் பணியை பெற்றோர், உறவினர்கள் மேற்கொண்டு வந்தனர்.

மூவரும் மட்டக்களப்பு பகுதிக்கு வேலை தேடிக் கொண்டு சென்றுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

சிறுவர்களின் பெற்றோர் மட்டக்களப்பு பகுதிக்குச் சென்று அவர்களை அழைத்து வந்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

## நீண்டகால நெருக்கடிக்கு தீர்வு...

படகுகளை கரைசேர்ப்பதிலும், தரித்து நின்று பயணிகளை ஏற்றுவதிலும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக படகு உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அதன் போது இணைத்தலைவர்களில் ஒருவரான கடற்றொழில் அமைச்சர், தான் நேரில் வந்து அது தொடர்பில் ஆராய்வதாகக் கூறி இருந்தார்.

இதனையடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு நேரில் சென்ற அமைச்சர் நெடுந்தீவு மற்றும் நயினாதீவுக்கிடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் படகு உரிமையாளர்கள், கடற்படையினர் மற்றும் துறைசார் அதிகாரிகளை குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு நேரில் அழைத்து எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சு நடத்தினார்.

படகுகளுக்கு இறங்குதுறையில் இடம் ஒதுக்குதல், தரித்து நிற்கும் நேரம், சேவையில் ஈடுபடுவதற்கான நேர அட்டவணை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பேசப்பட்டு தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

## காசா பள்ளத்தாக்கில் இலங்கையர்...

தஞ்சமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால் எகிப்துக்குச் செல்லும் ரபா எல்லை தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளதால் அவர்களை வெளியேற்ற முடியாத நிலையில் இலங்கை அதிகாரிகள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. "எகிப்துக்குச் செல்வதற்கு இதுவே ஒரே வழி. இஸ்ரேலியப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத ஒரேவழியாக இது காணப்படுகின்றது. அங்குள்ள இலங்கையர் தற்போது பாதுகாப்பாக உள்ளனர். எனினும் மோசமான நிலையில் வாழ்கின்றனர்" என பாலஸ்தீனத்துக்கான இலங்கை தூதுவர் நாவலகே பெனெட் குரே தெரிவித்துள்ளார். "அந்தக் குடும்பங்களுடன் ரமல்லாவிலுள்ள தூதரகம் நாளாந்த தொடர்புகளைப் பேணுகின்றது. இலங்கையரில் சிலர் அகதிமுகாமில் தஞ்சமடைந்துள்ளனர். ஒரு குடும்பம் கிறிஸ்தவ தேவாலயமொன்றில் தஞ்சமடைந்துள்ளது. அவர்கள் பல நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். அருகில் குண்டுவீச்சுகள் இடம்பெறுகின்றன. உணவு, மருந்து, குடிநீர் போன்றவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. நாங்கள் அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளோம்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஜப்பானின் தற்காப்புப்படை...

திருகோணமலை துறைமுகத்தை நேற்றுமுன்தினம் (28) வந்தடைந்த ஜப்பானிய கப்பலை இலங்கை கடற்படையினர் கடற்படை சம்பிரதாய முறைப்படி வரவேற்றனர்.

150.5 மீற்றர் நீளமுள்ள இந்தக் கப்பலில் அதன் தளபதி கொமாண்டர் ஹிசாடோ சோடோகாவாவாலின் தலைமையில் 172 பேர் கொண்ட குழுவினர் சேவையாற்றுகின்றனர்.

கிழக்கு கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் சுரேஷ் டி சில்வாவுக்கும் ஜப்பானிய கப்பலின்தளபதி கொமாண்டர்ஹிசாடோ சோடோகாவாவுக்கும் இடையே சிநேகபூர்வ சந்திப்பு ஒன்றும் திருகோணமலையில் நடைபெற்றது.

கப்பல் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில், இரு கடற்படைகளுக்கு இடையே ஒத்துழைப்பையும் நல்லெண்ணத்தையும் மேலும் மேம்படுத்தும் வகையில் இலங்கை கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பல நிகழ்ச்சிகளில் பணியாளர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்த கப்பல் நாளை 31 ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகும்...

மேற்படி வெள்ளப்பெருக்கினால் பாதிப்படையும் பிரதேசங்கள் தொடர்பில் உரிய கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தப் பாதிப்புகளை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறுகிய, மத்திய மற்றும் நீண்டகால வேலைத்திட்டங்களாக இந்த செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை அவ்வாறு வெள்ளத்தினால் மூழ்கும் பிரதேசங்களில் வசிக்கும் மக்களை அங்கிருந்து அகற்றி, அவர்களுக்கு வேறு புதிய வீடுகளை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென தெரிவித்துள்ள அவர், அது தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## பருத்தித்துறைதிக்வெல்ல...

பருத்தித்துறை, சற்கோட்டைமுனைப் பகுதியிலிருந்து சைக்கிள் பயணம் நேற்று (29) அதிகாலை 12.01 மணியளவில் ஆரம்பமானது.

36 மணிநேரத்தில் சுமார் 600 கிலோ மீற்றர் தூரத்தைக் கடக்கும் வகையில் சைக்கிள் பயணம் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு சைக்கிள் பயணம் மாத்தறை மாவட்டம் திக்வெல்ல முனையை எதிர்வரும் 31ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு சென்றடையும் வகையில் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதில் தென்னிந்திய சுற்றுலாத்துறை அமைச்சின் இளைஞர்கள் மற்றும் சுற்றுலாவில் பங்கெடுக்க வந்த இளைஞர்கள் உள்ளடங்கலாக சர்வதேச சைக்கிள் ஓட்ட வீரர்கள் உள்ளிட்ட 65 சைக்கிள் ஓட்ட வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

## செஸ் போட்டியில்...

தங்கப்பதக்கத்தை வென்ற இலங்கையின் நம்பிக்கைக்குரிய செஸ் வீராங்கனை ஒஷினி தேவிந்தியா குணவர்த்தன நேற்றுக்காலை நாடு திரும்பினார்.

கடந்த ஒக்டோபர் 14 முதல் 27 வரை நடைபெற்ற சம்பியன்ஷிப் போட்டியில் 75 நாடுகளைச் சேர்ந்த செஸ் வல்லுநர்கள் போட்டியிட்டனர், கொழும்பிலுள்ள வைச்சர்லி சர்வதேச பாடசாலையின் தரம் 06 இல் பயிலும் மாணவி ஒஷினி வரலாற்றில் இடம்பிடித்து, இலங்கைக்கு முதல் தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொடுத்துள்ளார்.

இலங்கை சதுரங்கச் சங்கத்தின் தலைவர் லக்ஷ்மன் விஜேசூரிய, வைசெர்லியின் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் குழுவினர் ஒஷினிக்கு மாலை அணிவித்து அவரை வரவேற்றனர்.

## பழம்பெரும் பாடகர் சுனில்...

பாடகர் மதுமாதவ அரவிந்த மற்றும் நடிகர் தனஞ்சய சிறிவர்த்தன ஆகியோரின் தந்தையான சிறிவர்த்தனவின் இறுதிக் கிரியைகள், நேற்று நடைபெற்றன.

## ரூ. 1,000 கோடிக்கும் அதிகமான...

சந்தேக நபர்களும் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற படைவீரர்களென்று தெரிவிக்கப்படுகிறது.

குருநாகல், ஹங்கமுனவ இயோன் லங்கா இன்வெஸ்ட்மென்ட் என்ட் பிலிம் ப்ரொக்ஷன் நிதி நிறுவனத்தின் உரிமையாளர்களான மேற்படி சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதுடன் வாரியபொல மாஜிஸ்திரேட் நீதவான் ரசிக மல்லவராச்சி சந்தேக நபர்களை அடுத்த மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மக்களின் நிதியை ஏமாற்றிப் பெற்றுக் கொண்டு இரண்டு வருட காலம் அவர்கள் மறைந்து வாழ்ந்ததாகவும், கண்டி பகுதியில் வைத்து அவர்கள் இருவரையும் கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு இலட்சம் ரூபா முதல் ஒரு கோடி ரூபா வரையும் பல்வேறு நபர்களிடமிருந்து பணத்தை வைப்பிலிடச் செய்து அதற்கான வட்டியை வழங்காமலும் வைப்பிலிட்ட பணத்தையும் வழங்காமலும் அவர்கள் மறைந்து வாழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## அம்பிட்டிய சுமணரத்ன தேரரை...

அம்பிட்டிய சுமணரத்ன தேரர் விவகாரம் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பில் மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், "அம்பிட்டிய சுமண தேரருக்கு எதிராக பல்வேறு தரப்பினராலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி பொலிஸார் விசேட விசாரணைகளை முன்னெடுத்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர். ஆகவே, வீணான சந்தேகங்களை வெளியிட வேண்டிய அவசியம் எவருக்கும் இல்லை" என்று தெரிவித்தார்.

## இலங்கைக்கு துருக்கி நேரடி...

இஸ்தான்புல்லுக்கும் கொழும்புக்குமிடையில் வாராந்தம் 04 விமான சேவைகளை நிறுவனம் மேற்கொள்ளவுள்ளதாக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. ஒவ்வொரு திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் நேரடி விமான சேவைகள் நடத்தப்படும்

## இந்திய மீனவர்கள் 37 பேர்...

நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மேலும் 02 படகுகளும் கைப்பற்றப்பட்டு அதிலிருந்து 14 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்து மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றனர்.

கடந்த 14 ஆம் திகதியில் இருந்து நேற்று (28) மாலை வரை இலங்கை கடற்படையினரால் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் மற்றும் மண்டபத்தை சேர்ந்த 10 விசைப்படகுகள் கைப்பற்றப்பட்டு அதிலிருந்து 64 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2025ஆம் ஆண்டு முதல்...

அதேவேளை, கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் மிகுந்த நேர்மைத் தன்மையுடன் செயற்படுவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இத் துறைகள் தொடர்பில் தீவிர ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டே அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஐ.ம.சக்தி கட்சியிலிருந்து பலர்...

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து தம்மை விளக்குவதற்காக மேற்கொள்ளப்பட்டதீர்மானம்அந்தகட்சி தனிப்பட்ட வெறுப்பின் அடிப்படையில் எடுத்த தீர்மானமாகும். அந்த கட்சியின் தீர்மானம் தொடர்பில் உயர் நீதிமன்றம் விரைவில் சரியான தீர்ப்பை வழங்கும்.உயர் நீதிமன்றத்தின் அந்த தீர்ப்பையடுத்து ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பலரும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்கு தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இன்றைய பலன்கள்

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)





**மேஷம்:**
கவலை தீரும். தொழில் மேன்மையாக இலாபகரமாக நடைபெறும்.எந்த வேலையும் கடின உழைப்புக்குப் பின்தான் பலம் தரும்.



**ரிஷபம்:**
அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும். புதிய வீடு, மனை வாங்கும் யோகமும் உண்டு. கலைத் துறையில் உள்ளவர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.



**மிதுனம்:**
வீடு கட்டும் பணிகள் விரைவாக முடியும். புதிய மனை வீடு வாங்கும் யோகம் ஏற்படும். எந்த பிரச்சினைகளையும் தைரியத்துடனும் சாதுரியமாகவும் சமாளிப்பீர்கள்.



**கடகம்:**
அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும். பேச்சில் துணிச்சல் இருக்கும். வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு நல் வாய்ப்புக்கள் கிடைக்கும்.



**சிம்மம்:**
உங்கள் மதிப்பும் கௌரவமும் அதிகரிக்கும். முக்கியஸ்தர்களின் நட்பு கிடைக்கும். அரசியல்வாதிகள் உதவுவார்கள்.



**கன்னி:**
உங்கள் சந்தோசம் அதிகரிக்க செய்யும். புதிய ஆடை ஆபரணச் சேர்க்கை ஏற்படும். சுபச் செலவுகள் கூடும்.



**துலாம்:**
பண வரவு தாராளமாக இருக்கும். தொழில்கள் நன்றாக நடக்கும். அரசாங்க ஆதரவும் உண்டு. தெய்வ தரிசனம் உண்டு.



**விருச்சிகம்:**
அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. வெளிநாட்டு வேலை திருப்தியாக இருக்கும்.



**தனுசு:**
பதவி உயர்வும் சம்பள உயர்வு கிடைக்கும் வாய்ப்புண்டு. வெளிநாட்டு வேலை கிடைக்கும். கணவன் மனைவி உறவுகள் நல்லவிதமாக இருக்கும்.



**மகரம்:**
உத்தியோகத்தில் புதிய திருப்பம் காண்பர். சிலருக்கு பதவி உயர்வோடு வெளியூர் மாற்றம் கிடைக்கக் கூடும் .



**கும்பம்:**
நினைத்த காரியங்கள் நிறைவேறும். கணவன் மனைவி உறவுகள் அன்பு கொண்டதாக இருக்கும். நண்பர்களால் ஆதாயம் உண்டு.



**மீனம்:**
ஆழ்ந்து உங்கள் மனது சொல்வதைக் கேளுங்கள் அவசரமோ படபடப்போ வேண்டாம். பணப் பற்றாக்குறை இருக்காது.

## பன்முகப்படுத்தப்பட்ட...

தொழில் நடத்துவதற்கு தேவையான இதர பொருட்களை பெறுவதில் பெரும் நெருக்கடியை சந்திக்க வேண்டியிருந்தது.

தற்போதைய சூழ்நிலையில் பாரம்பரிய ஏற்றுமதி மூலம் மாத்திரம் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது சாத்தியமில்லை. பிரித்தானிய காலனித்துவ காலத்திலிருந்து இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை, இறப்பர், தென்னை உள்ளிட்ட பாரம்பரிய ஏற்றுமதிகளில் இருந்து நாட்டுக்கு தேவையான அந்நியச் செலாவணியை ஈட்ட முடியாது.

எனவே, ஏற்றுமதியை பல்வகைப்படுத்த இத் தருணத்தில் சந்தை பல்வகைப்படுத்தல், தயாரிப்பு பல்வகைப்படுத்தல் மற்றும் புத்தாக்கங்கள் அவசியம். அவ்வாறு செய்யாவிட்டால் பாரம்பரிய அரசியலை குறைகூறிக்கோண்டு இருப்பதைத் தவிர நாட்டை பொருளாதார ரீதியாக உயர்த்த முடியாது.

குறிப்பாக இந்தியா போன்ற நாடுகள் தற்போது தகவல் தொழில்நுட்பத்தை ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிக அளவில் அந்நியச் செலாவணியை ஈட்டத் தொடங்கியுள்ளன.

மாறிவரும் உலகில், டிஜிட்டல் மயமாக்கல் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்தில் உள்ள கண்டுபிடிப்புகள் நம் நாட்டின் தொழில் துறைகளுக்கு அதிகளவில் பயன்படுத்தப்பட வேண்டும்.

இந் நேரத்தில், ஒரு நாடு என்ற வகையில் எதிர்கொள்ளும் தேசிய சவால்களை முறியடிப்பதற்கும், ஒன்றிணைந்து செயல்படுவதற்கும் அனைவரின் பலமும் அர்ப்பணிப்பும் அவசியமாகும்."

இப் பரிசளிப்பு விழாவில் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் கலாநிதி சாரங்க அழகப்பெரும, இலங்கை அச்சக சங்கத்தின் தலைவர் அனில் காரியவசம், சங்க உறுப்பினர்கள் மற்றும் நாட்டின் முன்னணி அச்சகங்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## முஸ்லிம் லீக் வாலிப...

பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரிடம் தபால் மா அதிபர் கையளித்தார்.

முஸ்லிம் லீக் வாலிப முன்னணியினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரனி எம்.எம். சுஹைர், சம்மேளனத்தின் முன்னாள் தேசியத் தலைவர்களான என்.எம். அமீன், சிரேஷ்ட சட்டத்தரணிகளான என். எம். சஹீட், ரசீட் எம். இம்தியாஸ், அக்கரைப்பற்று எம். ஐ. உதுமா லெப்பை, கலாநிதி பி.எம். பாரூக், ஆகியோருக்கும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம். பௌசி, அலி சாஹிர் மௌலானா, பேராசிரியர் திஸ்ஸ விதாரன உட்பட முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களும் கலந்துகொண்டனர். போன்ற பாராளுமன்ற உறுப்பிணர்களும். பங்களதேஷ், இந்தோனேசியா, ஈரான், லிபியா, மலேசியா போன்ற நாடுகளின் துாதுவர்களும் சமுகமளித்தனர். அடுத்த ஆண்டின் புதிய தலைவராக சாம் நவாஸ் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய கிழக்கில்...

அனைத்து இலங்கையரும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமெனவும், மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்வதை தவிர்த்திடுமாறும், ஏதேனும் அவசரநிலை ஏற்பட்டால் டெல் அவிவ் (இஸ்ரேல்) மற்றும் ரமல்லா (பாலஸ்தீனம்) ஆகிய இடங்களிலுள்ள இலங்கைத் தூதரகங்களுடன் தொடர்ந்து தொடர்பு கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## மதுபோதையில் வாகனம்...

அவர் தமது காரில் பயணித்துள்ளார் என்றும் அதன் போது வெள்ளத்தை பகுதியில் கரையோர வீதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு அவரது வாகனம் வேறு சில வாகனங்களுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். அவர் மது போதையில் வாகனத்தை செலுத்தியுள்ள நிலையில் அவரது வாகனம் பஸ் ஒன்றின் மீதும் கார் ஒன்றின் மீதும் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ள தாக பொலிசார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்னவை பொலிசார் கல்கிஸை நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தியதையடுத்து நீதிமன்றம் அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# ஆசிரியர் கலாசாலை புனித மரியன்னை சிற்றாலயத்தில் பெருநாள் திருப்பலி





கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைந்துள்ள புனித மரியன்னை சிற்றாலயத்தின் பெருநாள் திருப்பலி கடந்த வெள்ளிக்கிழமை (27) காலை 9 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது.

கலாசாலையின் கிறிஸ்தவ மன்ற ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைக்கோட்ட முதல்வரும் யாழ் பேராலய பங்குத் தந்தையுமாகிய அருட்பணி ஜே ஜே மௌலிஸ் அடிகளாரால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. கோப்பாய் பங்குத்தந்தை எம் எல் மொன்பேட் அடிகள் பெருநாள் திருப்பலியில் கலந்து ஆசி வழங்கினார். கலாசாலை அதிபர் ச. லலீசன் திருப்பலி நிறைவுரை ஆற்றினார்.

## வடக்கின் உதயம்

# தேசிய வாசிப்பு மாத போட்டிகள் 1ஆம் திகதி

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரிப் பிரதேச சபையின் வரணி பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் எதிர்வரும் 01ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளன. அன்றைய தினம் காலை 9 மணிக்கு தரம் 07 மற்றும் தரம் 11 மாணவர்களுக்கு கவிதைப் போட்டியும் காலை 10.30 மணிக்கு தரம் 6 மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியும், தரம் 09 மாணவர்களுக்கு சிறுகதைப் போட்டியும் நடைபெறவுள்ளது.

மு.ப 11.30 மணிக்கு தரம் 02 மாணவர்களுக்கான சுவரொட்டிப் போட்டி, மற்றும் தரம் 10,12 மற்றும் 13 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகளும் வரணி பொது நூலகத்தில் நடைபெறவுள்ளதென வரணி பொது நூலக நூலகர் அறிவித்துள்ளார்.

# புதுக்குடியிருப்பில் குடும்பஸ்தர் அடித்துக்கொலை; ஒருவர் கைது

**ஓமந்தை விஷேட நிருபர்**



புதுக்குடியிருப்பு பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் சனிக்கிழமை (28) இரவு அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவ இடத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட பதில் நீதவான் க. பரஞ்சோதி நேற்று (29) சென்று பார்வையிட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைவேலி மயில்குஞ்சன் குடியிருப்பு பகுதியில் பெரிய தந்தைக்கும் குறித்த நபர் ஒருவருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாறி பொல்லுகளாலும் கோடரியாலும் தலையில் தாக்கப்பட்டதனால் படுகாயமடைந்த நபர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இராணுவத்தினரின் முகாமில் இருந்து அகற்றப்படும் இரும்புகளை விற்பனை செய்து வந்துள்ளார். அதனால் ஏற்பட்ட பணப் பரிமாற்றம் தொடர்பிலான தகராறால் இவர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியுள்ளது. குறித்த சம்பவத்தில் தம்பிப்பிள்ளை மார்க்கண்டு (வயது 67) கைவேலி பகுதியை சேர்ந்தவரே உயிரிழந்தவராவர். தாக்குதலை மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படும் சந்தேகநபர் அதேபகுதியை சேர்ந்த 30 வயது மதிக்கதக்க இராணுவத்தில் பணியாற்றும் நபர் எனவும் புதுக்குடியிருப்பு பொலிசார் கைது செய்துள்ளதுடன் பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட பதில் நீதிவான் க.பரஞ்சோதி சம்பவ இடத்திற்கு சென்று நிலமையை பார்வையிட்டதுடன், இது தொடர்பான முழுமையான விசாரணைக்கும் உத்தரவிட்டார்.

# தமிழ் மொழித்தினப் போட்டியில் முதலிடம்

**(மன்னார் குறுப் நிருபர்)**



கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை தமிழ் மொழித் தினம் தேசிய மட்ட போட்டியில் மன்னார் சித்திவிநாயகர் இந்து கல்லூரி மாணவி பாஸ்கரன் வினுக்சி முதலாம் இடத்தை பெற்று தனது பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார்.


## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 145,000 மில்லியனுக்கான திறைச்சேரி உண்டியல்கள் 2023 நவம்பர் 01ஆம் திகதி ஏலவிற்பனையினூடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124B021 | LKA18224E030 | LKA36424K015 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 65,000 | 45,000 | 35,000 | 145,000 |

| | | |
|---|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : | 2023 நவம்பர் 01 |
| தீர்ப்பனவுத் திகதி | : | 2023 நவம்பர் 03 |
| வழங்கப்படும் திகதி | : | 2023 நவம்பர் 03 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : | 2023 நவம்பர் 01 புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்கள்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறீப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்.எஸ்.பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்ளவனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**


# வீதியை விட்டு விலகி கடலுக்குள் பாய்ந்த ஆட்டோ!

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணம், பண்ணைப் பகுதியில் வேகமாக பயணித்த முச்சக்கரவண்டியொன்று வீதியை விட்டு விலகி கடலுக்குள் பாய்ந்துள்ளது. ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை பயணித்த முச்சக்கரவண்டியே வேகக் கட்டுப்பாட்டை இழந்து கடலுக்குள் பாய்ந்தது.

முச்சக்கரவண்டியில் சாரதி, மூன்று பெண்கள். குழந்தை ஒன்று ஆகிய ஐவரும் விபத்தில் சிக்கிய நிலையில் , மூன்று பெண்களும் , குழந்தையும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# இறந்த நிலையில் யானை மீட்பு

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா ஹொரவப் பொத்தானை வீதியில் இறந்த நிலையில் யானை ஒன்று சனிக்கிழமை (28) மீட்கப்பட்டுள்ளது. ஹொரவப்பொத்தானை காட்டுப் பகுதியில் இருந்து வீதி நோக்கி வந்த யானையே வீதி ஓரத்தில் இறந்துள்ளது. வீதியால் சென்றவர்கள் குறித்த யானை இறந்து இருப்பதை அவதானித்தையடுத்து பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கியுள்ளனர். இதனையடுத்து குறித்த யானை இறந்தமைக்கான காரணம் தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


தேசிய லொத்தர் சபை National Lotteries Board — வெள்ளி 2023.10.27 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5280 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 37,487,408.00 — ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 1 0 0 8 2 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3522 — சீட்டிழுப்பு திகதி 2023.10.27 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,695,688.00 — ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 09 12 59 66 — விசேட எழுத்து Y — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 77568

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1628 — 2023.10.27 — 28293 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 412,217,892.00 — ஆங்கில எழுத்து V — சுப்பர் இலக்கம் 01 — வெற்றி இலக்கங்கள் 13 43 53 55 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

லக்கி 7 — வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 5 9 8 7 7 8 — திகதி 2023.10.27 — சீட்டிழுப்பு இலக்கம் 0106 — L7 இலக்கம் 1 3 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 12,012,503.76

ராசி சுப பலன் — திகதி 2023.10.27 — சீட்டிழுப்பு இலக்கம் 589 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,037,366.80 — வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 07 44 49 62 — விசேட இலக்கினம் துலாம்

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1310 — 2023.10.27 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,495,070.40 — ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 08 15 46 66 — விசேட எழுத்து G — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 19998

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — ஞாயிறு 2023.10.28 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5281 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 37,487,408.00 — ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 1 7 0 6 7 4

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3523 — சீட்டிழுப்பு திகதி 2023.10.28 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,785,754.40 — ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 08 39 48 75 — விசேட எழுத்து L — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 64214

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1629 — 2023.10.28 — 54645 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 412,314,008.00 — ஆங்கில எழுத்து V — சுப்பர் இலக்கம் 09 — வெற்றி இலக்கங்கள் 07 14 48 59 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

லக்கி 7 — வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 9 5 6 8 0 9 — திகதி 2023.10.28 — சீட்டிழுப்பு இலக்கம் 0107 — L7 இலக்கம் 2 7 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 12,031,866.56

ராசி சுப பலன் — திகதி 2023.10.28 — சீட்டிழுப்பு இலக்கம் 590 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,101,078.80 — வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 08 19 40 43 — விசேட இலக்கினம் மீனம்

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1311 — 2023.10.28 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,655,912.80 — ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 15 48 61 71 — விசேட எழுத்து S — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 44777



## எல் பீ பினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் | திகதி | முகவரி |
|---|---|---|
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 124, காலி வீதி, தெகிவளை. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 84 A, காலி வீதி, தெகிவளை. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 51A, W.A. சில்வாமாவத்தை, கொழும்பு 06. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 18, கெசல்வத்த, பாணந்துறை. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 358/D, மதுக்கம வீதி, தர்கா நகரம். |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 534, காலி வீதி, வாட்டுவ. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 25, யட்டியந்தோட்ட வீதி, அவிசாவளை. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 24/A, பிரதான வீதி, கன்வெல்ல. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 25A, பிரதான வீதி, எஹலியகொட. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 755/1, பன்னிப்பிட்டியவீதி, பத்தரமுல்ல. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 434, E.W.பெரேரா மாவத்தை, கோட்டை வீதி, பிடகோட்டை. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 92, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 595, உயர்மட்ட வீதி, கங்கொடவில, நுகேகொட. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தல. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 28, தெகிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 227, டி சொய்சா வீதி, மொறட்டுமுல்லை, மொறட்டுவ. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 91, உயர்மட்ட வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 11, கல்தேமுல்ல வீதி, மொறட்டுவ. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 19, தனயம் பிவிசம் மாவத்தை, பலாங்கொட. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 167, பிரதான வீதி,பண்டாரவல. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 89, கீழ் தெரு, பதுளை. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 87. பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 48, இரத்தினபுர வீதி, பதுரலிய. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 96, அகலவத்தை வீதி, மத்துகம. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 49, சேனநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹராம |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிப்பிட்டிய. |
| 01/04/11/18 | டிசம்பர் 2023 | இல. 138 D/1, ஹம்பாந்தோட்ட வீதி, அம்பலாந்தோட்ட. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்கல்லே. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 2, H.V. கட்டிடம், டெல்லாவ வீதி, நெலுவ. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 282, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொடை. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 598 E, ஹிரிம்புரா வீதி, கராபிட்டிய. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 13, ஸ்டேஷன் ரோடு, மாத்தறை. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 83, தெனியாய வீதி, அக்குரஸ்ஸ. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 722, விஹார சந்தி, வரகொட வீதி, களனி. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 482, அவிசாவளை வீதி, கடுவெல்ல. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்த. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல: 365, உயர்மட்ட வீதி, கொட்டாவ. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 419, கோட்டை வீதி, ராஜகிரிய. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 835/2A, தலங்கம, யர்த், மாலபே. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 124/A, துட்டகெமுனு வீதி, கொகுவெல்ல. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 69, தெகிவளை வீதி, மகரகம. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 227/A, உயர்மட்ட வீதி, வத்தேகெதர, மகரகம. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 76, உயர்மட்ட வீதி, ஹோமாகம. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 50/12, கொடகம வீதி, அதுருகிரிய. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 145, மலாய் வீதி, கொழும்பு 02. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 54, D.S. சேனநாயக்க மாவத்தை, பொரல்லை. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 239, கிருள வீதி, நாரஹேன்பிட்டிய |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 282, நாகலகம் வீதி, கொழும்பு 14. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 52/17, கொத்தடுவ புதிய நகரம், கொத்தடுவ. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 21, சென்.ஜோசப் வீதி, கிராண்ட்பாஸ். |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜயசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு10. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 65/A, ஸ்ரீ சதர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 149, KB கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு13. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 02/05/12/19 | டிசம்பர் 2023 | இல. 1024, மருதாணை வீதி, கொழும்பு10. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சிய. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம் . |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியகம. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 03, சென்.லூசியாஸ் வீதி, கொட்டஹேனா. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 18, எலகந்த, கந்தல, வத்தல. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 3/729, பண்ணை வீதி, கொழும்பு 15. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 530, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு15. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 107, சென்.ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிக்கடை. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 40 A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 106 C, குருநாகல வீதி, புத்தளம். |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 75 A, சிலாபம் வீதி, மாரவில. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 84, பிரதான வீதி, கல்பிட்டிய. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 17, ஸ்டேஷன் வீதி, கந்தலை சந்தி, வத்தலை. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 661/A, தெவத்த வீதி, ராகம. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, யா-எல. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 434, பேஸ்லைன் வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | ராஜரட்டகட்டிடம், பிரதானவீதி, கதுருவெல்ல, பொலன்னறுவை. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 114, பிரதானவீதி, கந்தல |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 230, கண்டி வீதி, மாவன்னெல்ல. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 81, கண்டி வீதி, வரக்காப்பொல. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 57, வெயங்கொட வீதி, மினுவாங்கொடை. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 1B, பௌத்தலோக மாவத்தை, கம்பஹா. |
| 06/13/20/27 | டிசம்பர் 2023 | இல. 69, கிருல்ல வீதி, திவுலப்பிட்டிய. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமட. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 473, நுவரெலியா வீதி, புசல்லாவ. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பொலை. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 52, டன்பரா வீதி, ஹட்டன். |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 73, கொத்மலை வீதி, நாவலப்பிட்டிய. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலிய. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டிய. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 21, தம்புள்ளை வீதி, குருநாகல். |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 35, சரஸ்வி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 115, கொடுகொடெல்ல வீதி, கண்டி. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 298, கொழும்புவீதி, பிலிமத்தலாவ. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 13A, கண்டி வீதி, கெலியோயா. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 66, நாவலப்பிட்டிய வீதி, கம்பளை. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 44/1, புதிய பஸ் நிலைய வீதி, மொனராகலை. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 153, மடவல வீதி, கடுகஸ்தோட்ட. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 94, ராஜா வீதி, மாத்தளை. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 226, டி.எஸ். சேனநாயக்க வீதி, கண்டி. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புள்ளை. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 14, புதிய நகரம், திகன. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 56,57, எட்வின் விக்கிரமரத்ன வணிக வளாகம், புதிய நகரம், மஹியங்கனை. |
| 07/14/21/28 | டிசம்பர் 2023 | இல. 10/2, வங்கி எதிரில், புதிய நுகரம், தெஹியத்தகண்டி. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 171, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய். |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 35, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 3, 5 வல்லை வீதி, சங்கானை. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 126, 128, பிரதானவீதி, பருத்தித்துறை. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 69, பிரதானவீதி, அச்சுவேலி |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 55, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 6, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென் மேற்கு, வட்டுக்கோட்டை. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | கண்டி வீதி, கொடிகாமம். |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 575, கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளை தெற்கு, தெல்லிப்பளை. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 01, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | பிரதான வீதி, மல்லாவி. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | PW வீதி, முல்லைத்தீவு. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 32B, 2ம் குறுக்கு வீதி, வவுனியா. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 12, வட்டாரஇல. 06, பிரதானவீதி, பேசாலை, மன்னார். |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | பிரதான வீதி, மருதங்கேணி. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 25, ஹிர்ஜா சந்திப்பு, கல்முனைவீதி, சம்மாந்துறை. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | பிரதான வீதி, திருக்கோவில் 01. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 04, கடிகார கோபுரம் எதிரே, அம்பாறை. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | பிரதான வீதி, பொத்துவில். |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | பிரதான வீதி, வவுனதீவு. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | பாடசாலைஎதிரே, வைத்தியசாலைவீதி, களுவாஞ்சிக்குடி. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல.71 A, பிரதான வீதி, ஆரயம்பதி. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | பிரதான வீதி, பிரிவு 10, கொக்கட்டிச்சோலை. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 275, மத்திய வீதி, திருகோணமலை. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | "சந்தை எதிர் வளாகம்", பிரதான வீதி, செங்கலடி. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | சந்தை எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டகளப்பு. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 50/2, பிரதான வீதி , கின்னியா. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | திருகோணமலை வீதி, கண்டலடி, வாகரை. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | பிரதான வீதி, கிரன். |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர. |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 151, 153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 03, ஏறாவூர். |
| 08/15/22/29 | டிசம்பர் 2023 | இல. 252B , 252/1, கண்டி வீதி, திருகோணமலை. |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

LB FINANCE

உதவி பொது முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு

275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# மாத்தளை மாவட்ட கல்வி வளர்ச்சியில் வரலாற்று தடம்பதித்த அதிபர் Y. அப்துல் அஸீஸ்






**"வரலாறு மனிதர்களை உருவாக்குவதில்லை. மனிதர்களே வரலாற்றை உருவாக்குகிறார்கள்"**

**"வரலாறு மனிதர்களை உருவாக்குவதில்லை. மனிதர்களே வரலாற்றை உருவாக்குகிறார்கள்".** என்பதற்கமைய கல்ஹின்னை ஊரின் வரலாறும்.

வாப்புகண்டு அடப்பனார் எனும் இந்திய வழி முஸ்லிம் பெரியாரின் குடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இதனால் இங்குள்ள அதிக மானோரின் குடும்ப வாசகமாக 'அடப்பனா கெதர' என்பது தற்போதும் உபயோகிக்கப்படுகிறது. இத்தகு வரலாற்றுப் பின்னணியை கொண்ட ஊரிலேயே Y. அப்துல் அஸீஸ் அவர்கள், யூனுஸ் லெப்பே வைத்தியருக்கும் அடப்பனா கெதர மரியம் பீபிக்கும் மூன்றாவது மகனாக (1929.09.29) அன்று பிறந்தார்கள். கல்ஹின்னையின் முதல் பயிற்றப்பட்ட தமிழ் ஆசானாகவும் முதல் தலைமை ஆசிரியராகவும் (அதிபர்) போற்றப்படும் இவர், 1936 ஆம் ஆண்டு கல்ஹின்னை முஸ்லிம் பாடசாலையில் கல்வி கற்று அதே ஊர்ப் பாடசாலையான கமாலியா முஸ்லிம் வித்தியாலயம் பின்னர் அல்மனார் முஸ்லிம் பாடசாலையாக வளர்ச்சியுற்ற பாடசாலையின் 1947 ஆம் ஆண்டில் எஸ்.எஸ்.சி (senior school certificate) பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த முதல் மாணவனாகவும் அதே பாடசாலையின் முதல் நியமனத்தை பெற்றவராகவும் வரலாற்றில் இடம் பிடித்துள்ளார்.

1948/1949 ஆகிய இரண்டு வருடங்கள் அழுத்கம ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியை முடித்து ஊர்ப் பாடசாலையிலேயே 1950 இல் ஆசிரியர் பணியை தொடர்ந்த இவர், 1955 56 இல் ரம்புக்கெல முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி கற்பித்து சிரேஷ்ட உதவி ஆசிரியராகவும் செயலாற்றத் தொடங்கினார். 1957 இல் மாத்தளை மாவட்டத்தின் அஜ்மீர் முஸ்லிம் வித்தியாலயத்தில் கடமை பொறுப்பேற்ற இவர், அக்காலத்தில் அஜ்மீர் ஒரு முஸ்லிம் பாடசாலையாக எழுச்சி பெறுவதில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளின் போதும் பாடசாலையை கட்டிக்காப்பதில் முன்னின்று செயற்பட்டவர்களிடையே ஒரு ஆசிரியர், உதவி அதிபர், பதில் அதிபர் என்ற பல கோணங்களில் முக்கியத்துவம் பெற்றவராகத் திகழ்கின்றார்.

அஜ்மீர் முஸ்லிம் வித்தியாலயத்தின் முதல் அதிபராக ஜீ.எஸ். சம்சுதீன் பொறுப்பேற்ற வேளையில் உதவி அதிபராகவும், சம்சுதீன் அவர்களுக்குப் பின்னர் பதில் அதிபராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. இதனைத்தொடர்ந்தே தலைமை ஆசிரியராக (அதிபராக) தரமுயர்த்தப்பட்ட Y. அப்துல் அஸீஸ் 1958 1961 வரையிலும் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையாக (G.M.T.S) விளங்கிய தற்போதைய ஆமினாவின் தலைமை பொறுப்பை (அதிபர்) ஏற்று செயற்பட்டமை வரலாற்றுச் சான்றாகும்.

இவர் GMTS (ஆமினா) பாடசாலையில் கடமை பொறுப்பேற்கும் போது தற்போதைய T கட்டிடமும் அதன் பின்னால் உள்ள ஆசிரியர் விடுதியும் மட்டுமே காணப்பட்டுள்ளன. மேலதிக சிறப்பம்சம் யாதெனில் அஸீஸ் மாஸ்டர் என அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் இவர், இந்த ஆசிரியர் விடுதியில் தனது குடும்பத்தினருடன் தங்கியிருந்தவாறே இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டுள்ளார் என்பதாகும். இவர் அதிபராக இருந்த காலகட்டத்தில் "1961. 03 .21" அன்று இப்பாடசாலையில் அப்துல் அஸீஸ் அதிபரின் கீழ்தான் நான் எனது முதல் ஆசிரியர் நியமனத்தை பொறுப்பேற்றுக் கொண்டேன்" என இதன் ஆரம்பகால ஆசான்களில் ஒருவராக திகழ்ந்த, பின்னர் பல பாடசாலைகளில் ( இஸ்மாலியா. மு.வி, வரக்காமுற மு.வி, ரஜம்மன மு.வி, குரிவெல ஹமீதியா கல்லூரி) அதிபராகவும் கடமையாற்றிய I.L.M. முஸ்தபா (உடத்தலவின்ன) ஆசிரியர் துல்லியமாக குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

அதேபோல், மாத்தளை மாவட்ட முஸ்லிம்களின் கல்விக்கு பேராதரவு புரிந்த V.T. நாணயக்காரவின் மாணவராகவும், அவரின் கீழ் ஒரு ஆசிரியராகவும், பின்னர் அதிபராகவும் பணியாற்றிய எஸ்.ஜுனைதீன் (மாத்தளை கல்விப் பணிப்பாளர் ஜே.எம்.இக்பாலின் தந்தையார்) அரசினர் கலவன் பாடசாலைக்கு (G.M.T.S பின்னர் GMMS) ஆசிரியராக (1958) வந்தவேளை, Y. அப்துல் அஸீஸ் தலைமையாசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்தார் என குறிப்பிடுகின்றமையும் ஒரு முக்கிய அம்சமாகும்.

மாத்தளை மாவட்ட முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்காக ஆசிரியர்களையும் மாணவர்களையும் நெறிப்படுத்திக் கொண்டிருந்த அப்துல் அஸீஸ் அவர்களின் காலத்திலேயே அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து (இன்றைய ஆமினா) ஆண் மாணவர்கள் அனைவரும் இன்றைய இஸ்மாலியா( வரலாறு ஆய்வுக்குரியது) பாடசாலை அமைந்துள்ள கொங்காவளை கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதோடு, இன்றைய இஸ்மாலியாவில் இயங்கி வந்த ஸாஹிரா பெண்கள் பிரிவு இன்றைய ஆமினா (வரலாறு ஆய்வுக்குரியது) மகளிர் பாடசாலையின் வளாகத்துக்கு மாற்றப்பட்டது. இங்கு கவனிக்கத்தக்க விடயம் யாதெனில், 1961இல் அன்றைய அரசினர் கலவன் பாடசாலையாக இயங்கிய (ஆமினா) பாடசாலையின் ஆண் மாணவர்களுடன் அதன் தலைமை ஆசிரியராக (அதிபர்) கடமை புரிந்த Y.அப்துல் அஸீஸ் மாற்றலாகிச் சென்று கொங்காவலை வீதியில் இயங்கி வந்த அரசினர் முஸ்லிம் பாடசாலை தலைமை ஆசிரியராக பொறுப்பேற்றுக் கொண்டார். அன்றிலிருந்து அப்பாடசாலை (GMBS) என அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலையாக இயங்கத் தொடங்கியது. அங்கிருந்த மாணவிகள் அனைவரும் மொலந்த பிட்டிய வளாகத்தில் இயங்கி வந்த அரசினர் கலவன் பாடசாலைக்கு மாற்றப்பட்டு இப்பாடசாலை முஸ்லிம் பெண்களுக்கான தனித்துவ பாடசாலையாக இயங்கத் தொடங்கியது. இதன் முதல் அதிபராக செல்வி லைலா மொஹிதீன் நியமிக்கப்பட்டார். அன்றிலிருந்து இப்பாடசாலை "ஸாஹிரா பெண்கள் பாடசாலை" என வழங்கப்படலாயிற்று.

இவ்வரலாற்று நிகழ்வின் படி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கடைசி அதிபராகவும், மாத்தளை முஸ்லிம்களின் முதல் பாடசாலையாக பரிணமித்து ஹமீதியா, ஸாஹிரா (இஸ்மாலியா) என்றெல்லாம் நாமம் பெற்று அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலையாக (G.M.B.S) மாறிய போது அதன் முதல் அதிபராக பொறுப்பை ஏற்றவராகவும் Y.அப்துல் அஸீஸ் விளங்குகின்றமை சிறப்பம்சமாகும். எனவே, மாத்தளையில் முஸ்லிம் ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் பாடசாலைகள் தனித்தனியாக இயங்கும் செயற்பாட்டிற்காக முன்னின்று உழைத்த கல்விமான்களிடையே Y. அப்துல் அஸீஸ் அவர்களும் ஒரு இணைப்புப் பாலமாக செயற்பட்டுள்ளார்கள் என்பதனை உறுதியாகக் குறிப்பிட முடியும். அக்கால கல்வி, சமூக அரசியல் செயற்பாடுகளை மாத்தளையின் வரலாறு படைத்த கல்வித் தந்தை ஏ.ஏ.எம் புவாஜி (ஸாஹிரா கல்லூரியின் புகழ் பெற்ற அதிபர்களுள் ஒருவர்) பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு மாத்தளை மாவட்ட பாடசாலைகளுக்கு தனது சேவையை வழங்கிய Y. அப்துல் அஸீஸ், 1961 தொடக்கம் 1964 வரை மாத்தளை மாவட்ட ஆசிரியர் சங்க செயலாளராகவும் கடமை புரிந்துள்ளார் என 'எங்கள் ஊர் கல்ஹின்னை' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் அக்காலத்தில் ஒரு வர்த்தகராகவும் சமூக சேவையாளராகவும் கல்வியலாளராகவும் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட அஸீஸ், மாணவர்கள் மீது அதிக கருணை கொண்டிருந்தார்கள் என்பதை அவரிடம் படித்த தாஜுதீன் ரஹீம் எனும் மாணவரின் பின்வரும் சம்பவம் நிரூபிக்கின்றது.

1961இல் மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு அதிகாலையிலேயே மாணவர்கள் பஸ் வண்டியில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது நான் மாணவன் மட்டும் பஸ்ஸில் ஏறாது தூர நின்று அவதானித்துக் கொண்டிருப்பதை கண்டுவிட்ட அதிபர், என்னை அருகில் அழைத்து ஏன் சுற்றுலாவில் வரவில்லையென விசாரிக்க நான் பணப் பிரச்சினை பற்றி கூறவே, அதை பிறகு பார்த்துக் கொள்ளலாம். முதலில் நீ சென்று அவசரமாக தயாராகி வா என அழைத்துச் சென்றதை தனது பசுமையான நினைவுகளில் ஒன்றாக பகிர்ந்து கொண்டார். மேலும் அஸீஸ் மாஸ்டர் தான், தன்னை புனித தோமையர் வித்தியாலயத்தில் உயர் தர கல்விக்காக (1974) சேர்த்து விட்டார் என அஸீஸ் அதிபரின் நெருங்கிய நண்பரான ஐ.எல்.எம்.ரபீக் ஆசிரியரின் மகன் ஆர். உசாமா ஆசிரியர் குறிப்பிடுகின்றமையும் மனங்கொள்ளத்தக்கது. அலாதியான வாசிப்பு பழக்கத்தை கொண்டிருந்த Y.அப்துல் அஸீஸ் அவர்கள் பல்வேறு நூல்களை நூலகங்களுக்கு பரிசளிப்பதில் முன்னோடியாக செயற்பட்டுள்ளதாகவும், வெள்ளைச்சாரனும் சேர்ட்டும் அணிந்து அதன் மேல் ஒரு கருப்பு கோர்ட் அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்த இவர், "சரளமாக ஆங்கிலம் பேசத் தெரிந்த தன் பின்னரே மேலைநாட்டவர் போல் நீளக் காற்சட்டை அணியத் தொடங்கியதாகவும், திருமணம் முடிக்கும்போது வெறுமனே மூன்றாம் வகுப்பு படித்திருந்த தன்னையும் கூட வாசிக்க பழக்கி பத்திரிகை வாசிப்பை நேசிக்க வைத்தவர் எமது தந்தை என்பதை உம்மா அடிக்கடி சொல்லுவார்கள்" என அஸீஸ் மாஸ்டரின் மகள் அஸ்மியா, தனது தந்தையின் ஞாபகங்களை பகிர்ந்து கொண்டார்.

Y.அப்துல் அஸீஸ் அவர்கள் பின்வரும் பாடசாலைகளில் கல்விச் சேவை புரிந்துள்ளார்கள்.....

1. கல்ஹின்னை மு.வி. (1950 1954)
2. ரம்புக்கெல்ல மு.வி (1955 1956)
3. அஜ்மீர் தேசிய பாடசாலை ( 1957 1958)
4. அரசினர் கலவன் பாடசாலை (ஆமினா) அதிபர் 1958 1961)
5. அரசினர் முஸ்லிம் பாடசாலை அதிபர் (இஸ்மாலியா) 1961 1963)
6. வரக்காமுறை மு.வி. (அதிபர் 1964 1967)
7. உல்பத்பிட்டிய மு.வி ( அதிபர் 1968 1970)
8. ரம்புக்கெல்ல மு.வி. (1970 1972)
9. வலஹேன மு.வி. ( 1972 1980)

என பல்வேறு பாடசாலைகளில் ஆசிரியராகவும் உதவி அதிபராகவும் தலைமை ஆசிரியராகவும் (அதிபர்) பணியாற்றியுள்ளார். இந்த அதிபரின் மூத்த சகோதரரே அப்துல் மஜீத் எனும் பெயரில் அன்றைய ஆமினாவில் ஆங்கிலப்பாட ஆசானாக பணி செய்தவர் என்பதும், அவரது இளைய சகோதரர்களான மூசின், இஸ்மாயில் என்போரும் சிறந்த ஆசிரியர்களாகவும் சமூக சேவையாளர்களாகவும் விளங்கியுள்ளார்கள்.

Y.அப்துல் அஸீஸ் அதிபர், அப்போதைய முஸ்லிம்களின் கல்வி அபிவிருத்திக்காக பாடுபட்ட முஸ்லிம் அரசியல் தலைவர்களில் ஒருவரான A.C.S. ஹமீத்தின் அரசியல் ஆதரவாளராக நெருங்கி செயற்பட்டார்கள் என்பதற்காக ஒரு குறுகிய காலத்துக்குள் சுமார் பத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு அடுத்தடுத்து இடமாற்றம் செய்யப்பட்டு பழிவாங்கப்பட்டதாகவும் அவரது மகளார் குறிப்பிட்டார்கள். இதற்கமைய நிகவட்டவன முஸ்லிம் வித்தியாலயத்தில் ஒரு நாள் அதிபராகவும் இருந்துள்ளார் என்பது சுவாரஸ்யமான தகவல். அக்கால முஸ்லிம்களின் கல்விக்காக மிகுந்த பிரயத்தனங்களை மேற்கொண்ட அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீத்தின் நட்பின் மூலமே இவர் ரம்புக்கலை முஸ்லிம் வித்தியாலயத்தில் அதிபராக இருந்தவேளை, தமிழ் மொழி மட்டுமே கற்பிக்கப்பட்ட நிலைமையை மாற்றியமைத்து ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களையும் நியமிக்கச் செய்தார். பாடசாலையின் ஏனைய அபிவிருத்திகளுக்காகவும் பாடுபட்டார்.

அதேபோல் தனது இறுதிக் காலத்தில் பணியாற்றிய வலஹேன முஸ்லிம் பாடசாலை 1970 இல் ஊர் பள்ளிவாசல் காணியில் ஒரு ஓலைக் குடிசையிலேயே இயங்கி வந்தது. இந்நிலையை மாற்றியமைத்து நிரந்தர காணியொன்றில் நிரந்தர கட்டிடமொன்றில் இயங்கும் நிலையை ஏற்படுத்துவதில் அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீத் அவர்களுடனான நட்பும் முயற்சியுமே காரணம் என்றால் அது மிகையாகாது.

மேலும் தனது ஓய்வு காலம் என்றும் பாராமல் சமூக சேவைகளில் ஈடுபட்டு வந்த Y.A. அஸீஸ், தான் பட்டகொள்ளாதெனியவில் தைக்கா பள்ளியை (அல்பத்தாஹ் மத்ரஸா) மையமாகக் கொண்டு ஒரு ஓலைக் குடிசையில் 1978 இல் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு சிரமங்களோடு இயங்கி வந்த முதல் பாடசாலைக்கு ஒரு தற்காலிக கட்டிடத்தை தனது சொந்த செலவில் நிர்மாணித்து கொடுத்தார்.

அஸீஸ் மாஸ்டரின் மகன்களில் ஒருவரான பாஹிம் (Chartered Accountant UK) ஜமாலியா முஸ்லிம் வித்தியாலயத்தின் சிற்றுண்டிச் சாலை மண்டபத்தை தனது தந்தையின் நினைவாக நிர்மாணித்து கொடுத்தார் என்றும் பல தகவல்களை தனது நேர்காணலிலும் பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.

ஒரு இளம் சிங்கமாக இருபத்தியிரண்டு வயதில் கல்விப் பணியை ஆரம்பித்து முப்பத்தைந்து வருடங்களாக மரணிக்கும் வரையிலுமே சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்காக உழைத்த அப்துல் அஸீஸின் மனைவியின் பெயர் அடப்பனா கெதர ஹுசைன் சவ்தூன் பீபி என்பதாகும். இவர்களின் பிள்ளைகளான மர்ஹூம் அஸ்ஹர், அஸ்மியா, ஷாபி, நௌஷாத், நளீம், இர்ஃபான் ஆகிய அனைவருமே கல்வித் துறையில் பிரகாசித்தவர்களே. இவர்களில் நளீம், பாஹிம் (Chartered Accountant UK), இர்ஃபான் ( Accountant UK) ஆகிய மூவருமே தற்போது இங்கிலாந்தில் குடியுரிமைப் பெற்று முக்கிய வர்த்தக நிறுவனங்களை முன்னின்று நடத்தி வருகிறார்கள். அப்துல் அஸீஸ் அவர்களின் கடைசிப் புதல்வனான இர்ஃபான் அஸீஸின் ஆர்வமும் அனுசரணையுமே அப்துல் அஸீஸ் அதிபர் பற்றிய இந்த ஆய்வு கட்டுரைக்கான தேடலின் பக்க பலமாக அமைந்தமையும் முக்கிய அம்சமாகும்.

பல்வேறு பாடசாலைகளிலும் கல்விச் சமூகத்துக்கும் பெரும் சேவை புரிந்துள்ள அப்துல் அஸீஸ் அவர்களின் வழித்தடத்திலேயே பயணிக்கும் அவரது மகன் இர்ஃபான் அஸீஸ், உயர்தரப் பரீட்சை எழுதிய காலத்திலிருந்தே தன் கல்விப் பணியை ஆரம்பித்து விட்டமை குறிப்பிடத்தக்கது. அக்குறணை அஸ்ஹர் கல்லூரி, மாத்தளை ஸாஹிரா கல்லூரி என பல்வேறு பாடசாலைகளிலும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கணக்கியலை கற்பித்துள்ளதோடு, 1998 இல் மயோன் கணினி நிறுவனத்தை ஆரம்பித்து அதனூடே மாத்தளை மாவட்டத்தின் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் கணினி கற்கையை தொடர்ச்சியாக வழங்கி வந்துள்ளார். இவரது நிறுவனத்தில் கற்ற ஆயிரக்கணக்கான மாணவர்களிடையே சுமார் இரண்டாயித்துக்கும் அதிகமான மாணவர்கள் முழுமையாக புலமைப் பரிசில்களைப் பெற்று முற்றிலும் இலவசமாக தமது கணினி கற்கையை பெற்றுக் கொண்டுள்ளார்கள். அக்காலப் பகுதிகளில் கணிணி கல்வி மட்டுமன்றி சுமார் ஒரு தசாப்த காலமாக மாத்தளை ஆமினா மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு சாதாரண தரப் பரீட்சைக்கான முன்னோடி கருத்தரங்குகளையும் இவர் நடாத்தி வந்துள்ளார்.

மேலும் இவர் பிரிட்டிஷ் வணிகக் கல்வி நிறுவனம் (British business Academy) ஒன்றுடன் இணைந்து கற்கை நெறிகளை வழங்கியுள்ளதோடு, சர்வதேச ஆங்கில பாடசாலையொன்றையும் (BBA International school) நடாத்தி வந்தமை முக்கிய அம்சங்களாகும். பின்னர் இவர் இங்கிலாந்தில் குடியமர்ந்த போதும் தொடர்ந்தும் கல்விப் பணிகளில் ஈடுபட்டு வரும் இர்ஃபான் அஸீஸ், தனது தந்தை தலைமை ஆசிரியராக கடமையாற்றிய ஆமினா தேசிய பாடசாலையின் கணினிக் கூடமும் புதுப் பொலிவு பெற்று தந்தையின் நாமத்துடன் திறந்து வைக்கப்பட்டமையும் (05 10 2023), அத்தினம் நடைபெற்ற இஸ்லாமியத் தின பரிசளிப்பு விழாவில் "அல் அஸீஸ் "என்ற நாமம் தாங்கிய சஞ்சிகையொன்று வெளியிடப்பட்டமையும், இந் நிகழ்வின் பிரதம அதிதியாகவும் இர்ஃபான் அஸீஸ் கலந்து சிறப்பித்தமையும் முக்கிய அம்சமாகும்.

இறுதியாக, மறுமை வாழ்வுக்கும் தொடர்ந்து வந்து நன்மை பயக்கும் கல்விப் பணி செய்து 56 வருடங்களே இவ்வுலகில் வாழ்ந்திருந்த Y. அப்துல் அஸீஸ், தனது ஆயுளின் அதிக காலத்தை (35 வருடங்கள்) கல்விப் பணிகளுக்கே செலவிட்டு 1985 06 26 அன்று இவ்வுலக வாழ்விலிருந்து விடைபெற்றுக் கொண்டார். வரலாற்றில் தன் பெயர் பதித்து மறைந்த அன்னாரின் நற்பணிகளை எல்லாம் வல்ல இறைவன் பொருந்தி கொள்வானாக.

**ஜெஸீமா ஹமீட்**
**வரலாற்று ஆய்வாளர்.**
**(BA( Hons), MA (History),PGDE, DIP IN OFFICE MANAGEMENT.**
**Lecturer History ( NIE) Matale branch.)**

**எம்.சதூர்தீன்**
**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

---

குவைத் நிதியுதவியில்

## வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு 'அல்ஹிமா' அமைப்பினர் உதவிக்கரம்



வருமானம் குறைந்த குடும்பங்கள், அநாதைகளிடத்தில் சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்கோடு அல்ஹிமா சமூக சேவை அமைப்பு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. அதனது சேவையின் இன்னொரு அங்கமாக வருமானம் குறைந்த, ஏழ்மையில் வாழ்கின்ற குடும்பங்களை இனங்கண்டு அவர்களை தெரிவு செய்து சுயதொழிலை மேற்கொள்ள பெறுமதியான தையல் மெசின்களை மேற்படி அமைப்பு வழங்கி வருகிறது.

அல்ஹிமா அமைப்பின் வேண்டுகோளின்பேரில் குவைத் நிதியத்திலிருந்து கிடைக்கப்பெற்ற நிதியுதவியில் தையல் இயந்திரங்கள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் கஹடோவிட்ட பகுதியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிதிகளாக அல்ஹிமா அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ் (நளீமி) மற்றும் முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் அஷ்ஷெய்க் எம். எம் முஹம்மத் (நளீமி) ஆகியோர் கலந்து கொண்டு வறிய குடும்பமொன்றுக்கு தையல் மெசினை கையளிப்பதை படத்தில் காணலாம். இலங்கையில் வாழுகின்ற வருமானம் குறைந்த விதவைகள் அல்லது அநாதைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு சுயதொழிலை பெற்றுக்கொடுக்க அல்ஹிமா அமைப்பு தொடர்ந்தும் செயற்படும் என்று அதன் பணிப்பாளர் ஷெய்க் நூறுல் லாஹ் இங்கு உரையாற்றும்போது தெரிவித்தார்.

---

## பாணந்துறை பஹ்ரியாவில் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

### இலவச முதலுதவி சேவையும் முன்னெடுப்பு

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)





பாணந்துறை அல்பஹ்றியா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்த 'பஹ்ரியன் பிரைமரி லீக்2023' (FAHRIYAN PREMIER LEAGUE) உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி சனிக்கிழமை (28) முதல் இரண்டு நாள் நிகழ்வாக கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த சுற்றுப் போட்டிக்கான முதலுதவி தொண்டர் வைத்திய சேவையை ரிஸான் ஷாபி தலைமையிலான தொட்டவத்தை மெடிகல் சர்விஸ் அமைப்பு வழங்கியது. இந்த அமைப்பினர் பிரதேச வாழ் மக்களின் நன்மை கருதி பல்வேறு இலவச வைத்திய சேவைகளையும் வழங்கி வருகின்றது. பாணந்துறை ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து இலவச கிளினிக் சேவைகளையும் இரத்ததான நிகழ்வுகளையும் இந்த அமைப்பு மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி கல்லூரியின் இரண்டாவது வருட நிகழ்வாக இடம்பெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 1990 முதல் 2022 வரையிலான பழைய மாணவர் குழாம் அணிகளாக போட்டியில் கலந்து கொண்டனர்.

---

## அநுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர் சங்க ஏற்பாட்டில் கௌரவிப்பு

திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் ஊடக விருது (ஹரசர சம்மான பிரணாம) விருது வழங்கும் விழா ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது. அநுராதபுரம் மாவட்டத்தின் ஊடக செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள திறமையான ஊடகவியலாளர்களை மதிப்பிட்டு, கௌரவப்படுத்துவதே இதன் நோக்கமாகும். இதன்படி மாவட்ட ஊடகவியலாளர்களிடமிருந்து, பிரசுரமான அச்சு ஊடக செய்திகள், கட்டுரைகள், ஒலி, ஒளி பரப்பான செய்திகளை இதற்காக முன்வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. நிபுணர் குழு ஒன்றின் பரிசீலனைக்கு பிறகு, சிறந்த செய்திகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படும் என மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அநுராதபுர மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் எவ்வாறான செய்திகளை தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதை எதிர்காலத்தில் தெரிவிக்குமெனவும் சங்கம் தெரிவிக்கின்றது.

### வட மத்திய மாகாணத்தைச் சேர்ந்த

# நான்கு கல்விப் பணிப்பாளர்கள் கட்டாய விடுமுறையில்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

இடமாற்றக் கட்டளைப்படி உரிய நிலையங்களில் கடமையேற்காத வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த நான்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம், கெக்கிராவ, பொலன்னறுவை மற்றும் ஹிங்குராக்கொட ஆகிய நான்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களே கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளனர். குறித்த இடமாற்றங்களை மேற்கொண்டால் இலங்கை கல்வி நிர்வாக சேவை தொழிற்சங்க சட்டம் மற்றும் கடுமையான நடவடிக்கையில் ஈடுபடுவதாக தெரிவித்திருந்தனர்.

இடமாற்றம் செய்யப்பட்டுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்க மறுப்புத் தெரிவித்தனர்.

பணிப்பாளர்கள் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் குற்றப்பத்திரம் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. வெற்றிடமாகவுள்ள பணிப்பாளர் பதவிக்கு பதில் கடமை பணிப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.


## பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| 06/13/20/27 டிசம்பர் 2023 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 06/13/20/27 டிசம்பர் 2023 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 02/05/12/19 டிசம்பர் 2023 | இல. 134, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 02/05/12/19 டிசம்பர் 2023 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 07/14/21/28 டிசம்பர் 2023 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 07/14/21/28 டிசம்பர் 2023 | இல. 865, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கண்டி. |
| 01/04/11/18 டிசம்பர் 2023 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE

இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.


## இலங்கை துறைமுக அதிகார சபை

### அறிவித்தல்

### அகற்றப்பட்ட சிரட்டைகளை விற்பனை செய்தல்.

கொழும்பு – 13, கொச்சிக்கடையில் அமைந்த இலங்கை துறைமுக அதிகாரசபையின் மத்திய சமையலறையிலிருந்து அகற்றப்படும் சிரட்டைகள் (ஒரு வாரத்துக்கு சுமார் 500 கிலோ கிராம்) 2023.12.01 ஆம் திகதி முதல் 2024.11.30 ஆம் திகதி வரையான கால எல்லையினுள் விற்பனை செய்வதற்கு விலைகள் கோரப்படுகின்றன.

இது தொடர்பான நிபந்தனைகள் உள்ளடங்கிய குறித்த விண்ணப்பங்களை மீண்டும்செலுத்தப்படாத ரூபா 1000/= தொகையை அதிகாரசபைக்கு செலுத்தி, கொழும்பு –13, கொச்சிக்கடை, மத்திய சமையலறை பிரிவின் சிரேஷ்ட முகாமையாளரின் (உணவு பானங்கள்) அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

விலைகள் குறிப்பிடப்பட்டு முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்களை 2023.11.22 ஆம் திகதிக்கு முன் சமையலறை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இட வேண்டும். டென்டர் பத்திரங்களை பொறுப்பேற்றல் அத்தினத்தில் 10.00 மணிக்கு நிறைவு செய்யப்படுவதோடு, அதன் பின் உடனடியாக டென்டர் பெட்டி திறக்கப்படும். டென்டர் திறக்கும் சந்தர்ப்பத்திற்கு குறித்த டென்டர் விண்ணப்பதாரிகளுக்கு பங்குகொள்ள முடியும். தெரிவு செய்யப்படும் டென்டர்தாரருக்கு அது தொடர்பாக பின்னர் பதிவுத்தபாலில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலதிக விபரங்கள் 2434557,2482831, 2482797,2483283,2483409 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான முகாமையாளர் (நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்)**
**நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதி**

## 'குழந்தைகளின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்போம்'

### – மனித அபிவிருத்தி தாபன திட்ட இணைப்பாளர் தெரிவிப்பு

குழந்தைகளை பாதுகாப்போம், அவர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்போம், உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் குழந்தைகள்.

எனவே, அவர்கள் போர்கள், கலவரங்கள் மற்றும் போராட்டங்கள் மற்றும் இயற்கை பேரழிவுகளில் அதிகம் பாதிக்கப்படுவதாக மனித அபிவிருத்தி தாபனத்தின் திட்ட இணைப்பாளர் திருமதி. பொ. லோகேஸ்வரி தெரிவித்தார்.

சிறுவர் தினத்தை முன்னிட்டு மனித அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் தெல்தோட்டை, பிரதேசத்தில் நடைபெற்ற சிறுவர்தின வைபவத்தின் போது பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

குழந்தைகளின் வாழும் உரிமை, வளர்ச்சி, பாதுகாப்பு மற்றும் பாகுபாட்டிற்கு எதிராக பாதுகாப்பதற்கான பொறுப்புக்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் மற்றும் அரசிடம் உள்ளது.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடமாகின்றது. தற்போது, நான்காவது பரம்பரையினரும் லயன் அறையிலேயே வாழ்கின்றனர்.

நாட்டின் ஏனைய சமூகங்களில் உள்ள சிறார்களின் பெற்றோருக்கு அகாணி மற்றும் வீட்டுரிமை காணபடுகிறது. ஆனால், நாம் லயன் அறையிலேயே வாழ்கின்ற ஆதங்கம் அல்லது கவலை மலையக சிறுவர்களின் மத்தியில் அவதானிக்கக்கூடிய விடயமாகவுள்ளது. மலையக சிறுவர்கள் குழந்தைத் தொழிலாளியாக செல்வதற்கு மேற்படி விடயமும் ஒரு காரணமாகவுள்ளதாகவும் அவர் தனது உரையில் தெரிவித்தார்.

## கேள்விக்கான அழைப்பு

### மாவட்ட பொது வைத்தியசாலை எம்பிலிப்பிட்டிய

### சீர்படுத்தல் பிரிவிற்கு தேவையான டிரக்ஷன் டேபிள் (Traction Table) ஒன்றை வழங்குதல், நிறுவுதல்,செயற்படுத்திக் காட்டுதல் மற்றும் பராமரித்தல்

### விடய இல : DGH/EMB/F06/11/2023/01

எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவரால், இவ் வைத்தியசாலையின் சீர்படுத்தல் பிரிவிற்கு டிரக்ஷன் டேபிள் (Traction Table) ஒன்றை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்திக் காட்டுதல், மற்றும் பராமரித்தலுக்கு உதவியை பெற்றுக் கொள்வதற்காக தகைமையுள்ள இலங்கை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02. தேசிய போட்டி கேள்வி முறைமை மூலம் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுவதுடன் சகல கேள்விதாரர்களும் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத சித்திகரமான கேள்விதாரர்களாக இருத்தல் வேண்டும். ஆர்வம் காட்டுகின்ற திறன் மற்றும் தகைமையுள்ள (CDDA/NMRA) கேள்வி வைப்பாளரின் மூலம் மேலதிக தகவல்களை மற்றும் கேள்வி ஆவணங்களை எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர் (தொ.பே.இல: 0707672718) இற்கு எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கபடாத கட்டணமான ரூபா.15000.00 (பதினைந்தாயிரம்) செலுத்தி 2023.10.30 முதல் 2023.11.16 வரை வார நாட்களில் முற்பகல் 9.00 முதல் பி.ப 2.00 வரை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

03. கேள்வியுடன் சமர்ப்பிக்கவேண்டிய கேள்விப் பிணையின் கேள்விப் பெறுமதி ரூ. 600,000.00 (ஆறு இலட்சம்) ஆவதுடன் அது 2024.03.18 வரை செல்லுபடியாதல் வேண்டும். செல்லுபடியாகும் கேள்விப் பிணைக்கு அமைவாகாத எந்தக் கேள்வியும் முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.

04. சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன், வேறுவேறு உறைகளில் இட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென பெயர் குறிப்பிட்டு, மீண்டும் ஒரு உறையில் அடக்கப்பட்டு, கடித உறையில் இடது பக்கமேல் மூலையில் எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் சீர்படுத்தல் பிரிவிற்கு தேவையான டிரக்ஷன் டேபிள் (Traction Table) ஒன்றை வழங்குதல் நிறுவுதல், செயற்படுத்திக் காட்டுதல் மற்றும் பராமரித்தல் என்று குறிப்பிட்டு, எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவருக்கு 2023.11.17 பிற்பகல் 2.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன், வருகை தந்துள்ள பெயர் குறிப்பிட்டுள்ள கேள்வி வைப்பாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பிற்பகல் 2.30 இற்கு வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

05. கேள்விகோரலுக்கு பின்னரான கூட்டம் 2023.11.07 முற்பகல் 10.30 இற்கு வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். சகல கேள்விதாரர்களும் இக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

   01. எந்தக் கேள்வி சம்பந்தமாகவும் செலவுகளுக்காக இவ் வைத்தியசாலை பொறுப்புக் கூறாது. மேலும் எந்தக் கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை வைத்தியசாலை பெறுகைக் குழுவின் தலைவருக்கு உரியது.
   02. கேள்வி ஆவணங்களில் மேற்கொள்ளும் சகல மாற்றங்களின் அருகில் கேள்விதாரரால் கையொப்பமிடல் வேண்டும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை**
**எம்பிலிப்பிட்டிய**
**2023.10.27,**
**தொ.பே.இலக்கம்: 047 - 2230261**

## வெலிகம பிரதேச சபை

### 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

வெலிகம பிரதேச சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்துகொள்வதற்கு உத்தேசிக்கும் வழங்குநர்களிடமிருந்து 2023.12.30ஆம் திகதி பி.ப. 03.00 மணி வரை என்னால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். உங்களால் தயாரித்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்தில் பெயர், முகவரி, தகைமை மற்றும் ஏனைய விபரங்களைக் குறிப்பிட்டு பதிவுக் கட்டணத்துடன் நேரில் அல்லது பதிவுத் தபாலில் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் எனக் குறிப்பிட்டு செயலாளர், வெலிகம பிரதேச சபை, வெலிகம எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதல்**

1. காகிதாதிகள், அச்சிடப்பட்ட படிவங்கள், அலுவலக உபகரணங்கள்
2. மரத் தளபாடங்கள் மற்றும் உருக்குப் பொருட்கள்
3. சகல வகையான மின்சாரப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள், வீதி வெளிச்சத்திற்குத் தேவையான சகல உபகரணங்கள்
4. வீதிகளை அமைப்பதற்கான பொருட்கள் மற்றும் கட்டிடப் பொருட்கள் (செங்கல், கல், மணல், அனைத்து அளவுகளிலுமான கருங்கற்கள், கிரவல் மண், கற் தூள், சிப் கல் மற்றும் ஏனைய பொருட்கள்)
5. பொதுவான களஞ்சியப் பொருட்கள் (இரும்பு போன்றன)
6. கணனி இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள்
7. வாகன உதிரிப்பாகங்கள் வழங்குதல்
8. டயர், டியூப் மற்றும் பெட்டறி வழங்குதல்
9. நீர்க்குழாய் உபகரணங்கள் (பீவீசீ குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்)
10. ஆயுதங்கள் மற்றும் கருவிகள் (மண்வெட்டி, வீச்சுக்கத்தி, கத்தி, சவல் போன்றன)
11. ஹியூம் குழாய்கள், கொங்கிறீட் தூண்கள், சீமெந்து, சீமெந்து சார்ந்த உற்பத்திகள்
12. சீ. ஆர். என். (சீ.எஸ்.எஸ். 1 தார்)
13. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் விளையாட்டு முற்ற உபகரணங்கள்
14. சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்கள்
15. தும்புத்தடி, ஈர்க்கில், பிரஷ்கள், முஸ்னா, கால்துடைப்பம், குப்பைத் தொட்டிகள்
16. குப்பை வண்டி, வீல் பரோ, அலுமினிய ஏணி
17. நிறப்பூச்சு, வார்னிஷ், கம், பிரஷ்
18. பெயர்ப் பலகைகள், சமிஞ்ஞை பலகைகள் மற்றும் பதாகைகள் வரைதல், இறப்பர் முத்திரை
19. குப்பை பீப்பாய்கள் (பிளாஸ்டிக், கொங்கிறீட், தகரம்)
20. டயர், டியூப் திருத்தவேலைகள் மற்றும் மாற்றுதல்
21. கேட்டரிங் சேவைகளை வழங்குதல்
22. மரம் வெட்டுபவர்கள் / நீர்க்குழாய் பொருத்துநர்கள்
23. வாகனம் மற்றும் இயந்திராதிகளை வாடகைக்கு வழங்குதல் (ஜெனரேட்டர், ஆயுதங்கள் மற்றும் கருவிகள் உட்பட)
24. அச்சு வேலைகள்
25. கணனி இயந்திரங்கள், தட்டச்சுப் பொறிகள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், கணித்தல் பொறிகள், உருக்குக் கெபினட், மேசை போன்றவற்றின் திருத்தவேலைகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்
26. டிராக்டர், டிரேலர், கெப், பகோ, கலி பவுசர் உட்பட வாகன திருத்தவேலைகள்
27. கெப், பெகோ, கலி பவுசர், டிராக்டர் உட்பட வாகன சேர்விஸ் வழங்குதல்
28. வீட்டு வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள்
29. நிளஅளவை சேவைகள்
30. சட்டத்தரணி சேவைகள்

**நிபந்தனைகள்**

1. மேற்கூறப்பட்ட 14ஆம் இலக்கம் முதல் 23ஆம் இலக்கம் வரைக்குமானவற்றுக்கு 500.00 ரூபாவும் ஏனைய உருப்படிகளுக்கு (1 - 13 மற்றும் 29) 1000.00 ரூபா எனும் வகையில் செயலாளர், வெலிகம பிரதேச சபை, வெலிகம எனும் பெயருக்கு எழுதப்பட்ட காசோலையுடன் உங்களால் தயாரித்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்தை வியாபாரப் பதிவுச் சான்றிதழ் மற்றும் பொருட்கள் வழங்கும் விபரங்கள் சகிதம் அனுப்பி பதிவு செய்துகொள்ளலாம். (இதன் பொருட்டு காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)
2. மேற்கூறப்பட்ட வழங்கல் மற்றும் சேவைகளுக்காக விண்ணப்பிக்கும்போது உங்களால் வெலிகம பிரதேச சபைக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.
3. பதிவு செய்துகொண்ட வழங்குநர்களிடமிருந்து பொதுவாக விலைகள் கோரப்படும் என்பதுடன் விலைகளை குறைந்தபட்சம் ஆறு மாத காலத்திற்கு மாறாமல் (06) நிலையாக வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் தேவையென உணரும் வேளைகளில் ஏனைய வழங்குநர்களிடமிருந்து பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
4. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் 041-2254287 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வெலிகம பிரதேச சபைக்கு 2024ஆம் வருடத்தில் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்.

வெலிகம பிரதேச சபையினால் 02 மில்லியன் ரூபாவிற்கு உட்பட்ட ஒப்படைக்கப்படும் நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வசிப்பவர்கள் மற்றும் பதிவு செய்துகொண்ட நிறுவனங்கள் 2024ஆம் வருடத்திற்காக பதிவு செய்துகொள்ளப்படும்.

**நிபந்தனைகள்:**

1. ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்துகொள்வதற்கு 2000.00 ரூபா கட்டணம் அறவிடப்படும். விண்ணப்பப் படிவத்தை 2023-12-30ஆம் திகதிக்கு முன் பதிவுக் கட்டணத்திற்காக செயலாளர், வெலிகம பிரதேச சபை எனும் பெயருக்கு எழுதிய காசோலை சகிதம் அனுப்பி அல்லது ரொக்கப் பணமாகச் செலுத்தி பதிவு செய்துகொள்ளலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல் - 2024 எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். (இதன் பொருட்டு காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)
2. 02 மில்லியன் ரூபாவிற்குக் குறைந்த பெறுமதியைக் கொண்ட ஒப்பந்தக்காரர்கள் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வசிப்பவர்கள் அல்லது பதிவு செய்துள்ள நிறுவனங்கள் மட்டுமே ஒப்பந்தகாரர்களாகப் பதிவு செய்யப்படுவர்.
3. CIDA (ICTAD) நிறுவனத்தில் பதிவுசெய்து கொண்டவர்களானால் பதிவுச் சான்றிதழின் பிரதியையும், அவ்வாறல்லாத நபர்களானால் அல்லது நிறுவனமானால் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை தமது நிதி வளங்கள், பௌதிக வளங்கள் மற்றும் இயலுமை தொடர்பான ஆவணங்களின் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. விண்ணப்பப் படிவத்தை வெலிகம பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தின் வேலை பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**சந்திமா பீ. ஹெட்டிவத்த,**
**செயலாளர்,**
**பிரதேச சபை, வெலிகம.**

## பெறுகை அறிவித்தல்

### கழிக்கப்பட்ட வாகனங்கள் / வாகன கழிவுகள் விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல்

### மாகாண சுகாதாரத் திணைக்களம் (மே.மா)

இத்திணைக்களத்தின் கீழ் காணப்படும் நிறுவனங்களுக்குச் சொந்தமான கீழே இலக்கங்கள் குறிப்பிடப்படும் கழிக்கப்பட்ட வாகனங்கள் / வாகன கழிவுகளை விற்பனை செய்வதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**வாகன கழிவு அகற்றல்**

| தொடர் இலக்கம் | வாகனம் | வகை | நிறுத்தப்பட்டுள்ள இடம் | தொ.பே.இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | PB - 7078 | கெப் - மைக்ரோ | பாணந்துறை ஆதார வைத்தியசாலை | 038 - 2232261 |
| 02 | PB - 4556 | வேன் - மிட்சுபிஷி | பாணந்துறை ஆதார வைத்தியசாலை | 038 - 2232261 |
| 03 | TE - 6767 | மோட்டார் சைக்கிள் TVS | பாணந்துறை ஆதார வைத்தியசாலை | 038 - 2232261 |
| 04 | UA - 0990 | மோட்டார் சைக்கிள் பஜாஜ் | பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவு அங்கொடை | 011-2452440 |

**வாகன கழிவாக கழிவகற்றல்**

| தொடர் இலக்கம் | வாகனம் | வகை | நிறுத்தப்பட்டுள்ள இடம் | தொ. பே.இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | 51-7401 | வேன் - மிட்சுபிஷி | பாணந்துறை ஆதார வைத்தியசாலை | 038 - 2232261 |
| 02 | 226-2115 | நோயாளர் காவு வண்டி - மிட்சுபிஷி | பாணந்துறை ஆதார வைத்தியசாலை | 038 - 2232261 |
| 03 | PB - 8782 | கெப் - மைக்ரோ | பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவு - அங்கொடை | 011 - 2452440 |
| 04 | KA - 4233 | மோட்டார் வாகனம் - டாட்டா | பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவு - அங்கொடை | 011 - 2452440 |
| 05 | NA - 7787 | வேன் - மைக்ரோ | பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவு - அங்கொடை | 011 - 2452440 |
| 06 | PB - 0971 | வேன் - மைக்ரோ | பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவு - அங்கொடை | 011 - 2452440 |
| 07 | AAE - 5967 | முச்சக்கர வண்டி - பஜாஜ் | பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவு - அங்கொடை | 011 - 2452440 |

02. மேற்படி வாகனம்/வாகன கழிவுகள் 2023.10.27 முதல் 2023.11.09 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.8.30 முதல் பி.ப.3.30 வரை அவ்வாகன/வாகன கழிவுகளில் முன்னில் உள்ள இடங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

03. ஒரு வாகனம்/வாகன கழிவுக்காக ரூ.300/- மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணம் மற்றும் ரூ.1500/- மீளளிக்கப்படும் வைப்புத்தொகையை செலுத்தி கேள்வி விண்ணப்பங்களை 2023.10.27 முதல் 2023.11.09 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.8.30 முதல் பி.ப.3.00 வரை த.பெ.876, மாளிகாவத்த செயலகம், கொழும்பு -10 என்ற முகவரியில் அமைந்துள்ள மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையில் நிதி உதவியாளருக்கு காசு செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

04. பொறியிடப்பட்ட கேள்விகளை 2023.11.10 மு.ப.10.00 அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு தலைவர், திணைக்கள பெறுகைகுழுவிற்கு மேற்படி முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டு வந்து அம்முகவரியில் அமைந்துள்ள பிரதிப்பணிப்பாளர் (நிர்வாகம்) இன் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

05. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் காலம் முடிவடைந்தவுடன் 2023.11.10 மு.ப.10.00 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். சமர்ப்பிக்கப்படும் கேள்விகளை காசாக 50% ஐ செலுத்தி மிகுதித்தொகையை அன்று அல்லது கேள்விகள் திறக்கப்படும் தினம் முதல் ஒரு தினத்திற்குள் செலுத்தி முடித்தல் வேண்டும். முழுத்தொகையையும் செலுத்தியவுடன் வாகனம்.'.வாகன கழிவுகளை அகற்றிக்கொள்ளல் வேண்டும்.

06. கிடைக்கப்பெற்றுள்ள கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன், கமிட்டியின் தீர்மானம் இறுதித்தீர்மானமாகும். இதுபற்றிய மேலதிக விபரங்கள் தேவைப்படின், தொ.பே.இல - 0112478868/011-2434660 மாகாண சுகாதர சேவை பணிப்பாளர் பணிமனையில் பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) /நிர்வாக அதிகாரியை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**மருத்துவர் தம்மிக்காஜயலத்**
**தலைவர், திணைக்கள பெறுகைக்குழு,**
**மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் (மே.மா),**
**மாளிகாவத்த, கொழும்பு - 10.**


## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

BHS-2087 Honda dio, 2018, Motor cycle கூடிய விலைக்கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210810 069310

YE - 4366 Bajaj, 2010, Qj-9733 Bajaj, 2007, threewheel. கூடிய விலைக்கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0705999163. 069301

YP-8990 Bajaj, 2011, YL-7099 Bajaj, 2011 threewheel. கூடிய விலைக்கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210810 069298

Repeat Your ad For Better Offers

## 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்தல்

# பெல்மடுள்ள பிரதேச சபை

2024ஆம் வருடத்தில் ''முதலாவது அட்டவணையில்'' குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், சேவை வழங்கல் மற்றும் நிர்மாண ஒப்பந்தங்களுக்கு தகுதியுடைய உற்பத்தியாளர்கள், நிறுவனங்கள் மற்றும் நபர்களைப் பதிவு செய்வதற்கு பின்வரும் நிபந்தனைகளின் கீழ் 2023.12.01ஆம் திகதி வரை என்னால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. வழங்குநர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களாக பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற நபர்களினால் அதன்பொருட்டு பின்வரும் ''இரண்டாவது அட்டவணையில்'' தரப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் மூலம் 2023.12.01ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் குறித்த விண்ணப்பத்தை ''தலைவர், பெல்மடுள்ள பிரதேச சபை, பெல்மடுள்ள'' என்ற முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 2024'' எனக் குறிப்பிடவும்.
02. அதேபோல் 2024ஆம் வருடத்தில் வழங்குநர்களாகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க எதிர்பார்க்கும் உருப்படிக்கு முன்னால் குறிப்பிட்டிருக்கும் பதிவுக் கட்டணத்தை ''செயலாளர், பெல்மடுள்ள பிரதேச சபை'' என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசோலை அல்லது பணமாக செலுத்த வேண்டும் என்பதோடு, காசுக் கட்டளை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
03. ஒரு விண்ணப்பப் படிவத்தில் ஒரு சேவை, வழங்கல் அல்லது ஒப்பந்த உருப்படிக்கு மாத்திரமே பதிவு செய்ய முடியும். பல உருப்படிகளுக்கு பதிவு செய்தவற்கு எதிர்பார்ப்பதாயின் வெவ்வேறான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
04. இது தொடர்பான விபரங்கள் தேவையெனில் பின்வரும் அலுவலக தொலைபேசி இலக்கத்திற்கு அழைக்கவும்.

**தொ.பே. 045-2274375 தொலைநகல் - 045-2274993**

**2023.10.25 ஆம் திகதி**
**பெல்மடுள்ள பிரதேச சபை அலுவலகம்**

**ஆர்.கே. கபில ஜகத் குணதிலக்க,**
**செயலாளர்,**
**பெல்மடுள்ள பிரதேச சபை**

**முதலாம் அட்டவணை**

| உருப்படி இலக்கம் | வழங்கல் மற்றும் சேவை | வைப்புக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| | பொருட்கள் | |
| 01 | அனைத்து அலுவலகக் காகிதாதிகள், நுகர்வுப் பொருட்கள், துப்புரவு பொருட்கள் | 2000.00 |
| 02 | அலுவலக இயந்திரங்கள், ரோணியோ இயந்திரம், புகைப்படப்பிரதி இயந்திரம் | 2000.00 |
| 03 | கணினி இயந்திரம் (இறக்குமதி/ பிணைக்கப்பட்ட) மற்றும் துணைப்பாகங்கள் (மென்பொருள்/ வன்பொருள்) | 2000.00 |
| 04 | அலுவலக மரத் தளபாடங்கள் மற்றும் உருக்குப் பொருட்கள் | 2000.00 |
| 05 | மின் மற்றும் இலத்திரனியல் துணைப்பாகங்கள், வளிச்சீராக்கிகள் | 2000.00 |
| 06 | அனைத்து மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டீசல்/ பெட்ரோல்/ நிர்மாண இயந்திரங்கள்) | 2000.00 |
| 07 | டயர், டியுப் மற்றும் பெட்டரி | 2000.00 |
| 08 | இறப்பர் சீல்/ திகதி முத்திரை மற்றும் பெயர்ப் பலகை வழங்கல் மற்றும் தயாரித்தல் | 2000.00 |
| 09 | உணவு மற்றும் உபசாரங்களுக்குத் தேவையான பொருட்கள் | 2000.00 |
| 10 | அலுவலகப் பை மற்றும் தோல் பொருட்கள் வழங்கல் | 2000.00 |
| 11 | நிர்மாணப் பொருட்கள் (சீமெந்து, இரும்பு, சுண்ணாம்பு, தரையோடு, நிறப்பூச்சு) முதலியன. | 2000.00 |
| 12 | நிர்மாணப் பொருட்கள் (கல், உலோகம், மணல், செங்கல், சீமெந்துக்கல், செட்டலின் பலகை, ஓடுகள், மூங்கில், தென்னம் ஓலை மற்றும் விறகு) | 2000.00 |
| 13 | நிர்மாணப் பணிகளுக்காக பெறுகின்ற வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் (லொரி, ட்ரக்டர், டிப்பர், பெகோ மற்றும் கனரக இயந்திரம்) | 2000.00 |
| 14 | ஏனைய வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெறல் (முச்சக்கரவண்டி, கெப் வண்டி, மோட்டார் சைக்கிள்) | 2000.00 |
| 15 | இரசாயனப் பொருட்கள் (உரம், கிருமி நாசினி மற்றும் வெடி மருந்துகள், உராய்வு நீக்கி மற்றும் சகல வகையான உராய்வு நீக்கி எண்ணெய்கள்) | 2000.00 |
| 16 | அரிந்த மரம் வழங்கல் (பலகை, பராலை, ரீப்பை வகைகள்) | 2000.00 |
| | சேவைகள் | |
| 17 | மோட்டார் வாகனங்களின் அனைத்து திருத்தவேலைகள் (டீசல்/ பெட்ரோல் வாகனங்கள், நிர்மாண இயந்திரங்கள்) | 2000.00 |
| 18 | மோட்டார் வாகன குஷன் வேலை மற்றும் ஹுட் வேலைகள் | 2000.00 |
| 19 | வாகனங்களை சேர்விஸ் செய்தல் | 2000.00 |
| 20 | அலுவலகத்தின் அனைத்து இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் | 2000.00 |
| 21 | தளபாடங்களின் திருத்தவேலைகள் | 2000.00 |
| 22 | கடைசல் இயந்திர வேலை, உருக்கியொட்டல் வேலை, ஹைட்ரோலிக்ஸ் ஹோஸ் திருத்தவேலைகள் | 2000.00 |
| 23 | மின்சார திருத்தவேலைகள் (ஏசி/டீசீ – வாகனங்கள், அலுவலகம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லம்) | 2000.00 |
| 24 | வளிச்சீராக்கி, குளிர்சாதனப்பெட்டி பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் (அலுவலகம்/ வீடு/ வாகனம்) | 2000.00 |
| 25 | அலுமினியத்தால் செய்கின்ற நிர்மாண வேலைகள் | 2000.00 |
| 26 | உபசார செயற்பாடுகளுக்குத் தேவையான சேவைகளை வழங்கல் | 2000.00 |
| 27 | தீயணைப்பு உபகரணங்களைப் பொருத்துதல், பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல் | 2000.00 |
| 28 | திரைச்சீலை, மேசை விரிப்பு, சீருடை துணி மற்றும் சேலை வழங்கல் | 2000.00 |
| 29 | நில அளவையாளர், சட்டத்தரணி, கட்டிடக் கலைஞர், பொறியியலாளர் சேவைகளை வழங்கல் | 2000.00 |
| 30 | தகனச்சாலை பழுதுபார்ப்புகள் மற்றும் அது சார்ந்த சேவைகள் | 2000.00 |
| 31 | புகைப்படம் மற்றும் அச்சு சேவை வழங்கல் | 2000.00 |
| 32 | வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கல் | 2000.00 |
| 33 | வாகன சீட் குஷன் செய்தல் | 2000.00 |
| 34 | மரம் வெட்டுதல் | 2000.00 |
| | | |
| | நிர்மாணம் மற்றும் ஒப்பந்தம் | |
| 35 | ரூபா 50000.00 வரை | 2000.00 |
| 36 | ரூபா 50001.00 தொடக்கம் 100000.00 வரை | 2500.00 |
| 37 | ரூபா 100001.00 தொடக்கம் 500000.00 வரை | 3000.00 |
| 38 | ரூபா 500001.00 தொடக்கம் 1000000.00 வரை | 3500.00 |
| 39 | ரூபா 1000000.00க்கு மேல் | 4000.00 |

**இரண்டாவது அட்டவணை**

**பெல்மடுள்ள பிரதேச சபை**
**2024ஆம் வருடத்தில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்**
**விண்ணப்பப் படிவம்**

01. விண்ணப்பதாரரின்/ நிறுவனத்தின் பெயர்: ..........
02. விண்ணப்பதாரரின்/ நிறுவனத்தின் முகவரி: ..........
03. விண்ணப்பதாரரின்/ நிறுவனத்தின் தொலைபேசி/ தொலைநகல் இலக்கம்: ..........
04. விண்ணப்பதாரரின்/ நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரி: ..........
05. பதிவு செய்ய எதிர்பார்க்கும் வழங்கல்/ சேவை/ ஒப்பந்தம்: ..........
குறித்த உருப்படியின் இலக்கம் மற்றும் பெயர் (முதலாவது அட்டவணையின் பிரகாரம்)
06. வியாபாரத்தின் வர்த்தகப் பெயர்: ..........
07. விண்ணப்பதாரரின்/ நிறுவனத்தின் பதிவு: ..........
தொடர்பான விபரம்: (குறித்த ஆவணங்களின் பிரதிகளை இணைக்கவும்) ..........
08. VAT / NBT பதிவு தொடர்பில் விபரம்:
(உரிய ஆவணங்களின் பிரதிகளை இணைக்கவும்) ..........
09. வழங்கும் அதிகபட்ச கடன் எல்லை மற்றும் காலம் (நாட்கள்) ..........
10. அனுபவம் தொடர்பான விபரம்: (இணைப்பு ஒன்றின் மூலம் சமர்ப்பிக்கவும்) ..........
11. நிர்மாண மற்றும் ஒப்பந்தத் துறையில் பதிவு: ..........
(குறித்த ஆவணங்களின் பிரதிகளை இணைக்கவும்) ..........
12. நடைமுறை கணக்கு தொடர்பில் விபரம்
(கணக்கின் பெயர் மற்றும் வங்கிக் கிளை) ..........
13. பதிவுக்காக செலுத்தப்பட்ட தொகை/
காசோலை இலக்கம்/ திகதி மற்றும் வங்கிக் கிளை: ..........

என்னால் மேலே வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையான மற்றும் சரியான தகவல்கள் என்பதை உறுதி செய்கிறேன். 2024ஆம் வருடத்தில் பெல்மடுள்ள பிரதேச சபையில் வழங்கல்/ சேவை/ஒப்பந்ததாரராக பதிவு செய்யுமாறு தயவுடன் வேண்டிக்கொள்கின்றேன்.

..........
விண்ணப்பதாரரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

திகதி: ..........


# பதுளை மாவட்டத்திற்கு மீண்டும் சிவப்பு எச்சரிக்கை

*(ஊவா சுழற்சி நிருபர்)*

பதுளை மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக தேசிய கட்டட ஆய்வு நிலையம் மற்றும் இடர் முகாமைத்துவ மையம் மீண்டும் சிவப்பு எச்சரிக்கையினை விடுத்துள்ளது.

அண்மைக்காலமாக பதுளை மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக தொடந்தும் இரண்டாம் கட்ட சிவப்பு எச்சரிக்கையினை தேசிய கட்டட ஆய்வு நிலையம் மற்றும் இடர் முகாமைத்துவ மையம் இவ்வறிவித்தலை விடுத்துள்ளது.


## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகார சபை
### விலைக்கோரலுக்கான அழைப்பு

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 1. | தெற்கு அதிவேக வீதியின் அதிவேக வீதி செயற்பாடுகள், முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புப் பிரிவின் கஹதுடுவ முதல் கொடகம வரையான பகுதிக்கு பாதுகாப்பு சேவையை வழங்குதல் கேள்வி இல. RDA/EOM&M/Sec-Ser/SE/2023 /39 |
| 2. | தெற்கு அதிவேக வீதியின் அதிவேக வீதி செயற்பாடுகள், முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புப் பிரிவின் கொட்டாவ முதல் கொடகம வரையான பகுதிக்கு சுத்திகரிப்பு சேவையை (சுத்திகரிப்பாளர்கள் மட்டும்) வழங்குதல் கேள்வி இல. RDA/EOM&M/CLS/SE/2023/40 |

மேற்கூறப்பட்ட பெறுகைக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-10-30ஆம் திகதி முதல் 2023-11-20ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், EOM&M பிரிவின் பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**



# நிக்கவரட்டிய பிரதேச சபை

## 2024ஆம் வருடத்தில் நிக்கவரட்டிய பிரதேச சபையில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்துகொள்ளல்

இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்து கொள்ள விரும்பும், தகுதியுள்ள, வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்" எனக் குறிப்பிட்டு 2023.11.30ஆம் திகதிக்கு முன் 'செயலாளர், பிரதேச சபை, நிக்கவரட்டிய' என்ற முகவரிக்கு நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

**பொருட்கள் மற்றும் சேவைகள்**

01. மின்சாரப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்
02. காகிதாதிகள் வழங்குதல்
03. அச்சு வேலைகளை மேற்கொள்ளல்
04. அலுவலகத் திரைச்சீலைகளைத் தைத்தல் மற்றும் பொருத்துதல்
05. நீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்குதல், திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல்
06. அலுவலக உபகரணங்கள் வழங்குதல்
07. கணனி, புகைப்படப் பிரதி இயந்திரம், வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்குதல்
08. கணனி, புகைப்படப் பிரதி இயந்திரம், வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள்
09. புகைப்படப் பிரதி இயந்திரம் மற்றும் அச்சுப்பொறிகளுக்குத் தேவையான டோனர் வகைகள் வழங்குதல்
10. PVC குழாய்கள் மற்றும் ஏனைய நீர்க்குழாய் துணைப்பாகங்களை வழங்குதல்
11. நிர்மாணப் பொருட்கள் வழங்குதல் (சீமெந்து, சிப்கல், கற்தூள், ஆற்று மணல், சகல அளவுகளிலுமான கம்பி வகைகள் போன்றன)
12. ஒப்பந்த சேவைகளை வழங்குதல்
13. வாகன திருத்தவேலைகள் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல்
14. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
15. வாகனங்களுக்கான டயர், டியூப், பெட்டறி வழங்குதல்
16. சிறுவர் பூங்காக்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல்
17. காணி அளத்தல் மற்றும் மதிப்பீட்டுச் சேவைகளை மேற்கொள்ளல்
18. உணவு மற்றும் பான வகைகள் வழங்குதல்
19. தார் மற்றும் கோலாஸ் வழங்குதல்
20. உருக்கியொட்டும் வேலைகளை மேற்கொள்ளல்
21. சுகாதார உபகரணங்கள் வழங்குதல் (கையுறைகள், குப்பை வண்டிகள், தும்புத்தடி, ஈர்க்கிள், வீல் பெரோ, மலசலகூட தூரிகைகள் வழங்குதல்)
22. தகனச்சாலைக்கு எரிவாயு வழங்குதல் மற்றும் தகனச்சாலை திருத்தவேலைகளை மேற்கொள்ளல்
23. கொட்டவெஹெர கொங்கிறீட் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் கொங்கிறீட் பொருள் வகைகளை வாடகை அடிப்படையில் உற்பத்தி செய்தல்

**இயைபுடைய நிபந்தனைகள்**

01. வழங்குநர்களைப் பதிவு செய்யும் கால வரையறை 2023-11-01ஆம் திகதி முதல் 2023-11-30ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்.
02. விண்ணப்பங்கள் கோரும் இறுதித் தினத்தின் பின்னரான ஓர் நாளில் மேற்கொள்ளும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
03. ஒவ்வொரு பொருள் மற்றும் சேவை வகைகளுக்காக வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் ஒரு விண்ணப்பத்திற்கான கட்டணமாக 1500.00 ரூபா அறவிடப்படும்.
04. பதிவுக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 மணி வரை இவ்வலுவலகத்திற்கு செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு அல்லது 'செயலாளர், பிரதேச சபை, நிக்கவரட்டிய' என்ற பெயரில் காசோலை அல்லது காசுக்கட்டளையை அனுப்பி கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.
05. வழங்குநர்களால் சமர்ப்பிக்கப்படும் விலைகள் குறைந்தபட்சம் 30 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் 30 நாள் கால எல்லைக்கு கடன் பற்றுச்சீட்டு அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
06. தேவையான வேளைகளில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்குப் புறம்பாக ஏனைய வழங்குநர்களிடமிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
07. இதன்பொருட்டு தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் உங்கள் மாதிரி விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**நிக்கவரட்டிய பிரதேச சபையின் பதிவு செய்யும் வழங்குநர்களுக்கு இருக்க வேண்டிய மூலப்பிரமாணங்கள்**

01. கூட்டுத்தாபனம், தனிநபர் வியாபாரம், நிறுவனமொன்றானால் அதற்காக பதிவு செய்த பதிவுச் சான்றிதழ் இருக்க வேண்டும்.
02. இதற்கு முன் அரசாங்க நிறுவனத்திற்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கியிருத்தல் விசேட தகைமையாகும்.
03. வாகன திருத்தவேலைகளுக்கு வடமேல் மாகாண சபையில் பதிவு செய்துள்ள மோட்டார் வாகன திருத்தகமானால் விசேட தகைமையாகும் என்பதுடன் இதற்கு முன் அரசாங்க நிறுவனத்திற்கு சேவை வழங்கிய அனுபவம் வாய்ந்த நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.
04. வேண்டப்படும்போது விலைகளைச் சமர்ப்பிக்காத மற்றும் கட்டளை வழங்கப்பட்டவுடன் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் வழங்குநர்கள் மற்றும் உரிய தரத்தைக் கொண்ட பொருள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பதிவு இரத்துச் செய்யப்பட்டு அபகீர்த்தியாளர் பட்டியலில் சேர்க்கப்படும்.

**ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்**

01. ஒப்பந்தக்காரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA/ ICTAD) கட்டிடங்கள் மற்றும் வீதி அபிவிருத்தி துறையில் பதிவு செய்தவராக இருத்தல் வேண்டும்.
02. ஒப்பந்த நிறுவனங்களுக்கு இயைபுடைய பதிவு மற்றும் இயலுமை தொடர்பான சான்றிதழ்களின் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் தேவையான வேளையில் மூலப் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**எச்.எம்.எம்.பீ. ஹேரத்,**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**நிக்கவரட்டிய.**

**2023-11-26ஆம் திகதி**
**நிக்கவரட்டிய பிரதேச சபை அலுவலகத்தில்**
**விசாரணைகள்: 037-2260275/ 0372260125**

**மாதிரி விண்ணப்பப்படிவம்**
**நிக்கவரட்டிய பிரதேச சபை**

**2024ஆம் வருடத்தில் நிக்கவரட்டிய பிரதேச சபையில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்து கொள்வதற்கான விண்ணப்பம்**

01. வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களின் பெயர் :..........
02. முகவரி :..........
03. தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி :..........
04. வழங்குவதற்கு உத்தேசிக்கும் பொருள் வகை அல்லது சேவை மற்றும் இயைபுடைய இலக்கம் :..........
05. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் / காசோலை இலக்கம் / காசுக்கட்டளை இலக்கம் :..........

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையெனவும், வழங்குநர்கள் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்து கொள்வது தொடர்பான நிபந்தனைகளுக்கும் உடன்படுகின்றேன்.

.......... ..........
**திகதி** **கையொப்பம்**






கொழும்பு 12, புதுக்கடை ஜாமிஉல் அஷ்ரப் ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபை ஏற்பாட்டில், புதுக்கடை பகுதியில் 2022 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சித்தியடைத்த மாணவர்கள் மற்றும் புதுக்கடையைச் சேந்த மரண விசாரணை அதிகாரி சட்டத்தரணி அஷ்ரப் ரூமி ஆகியோருக்கு பாராட்டு வைபவம் கடந்த செவ்வாய்கிழமை (24) இஷா தொழுகையின்பின் பள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர் அல்ஹாஜ் அக்ரம் ஷெரீப் தலைமையில் நடைப்பெற்றபோது. படங்கள் – ருஸைக் பாரூக்

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 3000 சம்பள அதிகரிப்பு வேண்டும்

## ஐக்கிய தொழிலாளர் ஒன்றிய தலைவர்

*(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)*

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பள அதிகரிப்பு மற்றும் 200 வருட நிறைவுக் கொண்டாட்டங்கள் என்பன தற்போது நகைப்புக்கிடமான விடயங்களாக மாறியுள்ளன என இலங்கை ஐக்கிய தொழிலாளர் ஒன்றிய தலைவர் எஸ். திருச்செல்வன் குற்றம் சாட்டுகிறார்.

தொழிலாளர் சங்கத்தின் ஊடக சந்திப்பு காவத்த தலைமை காரியாலயத்தில் (29) நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 2019ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்களுக்கான 1000 ரூபா சம்பள அதிகரிப்பு முன்மொழியப்பட்டது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் இந்தப் பணத்தினால் வாழ்க்கை நடத்த முடியாது. எனவே தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த சம்பளம் 2500 ரூபா முதல் 3000 ரூபாவாக அதிகரிப்படல் வேண்டும். இவ்விடயத்தை நாம் அரசாங்கத்தினதும் தோட்ட கம்பெனிகளினதும் அவதானத் துக்கு முன்வைக்கிறோம். அத்துடன் தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டுக்கு வருகை தந்து 200 ஆண்டுகள் நிறைவும் கொண்டாடப்படுகிறது. இதனை நாம் கண்டிக்கிறோம்.

எமது சமூகம் இங்கே வருகை தந்து இருநூறு ஆண்டுகள் கடந்து விட்டது. ஆனால் எமது உரிமைகள் கிடைக்க வேண்டிய சலுகைகள் தொடர்பில் நாம் திருப்தியடைய முடியாது. எனவே தோட்ட தொழிலாளர் சமூகத்தில் உரிமைகள் நிறைவேறிய ஒரு காலகட்டத்தில் நாம் இக்கொண்டாட்டங்களை கொண்டாடுவோம். தற்போதைய கொண்டாட்டங்கள்

முக்கியத்துவமானவையாக தென்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# விஞ்ஞான கல்விக் கண்காட்சி



*(அக்குறணை குறூப் நிருபர்)*

மாணவர்களுக்கு மத்தியில் விஞ்ஞான ரீதியிலான சிந்தனைகளை அதிகரிக்கும் நோக்கில் கண்டி மாவட்டத்தில் உள்ள வத்துகாமம் கல்வி வலய, பரணகம மஹா வித்தியாலயத்தில் விஞ்ஞான கல்விக்கண்காட்சியொன்று (28) ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் வத்துகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி தரங்கா குணரத்ன பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் பாடசாலையைச் சேர்ந்த மாணவிகளின் கண்காட்சியும் நடைபெற்றதுடன். பெருந்திரளானோரும் கண்காட்சியை கண்டுகளித்தனர்.

# புத்தளம் – முந்தல் சிறுகடலில் மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகிறது

## மீனவர்கள் கவலை தெரிவிப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் முந்தல் சிறுகடலில் கடந்த இரண்டு நாட்களாக மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருவதனால் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவிகின்றனர்.

அந்த வகையில் முந்தல், கொத்தாந்தீவு, கட்டைகாகாடு, வட்டவான், பூனைப்பிட்டி, ஆண்டிமுனை உள்ளிட்ட சிறுகடலை உள்ளடக்கிய பல பகுதிகளில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மீன்கள் இறந்து கரை ஒதுங்கியுள்ளன.

இதன் காரணமாக இந்த சிறுகடலை நம்பி ஜீவனோபாயத் தொழிலான கடற்றொழிலை நம்பி வாழும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் தமது மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளாத்தி, செத்தல், மன்னா, திலாப்பியா மற்றும் விரால் உள்ளிட்ட பல வகையான மீன்களே இவ்வாறு இறந்த நிலையில் கரையொதுங்குவதாக மீனவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இவ்வாறு, மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்குவது தொடர்பில் புத்தளம் மாவட்ட நீரியல் வளத்துறை அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் ஆர்.எம். பி.கே.ரணதுங்கவிடம் கேட்ட போது, கடந்த காலங்களில் முந்தல் சிறுகடலில் நீரில் உப்பின் தன்மை குறைவடைந்துள்ளதனாலேயே மீன்கள் இறப்பதற்கான காரணம் எனத் தெரிவித்தார்.



# காத்தான்குடி பாலிகா மாணவி கௌரவிப்பு



கொழும்பு கல்வி அபிவிருத்தி மன்றம் 19ஆவது வருடமாக நடாத்தும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வை நாடளாவியரீதியில் நடாத்தி வருகிறது.

கிழக்கு மாகாணத்திற்கான வைபவம் நேற்று முன்தினம் ( 28 ) ஹிஸ்புல்லாஹ் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் காத்தான்குடி பாலிகா மகா வித்தியாலயத்தின்மூலம் பரீட்சையில் சித்தியடைந்த விசேட தேவையுடைய மாணவி எம்.எப். அஸீமாவை தென்கிழக்கு பல்கலைக்கழக கணக்கியல் துறை பீடாதிபதி பேராசிரியர் டாக்டர் ஏ.எம்.எம். முஸ்தபா, காத்தான்குடி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எம். ஜாகிர் ஆகியோர் பரிசு வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம். (படம் : எம்.கே.எம்.அஸ்வர்)


# கைத்தொழில் அமைச்சு

## கம்பெனிகள் பதிவாளர் திணைக்களம்

### கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்கான அறிவித்தல்

கம்பெனிகள் பதிவாளர் திணைக்களத்தில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகளுள் சில கம்பெனிகள் ஒவ்வொரு வருடமும் சமர்பிக்க வேண்டிய வருடாந்த அறிக்கைகளை (15/15A படிவங்கள்) சமர்ப்பிப்பதற்கு தவறியுள்ளமை பற்றி அவதானிக்கப்பட்டுள்ளது.

கூட்டிணைக்கப்பட்ட அணைத்துக் கம்பெனிகளும் கம்பெனிகள் சட்டத்தின் 133(1) ஆவது பிரிவின் அடிப்படையில் வருடாந்த பொதுக் கூட்டத்தினை நடாத்தி (15/15A படிவங்களின் ஊடாக) 30 வேலை நாட்களுக்குள் உரிய கட்டணத்தினைச் செலுத்தி வருடாந்த அறிக்கையினை கம்பெனிகள் பதிவாளர் நாயகத்திற்கு சமர்பித்தல் வேண்டும். வருடாந்தப் பொதுக் கூட்டம் நடாத்தப்படுவதில்லையெனில் கம்பெனிகள் சட்டத்தின் 144(3) ஆவது பிரிவின் அடிப்படையில் செயல்பட்டு 30 வேலை நாட்களுக்குள் வருடாந்த அறிக்கையினை கம்பெனிகள் பதிவாளர் நாயகத்திற்கு சமர்பித்தல் வேண்டும்.

கம்பெனிகள் சட்டத்தின் 133(1) ஆவது பிரிவின் அடிப்படையில் செயல்படாத ஒவ்வொரு கம்பெனிகளுக்கும் கம்பெனிகள் சட்டத்தின் 133(6) ஆவது பிரிவின் அடிப்படையில் ரூபா.100,000/- க்கு மிகையாகாத தண்டப்பணமும், மேலும் இவ்வாறான தவறுகள் இடம்பெறும் கம்பெனிகளின் ஒவ்வொரு அதிகாரிகளுக்கும் (பணிப்பாளர்கள்) ரூபா. 50,000/- க்கு மிகையாகாத தண்டப்பணமும் விதிக்கப்படும்.

ஆகையால் குறிப்பிட்ட கால எல்லைக்குள் வருடாந்த அறிக்கைகளைச் சமர்பிக்குமாறு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட சகல கம்பெனிகளினது பணிப்பாளர்களுக்கும், செயலாளர்களுக்கும், விளம்பரதாதர்களுக்கும் மற்றும் ஆர்வமுள்ள பிற தரப்பினர்களுக்கும் இத்தால் அறிவுறுத்தப்படுவதோடு, வருடாந்த அறிக்கைகளைச் சமர்பிக்கத் தவறுகின்றவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளும் செயற்பாடு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

**சஞ்ஜீவ திசாநாயக**
**கம்பெனிகள் பதிவாளர் நாயகம்**
**கம்பெனிகள் பதிவாளர் திணைக்களம்**



# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண ஆயுர்வேதத் திணைக்களம்

### பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் – 2024
### துப்புரவேற்பாட்டுச் சேவைகளை வழங்குதல் – 2024

ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் பின்வரும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் மாகாண மருந்து உற்கபத்தியகங்களுக்கு 2024ஆம் வருடத்தில் பாதுகாப்பு சேவைகள் மற்றும் துப்புரவேற்பாட்டுச் சேவைகளை வழங்குவதற்கு திறந்த விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

01. இத்திணைக்களத்தினால் வழங்கப்படும் விலைக்கோரல் மாதிரிப்படிவங்கள் மூலம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
02. ஒவ்வொரு சேவைக்காகவும் மீளளிக்கப்படாத விலைக்கோரல் விண்ணப்பக் கட்டணத்திற்கு இயைபான பெறுமதியை ஆயுர்வேத திணைக்களத்திற்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. ஒவ்வொரு சேவைக்காகவும் மீளளிக்கப்படும் விலைமனுப் பிணைக் கட்டணத்திற்கு இயைபான பெறுமதியை ஆயுர்வேத திணைக்களத்திற்கு ரொக்கப்பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் அல்லது விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் நாளில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் இயைபுடைய பெறுமதிக்கு 90 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வங்கிப் பிணை முறியொன்றை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. விலைமனுக்களை 2023-10-31ஆம் திகதி முதல் 2023-11-21ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணியில் வார நாட்களில் ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| நிறுவனம் | பாதுகாப்பு சேவைகள் வழங்குதல் | | | | துப்புரவேற்பாட்டுச் சேவைகள் வழங்குதல் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஊழியர்களின் எண்ணிக்கை | | மீளளிக்கப்படும் விலைக் கோரல் பிணைக் கட்டணம் | மீளளிக்கப்படாத விலை மனுப் படிவக் கட்டணம் | ஊழியர்களின் எண்ணிக்கை | மீளளிக்கப்படும் விலைக் கோரல் பிணைக் கட்டணம் | மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக் கட்டணம் |
| | பகல் | இரவு | | | | | |
| மாகாண ஆயுர்வேத வைத்தியசாலை – தியத்தலாவ | 5 | 3 | 37,000.00 | 1,500.00 | 8 | 54,000.00 | 1,500.00 |
| மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை – மெதகம | 2 | 2 | 18,000.00 | 1,500.00 | 5 | 46,000.00 | 1,500.00 |
| மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை – கிரிஇப்பன்வெவ | 3 | 3 | 28,000.00 | 1,500.00 | 3 | 40,000.00 | 1,500.00 |
| மாகாண மருந்து உற்பத்தியகம் - மிரிஸ்வத்த | 2 | 2 | 18,000.00 | 1,500.00 | 1 | 12,000.00 | 1,500.00 |
| கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை – பல்லகெட்டுவ | 2 | 2 | 18,000.00 | 1,500.00 | 2 | 14,000.00 | 1,500.00 |
| கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை – ஓலுகங்தொட்ட | 1 | 1 | 9,000.00 | 1,500.00 | 2 | 14,000.00 | 1,500.00 |
| கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை – மஸ்பன்ன | 2 | 1 | 14,000.00 | 1,500.00 | 3 | 26,000.00 | 1,500.00 |
| கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை – பத்தலயாய | 1 | 1 | 9,000.00 | 1,500.00 | 1 | 11,000.00 | 1,500.00 |
| கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை – புத்தள | 1 | 1 | 9,000.00 | 1,500.00 | 2 | 16,000.00 | 1,500.00 |
| கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை – லுணுகல | 1 | 1 | 9,000.00 | 1,500.00 | 1 | 8,000.00 | 1,500.00 |
| கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை – வெலியாய | 1 | 1 | 9,000.00 | 1,500.00 | 1 | 9,000.00 | 1,500.00 |
| சிறுநீரக நோய் ஆராய்ச்சி மற்றும் நிவாரண ஆயுர்வேத வைத்தியசாலை - பத்தலயாய | 2 | 1 | 14,000.00 | 1,500.00 | 2 | 19,000.00 | 1,500.00 |
| மொத்தம் | 23 | 19 | 192,000.00 | 18,000.00 | 31 | 269,000.00 | 18,000.00 |

05. விண்ணப்பதாரர் இலங்கை வியாபாரப் பெயர் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவுபெற்ற நிறுவனமாகவோ அல்லது நபராகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் இயைபுடைய சான்றிதழை விலைமனு ஆவணத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
06. விண்ணப்பதாரரின் வியாபாரத் தன்மையானது பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் / துப்புரவேற்பாட்டுச் சேவைகளை வழங்குவதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் 2023.12.31ஆம் திகதியன்று பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் / துப்புரவேற்பாட்டுச் சேவைகளை வழங்குவதில் ஆகக்குறைந்தது 03 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். அனுபவத்தை உறுதி செய்வதற்கு இயைபான ஆவணங்களை விலைமனு ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. சம்பளச் சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதாகவும் அவர்களுக்கான ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பை செலுத்தியமைக்கான ஆவணச் சாட்சிகளை சமர்ப்பிக்க முடியுமாகவிருத்தல் வேண்டும்.
08. 2023-09-30ஆம் திகதியின் பின் பிரதேச செயலாளரினால் விநியோகிக்கப்படும் சொத்துச் சான்றிதழின் (பொது 170 மாதிரி) மூலப் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பெறுமதி மேற்படி ஒவ்வொரு சேவைக்காகவும் ஐந்து இலட்சம் ரூபாவிற்குக் (500,000.00) குறையாததாகவிருத்தல் வேண்டும். இரண்டு சேவைக்கும் விண்ணப்பிப்பதாயின் பத்து இலட்சம் ரூபாவிற்குக் (1,000,000.00) குறையாததாகவிருத்தல் வேண்டும்.
09. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு நகல்களிலான விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என இரு பிரதிகளில் வெவ்வேறு உறைகளில் இட்டு, பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''துப்புரவேற்பாட்டுச் சேவைகளை வழங்குதல் / பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் - …………'' வைத்தியசாலையின் / நிறுவனத்தின் பெயரைக் குறிப்பிட்டு 2023-11-22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, ஊவா மாகாண ஆயுர்வேதத் திணைக்களம், தியத்தலாவ எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது திணைக்களத்தின் கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடுவதன் மூலம் சமர்ப்பிக்கலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023-11-22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுற்ற உடனடுத்து துப்புரவேற்பாட்டுச் சேவை மற்றும் பாதுகாப்புச் சேவை விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் அச்சந்தர்ப்பத்தில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.
10. சமர்ப்பிக்கப்படும் கேள்விகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அல்லது அதன் பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையை திணைக்களத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch
Acc. No. 000000377
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk

# 2016 இல. 10 ஹோமியோபதி சட்டத்தின் ஹோமியோபதி மருத்துவ சபைக்கு அங்கத்தவர்களை தேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்பதாரிகளை பெயர் குறிப்பிடுதல்

“2016 இல. 10 ஹோமியோபதி சட்டத்தின் ஹோமியோபதி மருத்துவ சபைக்கு அங்கத்தவர்களை தேர்ந்தெடுப்பதற்காக விண்ணப்பதாரிகளை பெயர் குறிப்பிடுதல்” 2023.09.15 தினமின, தினகரன், டெயிலிநியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்படும் பெயர்களை முன்மொழிதல் மற்றும் பொது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் பற்றிய எதிர்ப்புக்கள் இருப்பின் அவற்றை சமர்ப்பிக்கும் கால எல்லை 2023.11.20 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கிறேன்.

02. குறித்த அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய விடயங்கள் தொடர்ந்தும் மாற்றமின்றி காணப்படுவதாக மேலும் தெரிவிக்கிறேன்.

**செயலாளர்,**
**சுகாதார அமைச்சு,**
**சுவசிரிபாய, இல. 385, வணபத்தேகம, விமலவங்ஷ ஹிமிமாவத்த**
**கொழும்பு - 10**

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

“2024 ஆம் ஆண்டுக்காக கட்டுநாயக்க மற்றும் இரத்மலானை விமானப் போக்குவரத்திற்கான விநியோகப் பிரிவில் 19 லீற்றர் குடிநீர் போத்தல்களின் வழங்கல், விநியோகம் மற்றும் மீள்நிரப்பல்”

**B/43/2023**

2024 ஆம் ஆண்டுக்காக கட்டுநாயக்க மற்றும் இரத்மலானை விமானப் போக்குவரத்திற்கான விநியோகப் பிரிவில் 19 லீற்றர் குடிநீர் போத்தல்களின் வழங்கல், விநியோகம் மற்றும் மீள்நிரப்பலுக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (இ.பெ.கூ.) சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட தகைமை மற்றும் தகுதி அளவுகோலை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000.00 ரூபாவை (ரூபா 848.36+2.5% SSCL+ தொகுதி ஒன்றுக்கு VAT 15%) செலுத்திய பின் எழுத்துமூல கோரிக்கை ஒன்றில் கொழும்பு 09, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இல. 609, 1ஆவது மாடி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, முகாமையாளரின் அலுவலகத்தில் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்) இருந்து 2023.11.16 ஆம் திகதி வரை 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை வேலை நாட்களின் விலைமனு ஆவணங்களை பெற முடியும் அல்லது http ://ceypetco.gov.lk/public-tenders/ என்ற இ.பெ.கூ. இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

அனைத்து விலைமனுக்களும் 2023.11.17 ஆம் திகதி மூடப்படுவதோடு அதன் பின் முகாமையாளர் அலுவலகத்தில் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்) திறக்கப்படும்.

(ஏதேனும்) தெளிவை பெறுவதற்கு hasintha@ceypetco.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரி அல்லது 0115855415 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இயந்திர பொறியியலாளரை தொடர்பு கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**C/o முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியங்கள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆவது மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 09.**
**தொ.: 011 5455335, தொலைநகல் - 011 5455424**

# பெறுகை அறிவித்தல்

## மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு
## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

“முத்துராஜவலவில் இ.பெ.கூ. வளவுக்காக வாகனத் தரிப்பிடத்தின் கூரையை சீரமைத்தலுக்கான” விலைமனு

**B/42/2023**

“முத்துராஜவலவில் இ.பெ.கூ. வளவுக்காக வாகனத் தரிப்பிடத்தின் கூரையை சீரமைப்பு” ஒப்பந்தத்திற்காக கடந்த காலத்தில் இதனையொத்த அனுபவத்தைக் கொண்ட விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (இ.பெ.கூ.) சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட தகைமை மற்றும் தகுதி அளவுகோலை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000.00 ரூபாவை (ரூபா 848.36 + 2.5% SSCL + தொகுதி ஒன்றுக்கு VAT 15%) செலுத்திய பின் எழுத்துமூல கோரிக்கை ஒன்றில் கொழும்பு 09, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இல. 609, 1ஆவது மாடி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, முகாமையாளரின் அலுவலகத்தில் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்) இருந்து 2023.11.16 ஆம் திகதி வரை 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை வேலை நாட்களின் விலைமனு ஆவணங்களை பெற முடியும் அல்லது http ://ceypetco.gov.lk/public-tenders/ என்ற இ.பெ.கூ. இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

அனைத்து விலைமனுக்களும் 27,000.00 ரூபா தொகைக்கு விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2023.11.17 ஆம் திகதி 1400 மணிக்கு மூடப்படுவதோடு விலைமனு மூடப்படும் திகதிக்குப் பின்னர் கீழ் தரப்பட்டுப்பட்டுள்ள முகவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமையாளரின் அலுவலகத்தில் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்) அவை உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**C/o முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியங்கள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆவது மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09.**
**தொ.: 011 5455335, தொலைநகல் - 011 5455424**

The Housewives' companion
Classifieds on
Daily News

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகம்

# சுற்றாடல் அமைச்சு

## வாடகைக்கு அல்லது குத்தகைக்கு அலுவலக இடவசதியைப்பெற்றுக்கொள்ளல் மொனராகலை பிரதேச அலுவலகம்

இந்தப் பணியகத்தின் மொனராகலை பிரதேச அலுவலகத்திற்காக கட்டிடமொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளது. அக்கட்டிடம் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

- உரிய உள்ளூராட்சி நிறுவனத்தின் முறையான அனுமதியைப் பெற்றக் கட்டிடமாக இருத்தல் வேண்டும்.
- 3000 சதுர அடிக்கு மேற்பட்ட பரப்பளவைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்
- ஆகக் குறைந்தது 04 எண்ணிக்கையான அறைகள் இருத்தல் வேண்டும்.
- ஆகக் குறைந்தது 02 உள்ளக மலசலகூடமும் வெளியே 01 மலசலகூடமும் இருத்தல் வேண்டும்.
- குழாய் நீர், மின்சார, தொலைபேசி வசதிகள் இருத்தல் வேண்டும்.
- மொனராகலை மாவட்டச் செயலக இடப்பரப்பிலிருந்து 2.5 கி.மீற்றருக்குள் இலகுவாக அடையக்கூடிய பாதை சகிதமான இடத்தில் அமைந்திருத்தல் எல்லையினுள் அமைந்திருத்தல்.
- படலை சகிதம் பாதுகாப்பு வேலி / மதில் இருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் 05 வாகனங்களையாவது நிறுத்தி வைக்கக்கூடிய வசதி இருத்தல் வேண்டும்.
- அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலப் பரப்பபை முழுமையாக பணியகத்திற்கு வழங்குதல் வேண்டும் என்பதுடன் வேறு தேவைப்பாடுகளுக்கு பெற்றுக்கொள்ள முடியாது.

‘‘மொனகராலை பிராந்திய அலுவலகத்திற்காக கட்டிடமொன்றை வாடகை அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கான விலைமனு’’ எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு குறித்த இடத்தின் காணி உறுதிப் பிரதி, காணித்துண்டின் நிலஅளவைப் படத்தின் பிரதி, கட்டிடத்தின் உரிமையாளருடன் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்துடன் 2023-11-13ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் குறித்த பிரதேச அலுவலகத்திற்கான விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது தலைமை அலுவலகத்தில் வரவேற்புப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். இந்தக் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**கவனிக்க வேண்டியது:**

1. விண்ணப்பங்களிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டிடமானது பணியகத்திற்கு குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் கொடுக்கப்படும் போது அக்கட்டிடம் அனர்த்தம், களவு, கொள்ளை மற்றும் தீ அபாயம் பொருட்டு காப்புறுதி செய்யப்படுதல் உரிமையாளரின் பொறுப்பாகும்.
2. கட்டிடத்தின் உரிமையாளரினால் சமர்ப்பிக்கப்படும் விலைகள் மீண்டும் அரசாங்க மதிப்பீட்டுக்கு முற்படுத்தப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகம்,**
**இல. 569, எப்பிட்டிமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**

# இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப்பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/23/PT/21/006 | PA Conference Audio / Video System Equipment | 80,000.00 | 1,000.00 | **14/11/2023 13.30** மணி |
| CMS/LP/23/PT/08/068 | 01 No. Annual License Renewal of Firewall Protection for Local Area Network | 50,000.00 | 1,000.00 | **23/11/2023 13.30** மணி |
| CMS/LP/23/PT/08/050 | 82 Nos. Split Type Air Conditioners | 750,000.00 | 12,500.00 | **23/11/2023 13.30** மணி |
| CMS/LP/23/PT/23/015 | 01 No. Line Printer | 70,000.00 | 1,000.00 | **23/11/2023 13.30** மணி |
| CMS/LP/23/PT/10/062 | 150 Nos. of Sealed Type Battery 12V 150 AMPH (Semi – Maintenance Free) | 93,000.00 | 1,000.00 | **24/11/2023 13.30** மணி |
| CMS/LP/23/PT/14/062 | 1500 PKT Welding Rods MS GEN.PUR.8 SWG 4MM, 5KG PKT | 30,000.00 | 1,000.00 | **24/11/2023 13.30** மணி |
| CMS/LP/23/PT/16/062 | 49000 Nos. Carbolic Soap (100 GRAMS) | 51,000.00 | 1,000.00 | **24/11/2023 13.30** மணி |
| CES/LP/23/PT/07/032 | Upgrading of CCTV Systems | 100,000.00 | 3,500.00 | **27/11/2023 13.30** மணி |
| CES/LP/22/PT/12/053 | MS Plate LR " A" 6000MM X 1500MM X 6MM – 10 Nos. | 65,000.00 | 1,000.00 | **27/11/2023 13.30** மணி |
| CMS/LP/23/PT/15/052 | 40 Nos. Wheel Rim Tubeless Size 8.25 X 22.5 ISO | 25,000.00 | 1,000.00 | **27/11/2023 13.30** மணி |
| CMS/LP/23/PT/05/051 | 32656 Engine Oil for Caterpillar C -15 Engine 3E – 9840 | 581,500.00 | 12,500.00 | **28/11/2023 13.30** மணி |
| CMS/LP/23/PT/14/065 | Spares for Allison Transmission | 45,000.00 | 1,000.00 | **28/11/2023 13.30kzp** |
| CMS/LP/23/PT/05/062 | 10 Nos. MS Plates 2400 X 1200X16 MM | 19,000.00 | 1,000.00 | **28/11/2023 13.30** மணி |
| CMS/LP/23/PT/15/053 | 10 Nos. PVC Piston Type Hydraulic Pumps for Spreader and Steering System | 25,000.00 | 1,000.00 | **29/11/2023 13.30** மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டவரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (பிசிஏ 03 படிவம்) சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதியிலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 011-2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# மீகஹகிவுல பிரதேச சபை

## 2024ம் ஆண்டிற்கான குறைநிரப்பு வரவு செலவுத் திட்ட அறிக்கையை பரிசீலித்தல் சார்பான பொதுமக்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்

1987 இல. 15 பிரதேச சபை சட்டத்திற்கு அமைவாக மற்றும் 2020 வரவு செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் செயற்படுத்தல் வீதியின் பிரகாரம் 2024ம் ஆண்டில் குறைநிரப்பு வரவு செலவுத்திட்ட அறிக்கை 2023.10.31 முதல் 2023.11.08 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் சுகாதார வழிகாட்டல் ஆலோசனைகளுக்கு உட்பட்டு அதிகார பிரதேசத்தின் பொதுமக்களுக்கு பரிசீலித்துப் பார்ப்பதற்காக அலுவலக வளாகம் மற்றும் மக்கள் நூலக வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

**டி.எம்.கே.டி. திஸாநாயக்க,**
**சபை செயலாளர்,**
**மீகஹகிவுல பிரதேச சபை**

# கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை

## (நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு)

## கப்பல் தள கழிவுப் பொருட்கள் அகற்றும் சேவை 2024 ஆம் ஆண்டுக்காக சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2008 இன் 35 ஆம் இலக்க கடல் மாசு தடுப்பு சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் மூலம் பின்வரும் பிரிவுகளில் கப்பல் தள கழிவுப் பொருட்களை அகற்றும் (கொழும்பு மற்றும் ஏனைய வர்த்தகத் துறைமுகங்களில் இயங்கும்) சேவை வழங்குநர்கள் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையுடன் (MEPA) பதிவு செய்வதற்கு கோரப்படுகின்றனர்.

a. எண்ணெய் கழிவு
b. குப்பை
c. கழிபொருள்

**சேவை வழங்குநர்களுக்கான தகைமை அளவுகோல்**

(கடல்சார் சூழல் பாதுகாப்பு (கழிவு அகற்றும் வசதிகள்) ஒழுங்குவிதி 2016 இன் பிரிவு 6(2))

**வைத்திருக்க வேண்டியவை:**

a) 2007இன் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் கம்பனிப் பதிவாளர் நாயகத்தின் மூலம் வழங்கப்பட்ட கூட்டிணைப்புச் சான்றிதழின் பிரதி
b) 1979இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழ் இலங்கை துறைமுக அதிகார சபை மூலம் வழங்கப்பட்ட பொருத்தமான பிரிவுக்காக ஒரு துறைமுகத்திற்குள் செயற்படும் நோக்கில் பெறப்பட்ட உரிமத்தின் பிரதி
c) கப்பல்களில் இருந்து குப்பை சேகரிக்கும் நோக்கிற்காக இலங்கை சுங்கத் திணைக்களம் மூலம் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்தின் பிரதி
d) அபாயகரமான எண்ணெய் கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், எடுத்துச்செல்லல் மற்றும் அகற்றுவதை மேற்கொள்ளும் நோக்கிற்காக 1980இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகார சபை மூலம் வழங்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட கழிவு முகாமைத்துவ உரிமம் மற்றும் அதே சட்டத்தின் 27b பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு உரிமத்தின் பிரதி
e) கழிவு எண்ணெய் களஞ்சியம், நீர் நீக்கம் அல்லது சுத்திகரிப்புக்காக மத்திய சுற்றாடல் அதிகார சபை (CEA) மூலம் வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமத்தின் (EPL) பிரதி
f) குறித்த உள்ளூராட்சி நிர்வாகம் அல்லது நிர்வாகத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு முகவர் மூலமும் வழங்கப்பட்ட திண்மக் கழிவு அகற்றுவதற்கான அனுமதியின் பிரதி
g) குறித்த உள்ளூராட்சி நிர்வாகம் அல்லது நிர்வாகத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு முகவர் மூலமும் வழங்கப்பட்ட கழிபொருள் அகற்றுவதற்கான அனுமதியின் பிரதி
h) ISO சான்றளிக்கப்பட்ட குழாய் சோதனை நிறுவனம் மூலம் வழங்கப்பட்ட முறையே எண்ணெய் அகற்றும் குழாய்களில் குழாய் சோதனை சான்றிதழின் பிரதி
i) அகற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் தொடர்பான விபரம்
j) அகற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள பயன்படுத்துவதற்காக இருக்கின்ற பாதுகாப்பு உபகரணம் தொடர்பிலான விபரங்கள்
k) தற்செயலான கசிவுகளை கட்டுப்படுத்துவதற்காக கைவசம் உள்ள பாதுகாப்பு உபகரணம் தொடர்பிலான விபரங்கள்
l) அபாயகரமான கழிவினை எடுத்துச் செல்வதற்கான உலோகத் தொட்டிகள்/வாகனங்களின் சோதனை மற்றும் மேற்பார்வை அறிக்கையின் பிரதிகள்

கடல்சார் சூழல் பாதுகாப்பு (கழிவு அகற்றும் வசதிகள்) ஒழுங்குவிதி 2016 இன் பிரிவு 6(2) இல் விதிக்கப்பட்ட அனைத்து தேவைகளும் விண்ணப்பதாரர் மூலம் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**தொடர்புடைய கட்டணங்களின் விபரம்**

(அட்டவணை III, கடல்சார் சூழல் பாதுகாப்பு (கழிவு அகற்றும் வசதிகள்) ஒழுங்குவிதி 2016)

| | | | |
|---|---|---|---|
| A | ஒழுங்கு விதி 6(1) | விண்ணப்பப் படிவக் கட்டணம் | ரூபா 1,500.00 |
| | | | |
| B | ஒழுங்கு விதி 7(2) | கொழும்பு துறைமுகத்திற்கான பதிவுக் கட்டணம் | |
| | | (i) குப்பை அல்லது கழிபொருள் மாத்திரம் | ரூபா 30,000.00 |
| | | (ii) எண்ணெய் கழிவு மாத்திரம் | ரூபா 100,000.00 |
| | | (iii) எண்ணெய் கழிவு, குப்பை அல்லது கழிபொருள் மாத்திரம் | ரூபா 120,000.00 |
| | | ஏனைய வர்த்தக துறைமுகங்களுக்கான பதிவுக் கட்டணம் | |
| | | (i) குப்பை அல்லது கழிபொருள் மாத்திரம் | ரூபா 7,000.00 |
| | | (ii) எண்ணெய் கழிவு மாத்திரம் | ரூபா 15,000.00 |
| | | (iii) எண்ணெய் கழிவு, குப்பை அல்லது கழிபொருள் மாத்திரம் | ரூபா 21,000.00 |
| | | அனைத்து துறைமுகங்களுக்குமான பதிவுக் கட்டணம் | ரூபா 175,000.00 |
| | | | |
| C | ஒழுங்கு விதி 8(1) | கப்பலில் இருந்து கழிவை அகற்றுவதற்கான கழிவு அகற்றும் அனுமதிக் கட்டணம் | |
| | | i. எந்த ஒரு கப்பலுக்காகவும் அனைத்து கழிவுகளையும் அகற்றும் பிரிவுக்காக<br>** எண்ணெய் கழிவின் அதிகபட்ச அளவான எண்ணெய் (நீர் இன்றி) ஒவ்வொரு அனுமதிக்காகவும் 5m3 இற்கு வரையறுக்கப்பட்டது என்பதோடு எண்ணெய் கழிவின் எண்ணெய் அளவு 5m3 ஐ விஞ்சினால் மேலதிக கட்டணம் அறவிடப்படும். | ரூபா 5,000.00 |
| | | 5m3 விஞ்சும் எண்ணெய் கழிவில் எண்ணெய்க்கான மேலதிக கட்டணம் | |
| | | ii. எண்ணெய் கழிவில் (நீர் இன்றி) ஒவ்வொரு 1m3 எண்ணெய்க்காக | ரூபா 1,000.00 |
| | | | |
| ஒப்பந்தக் காலம் முடியும் வரை சேவை வழங்குநரின் முகாமைத்துவ வைப்பு (மீளளிக்கக்கூடியது) | | | |
| | | i. எண்ணெய் கழிவு உட்பட கழிவு பிரிவுக்கான வைப்பு | ரூபா 300,000.00 |
| | | ii. எண்ணெய் கழிவு தவிர்த்து கழிவு பிரிவுக்கான வைப்பு | ரூபா 25,000.00 |

கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை அலுவலகத்தில் இருந்து மீளளிக்கப்படாத கட்டணம் 1,500.00 ரூபாவை செலுத்தி கப்பல் தள கழிவுப் பொருட்கள் அகற்றும் சேவைக்கான விதிகள் நிபந்தனைகளின் விபரம் மற்றும் விண்ணப்பப் படிவங்களை பெறுவதற்கு வருங்கால சேவை வழங்குநர்கள் கோரப்படுகின்றனர். அலுவலக நேரங்களில் தொடர்புடைய ஆவணங்களை பெற முடியும்.

அனைத்து தொடர்புடைய ஆவணங்கள்/ சான்றிதழ்களின் பிரதிகளுடன் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் இந்த அலுவலகத்திற்கு கிடைக்குமாறு சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பம் சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 2023 நவம்பர் 15 அன்று. விண்ணப்ப செயல்முறையின் குறைந்தபட்ச காலம் 10 வேலை நாட்களாகும்.

**தலைவர்,**
**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,**
**இல. 177, நாவல வீதி, கொழும்பு 09.**
**தொ.: 2554373/ 2554006 தொலைநகல்: 2556505**

# லஹிரு குமாரவுக்கு பதில் துஷ்மன்தவுக்கு அழைப்பு




முன் தொடை பகுதியில் உபதைக்கு உள்ளாகி இருக்கும் வேகப்பந்து வீச்சாளர் லஹிர குமார உலகக் கிண்ண தொடருக்கான இலங்கை குழாத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதில் மேலதிக வீரராக இந்தியா சென்றிருக்கும் வேகப்பந்து வீச்சாளர் துஷ்மன்த சமீர அழைக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் 3 விக்கெட்டுகளை வீழ்த்தி இலங்கை அணியின் வெற்றியை உறுதி செய்த லஹிரு குமார, நேற்று முன்தினம் நடந்த பயிற்சியின்போது இடது கால் முன் தொடை பகுதியில் வலியை உணர்ந்துள்ளார். இதனைத் தொடர்ந்து அவருக்கு செய்யப்பட்ட ஸ்கேன் சோதனையில் உபாதை ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து துஷ்மன்த சமீர இலங்கை குழாத்தில் இணைக்கப்பட்டிருப்பதோடு ஒப்புதலுக்காக சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலின் தொழில்நுட்பக் குழுவுக்கு அவரது பெயர் அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கை அணியில் ஏற்கனவே உபாதைகளால் அணித் தலைவர் தசுன் ஷானக்க மற்றும் மதீஷ பதிரண ஆகியோர் நீக்கப்பட்டு அவர்களுக்கு பதில் சாமிக்க காருணாரத்ன மற்றும் அஞ்சலோ மத்தியூஸ் இணைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அணிக்காக இதுவரை 44 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடியிருக்கும் துஷ்மன்த சமீர உபாதை காரணமாக உலகக் கிண்ண குழாத்தில் சேர்க்கப்படாத நிலையில் உடல் தகுதி பெற்றதை அடுத்து மேலதிக வீரராக அழைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முக்கிய வெற்றியை எதிர்பார்த்து இன்று ஆப்கானை எதிர்கொள்கிறது இலங்கை

உலகக் கிண்ண தொடரில் அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக இலங்கை அணி இன்று மற்றொரு முக்கியமான போட்டியில் பூனேவில் ஆப்கானிஸ்தானை எதிர்கொள்ளவுள்ளது.

உலகக் கிண்ணத் தொடரில் இந்த இரு அணிகளும் இதுவரை ஆடிய ஐந்து போட்டிகளில் 3 தோல்வி 2 வெற்றிகளோடு தலா 4 புள்ளிகளுடன் காணப்படுகின்றன. எனவே எந்தத் தயவும் இன்றி அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்துக் கொள்வதற்கு இன்றைய வெற்றி இரு அணிகளுக்கும் கட்டாயமாகும்.

இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்திருக்கும் ஆப்கானிஸ்தான் அணி எதிரணிகளுக்கு கடும் சவாலாக இருந்து வருகிறது. முதல் மூன்று போட்டிகளிலும் தோற்ற பின்னர் தொடர்ந்து இரண்டு போட்டிகளில் வென்ற உற்சாகத்துடனேயே இலங்கை இன்றைய ஆட்டத்தில் மோதவுள்ளது.

இன்றைய போட்டியில் ஆரம்ப வரிசையில் மாற்றங்கள் நிகழ வாய்ப்பு இருப்பதாக அணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆரம்ப வீரர் குசல் ஜனித் பெரேரா போதுமான அளவு சோபிக்காத நிலையில் டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன அழைக்கப்பட வாய்ப்பு உள்ளது.




அதற்கான சமிக்ஞையாக பூனே அரங்கில் அவர் நீண்ட நேரம் துடுப்பாட்ட பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

ஏற்கனவே, பத்தும் நிசங்க, சதீர சமரவிக்ரமவுடன் குசல் மெண்டிஸும் சோபித்துவரும் நிலையில் அஞ்சலோ மத்தியூஸின் வருகை மத்திய வரிசையை பலப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் பத்துவீச்சில் சோபித்த லஹிரு குமார உபாதையால் நீக்கப்பட்டுள்ள சூழலில் அவருக்கு பதில் இணைக்கப்பட்டிருக்கும் துஷ்மந்த சமீர இன்றைய தினம் களமிறங்க வாய்ப்பு உள்ளது.

இன்றைய போட்டி நடைபெறும் பூனே அரங்கு துடுப்பாட்டத்திற்கு சாதகமானது. முதல் இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் குவிக்கும் அணிகளுக்கே வெற்றி வாய்ப்பு அதிகமாக உள்ளது.

இங்கு நடைபெற்றிருக்கும் எட்டு ஒருநாள் சர்வதேச போட்டிகளில் முதலில் துடுப்பெடுத்தாடிய அணிகள் நான்கு ஆட்டங்களில் வெற்றியீட்டியுள்ளன. இங்கு முதல் இன்னிங்ஸில் பெறப்பட்ட சராசரி ஓட்டங்கள் 300 ஆகும். 2017 இல் இங்கிலாந்துக்கு எதிராக இந்தியா 351 ஓட்டங்களை துரத்தியதே அதிகமாகும். இங்கு 280 அல்லது அதற்குக் குறைவான ஓட்டங்களை முதல் இன்னிஸில் பெற்ற அணி இதுவரை வெற்றியீட்டியதில்லை. எனினும் இங்கு இலங்கை அல்லது ஆப்கானிஸ்தான் இதற்கு முன் ஒருநாள் சர்வதேச போட்டியில் ஆடியதில்லை என்பது குறிப்பித்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் 'நீண்ட, கடினமான' 2ஆம் கட்ட போரை ஆரம்பித்தது இஸ்ரேல்

## இஸ்ரேலிய படையுடன் ஹமாஸ் தரைவழி மோதல்: சமூக ஒழுங்கு சீர்குலைவு

காசாவில் ஹமாஸ் போராளிகளுக்கு எதிராக இஸ்ரேலிய இராணுவம் தரைவழி நடவடிக்கையை முன்னெடுத்திருக்கும் நிலையில் மூன்று வாரங்களாக நீடிக்கும் இந்தப் போரில் அடுத்த கட்டத்தை எட்டி இருப்பதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

காசாவில் இஸ்ரேலிய போர் விமானங்கள் தொடர்ந்து சரமாரிமாக குண்டுகளை வீசி அதன் துருப்புகள் தரைவழியாக முன்னேற முயன்று வரும் நிலையில் அங்குள்ள குடியிருப்பாளர்கள் இணையதளம் செயலிழந்து முழுமையான தொடர்பாடல் துண்டிப்பை எதிர்கொண்டுள்ளனர். தரைவழி நடவடிக்கையை விரிவுபடுத்தப்போவதாக இஸ்ரேலிய இராணுவ தளபதிகள் அறிவித்துள்ளனர்.

தொடர்பாடல்கள் முடக்கப்பட்டதால் வான் தாக்குதலுக்கு இலக்கான மக்களுக்கு உதவி கோரி அழைக்க முடியாத சூழலில் மீட்பு நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன. எவ்வாறாயினும் நேற்றுக் காலை காசாவில் தொலைபேசி மற்றும் இணையதளத் தொடர்புகள் பகுதி அளவு வழமைக்கு திரும்பின.

இஸ்ரேலின் இந்தப் போர் நடவடிக்கை 'மிக நீண்டதும் கடினமானதுமாக' அமையும் என்று எதிர்பார்ப்பதாக நெதன்யாகு கூறியபோதும் தற்போதைய போர் நடவடிக்கை காசா மீதான தரைவழி தாக்குதலா என்பது பற்றி அவர் உறுதியாகக் கூறத் தவறினார். எனினும் ஒட்டுமொத்த தலைவழி தாக்குதல் ஒன்றை நிறுத்தி வைக்கும்படி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் உதவியாளர்கள் இஸ்ரேலை வலியுறுத்தியதாக அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இஸ்ரேலிய இராணுவம் இதற்கு முன்னரும் இரவு நேரத்தில் காசாவுக்குள் இரு முறை தரைவழியாக நுழைந்தபோதும் அந்த முயற்சிகள் சில மணி நேரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதாவே இருந்தன. இஸ்ரேல் ஹமாஸ் அமைப்பினால் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் 200க்கும் அதிகமான பணயக்கைதிகளை விடுவிக்கும் முயற்சியிலேயே ஈடுபட்டுள்ளது.

“இது போரின் இரண்டாவது கட்டமாகும். அதன் இலக்கு தெளிவானது. அது ஹமாஸின் அட்சி மற்றும் இராணுவ திறனை அழித்து பணயக்கைதிகளை அழைத்து வருவதாகும்” என்று நேற்று முன்தினம் (28) செய்தியாளர்களிடம் நெதன்யாகு தெரிவித்தார்.

“நாம் இப்போது ஆரம்பித்தது மாத்திரம் தான். எதிரிகளை தரைக்கு மேலாலும் தரைக்குக் கீழாலும் அழித்தொழிப்போம்” என்றும் நெதன்யாகு தெரிவித்தார்.

இந்நிலையில் காசா பகுதியின் வடமேற்கில் இஸ்ரேலிய படையினருடன் மோதலில் ஈடுபட்டதாக அல் குத்ஸ் படையினர் குறிப்பிட்டுள்ளனர். இதன்போது இஸ்ரேலிய இராணுவத்தினருக்கு காயம் ஏற்படுத்தியதாகவும் அந்தப் பலஸ்தீன போராட்டக் குழு தெரிவித்துள்ளது. ஊடுருவும் இஸ்ரேலிய இராணுவத்தின் மீது இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் மோட்டார் ஷெல்கொண்டு தாக்குதல் நடத்தியதாக அல் குத்ஸ் படை கூறியது.

முன்னதாக இரு படையினர் காயமடைந்ததாக குறிப்பிட்ட இஸ்ரேல் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் கூறியது.

ஹமாஸ் அமைப்பின் ஆயுதப் பிரிவான இஸதீன் அல் கஸ்ஸாம் படையும் காசாவுக்குள் இஸ்ரேலிய படைகளுடன் சண்டையிட்டு வரவதாக தெரிவித்துள்ளது.

காசா மீதான முற்றுகையை இறுக்கி அங்கு மூன்று வாரங்களுக்கு மேலாக இஸ்ரேல் குண்டு மழை பொழிந்து வருகிறது. மேற்குலக நாடுகள் இஸ்ரேலின் தற்பாதுகாப்பை காரணம் காட்டி அதற்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகின்றபோதும் மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றுக்கு அனுமதிக்குமாறு சர்வதேச அளவில் அழுத்தங்களும் அதிகரித்து வருகின்றன.



**சீர்குலையும் சமூக ஒழுங்கு**

காசாவில் உள்ள ஆயிரக்கணக்கான குடியிருப்பாளர்கள் அங்கிருக்கும் ஐக்கிய நாடுகள் பலஸ்தீன அகதிகள் நிறுவனத்தின் களஞ்சியங்கள் மற்றும் விநியோக மையங்களுக்குள் அத்துமீறி நுழைந்து கோதுமை மற்றும் அடிப்படை பொருட்களை எடுத்திருப்பதான அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

“காசாவில் கடுமையான முற்றுகை மற்றும் மூன்று வாரங்கள் நீடிக்கும் போரினால் சிவில் ஒழுங்கு சீர்குலைவதற்கான அபாயகரமாக சமிக்ஞையை இது காட்டுகிறது” அந்த நிறுவனம் எச்சரித்துள்ளது.

காசாவுக்கு மட்டுப்படுத்தப்பட்ட உதவிகள் செல்லவே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் காசாவின் எகிப்துக்கான ரபா எல்லை வழியாக இதுவரை நூறுக்கும் குறைவான உதவி வாகனங்களே அனுமதிக்கப்பட்டுள்ளன.

2.3 மில்லியன் மக்கள் வசிக்கும் உலகின் அதிக சனநெரிசல் கொண்ட பகுதிகளில் ஒன்றான காசாவின் தேவை மிக அதிகமாக அருப்பதாக தொண்டு நிறுவனங்கள் எச்சரித்துள்ளன. “மக்கள் பயம், விரக்தி மற்றும் அவநம்பிக்கையில் உள்ளனர்.

தொலைபேசிகள் மற்றும் இணையதள தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால் மக்களிடையே பதற்றம் மற்றும் பயம் அதிகரித்துள்ளது” என்று ஐ.நா நிறுவனம் குறிப்பிட்டது.

காசாவில் வீடுகள், கட்டடங்கள் அனைத்தின் மீது குண்டுகள் வீசப்பட்டு வரும் நிலையில் அங்கு உயிரிழப்பு எண்ணிக்கை 8000ஐ தாண்டியுள்ளது. நேற்றுக் காலை காசாவில் உள்ள மிகப்பெரிய மருத்துவமனைக்கு அருகில் குண்டு விழுந்தது. இதனால் காசா நகரில் இருக்கும் ஷிபா மருத்துவமனைக்குச் செல்லும் வீதிகள் அழிக்கப்பட்டதாக அங்குள்ளவர்கள் தெரிவித்ததாக ஏ.பி செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

“மருத்துவமனைக்குச் செல்வது மேலும் கடினமாகி இருக்கிறது” என்று அங்கு அடைக்கலம் பெற்றிருக்கும் மஹ்மூத் அல் சவாஹ் தெரிவித்தார். இது இந்தப் பகுதியை துண்டிப்பதற்கான நோக்கம் போன்று தெரிகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அல் குத்ஸ் மருத்துவமனையில் இருப்பவர்களை அங்கிருந்து வெளியேறும்படி இஸ்ரேல் உத்தரவிட்டிருப்பதாக பலஸ்தீன செம்பிறை சங்கம் தெரிவித்துள்ளது. இந்த மருத்துவமனை மீது குண்டு வீசப்படக்கூடும் இன்று இஸ்ரேலிய அறிவிப்பில் கூறப்பட்டதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது தொடக்கம் குறைந்தது 30 மருத்துவமனைகள் மற்றும் சுகாதார மையங்கள் மூடப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மருத்துவமனைகளில் மருந்துகள் மற்றும் எரிபொருள் தீர்ந்ததை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.



மேலும் பல மருத்துவமனைகள் பகுதி அளவு மூடப்பட்டுள்ளன. நாசர் மருத்துவனையில் அவசர சிகிச்சை பிரிவு மாத்திரமே இயங்கி வருகிறது.

காசா குடியிருப்பாளர்களுக்கு சனிக்கிழமை வானில் இருந்து துண்டுப் பிரசுரத்தை வீசிய இஸ்ரேலிய விமானங்கள் வடக்குப் பகுதி தற்போது போர்க்களமாக மாறி இருப்பதால் மக்கள் அங்கிருந்து உடன் வெளியேற வேண்டும் என்று எச்சரித்துள்ளது.

மக்கள் தெற்கை நோக்கி சென்ற அவர்களுக்கு நீர், உணவு மற்றும் மருந்தனை பெற முடியும் என்று இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் டானியல் ஹகரி தெரிவித்துள்ளார்.

காசாவில் டீசல் மற்றும் பெட்ரோல் கிட்டத்தட்ட தீர்ந்துள்ள நிலையில் பெரும்பாலும் கழுதை வண்டிகளே போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. “இங்கே எந்த கார் வண்டியும் இயங்கவில்லை. எரிபொருள் இல்லாததால் நாம் போக்குவரத்துக்கு கழுதை வண்டிகளையே பயன்படுத்துகிறோம்” என்று கழுதை வண்டி ஓட்டுநரான ரபத் நஜ்ஜார் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு மேற்குக் கரையிலும் பதற்றம் அதிகரித்திருக்கும் சூழலில் இஸ்ரேலிய சுற்றிவளைப்புகளில் மேலும் மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதானல் அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 114 ஆக உயர்ந்துள்ளது.

**ஈரான் எச்சரிக்கை**

காசாவுக்கு இஸ்ரேல் துருப்புகளை அனுப்பி இருப்பது இந்தப் போர் மத்திய கிழக்கெங்கும் பரவும் அச்சுறுத்தலை அதிகரித்திருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். இஸ்ரேலின் லெபனான் எல்லையில் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பு புதிய போர் முனை ஒன்றை ஆரம்பிக்கும் அச்சுறுத்தல் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது.

இந்தப் போரில் இணைய வேண்டாம் என்று இஸ்ரேலிய எதிரிகளுக்கு அமெரிக்கா கடும் எச்சரிக்கையை விடுத்து வருவதோடு இஸ்ரேலுக்கு நெருக்கமாக கிழக்கு மத்தியதரைக் கடலில் இரு விமானதாங்கி கப்பல்களை நிறுத்தியுள்ளது.

தெற்கு லெபனானில் கடந்த சனியன்று இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களில் ஐ.நா அமைதிகாக்கு வீரர் ஒருவர் காயமடைந்துள்ளார். இஸ்ரேல் மற்றும் லெபனான் எல்லையில் இருக்கும் அமைதிகாக்கு படைகளின் தலைமையகத்தின் மீதே தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இஸ்ரேல் மற்றும் காசாவில் போர் வெடித்தது தொடக்கம் லெபனான் எல்லையில் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புகள் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகின்றபோதும் அது முழு அளவான ஒரு மோதலாக தீவிரம் அடையவில்லை.

இந்நிலையில், இஸ்ரேலின் குற்றங்கள் சிவப்புக் கோட்டை தாண்டிவிட்டதாகவும் அதற்கு எதிராக அனைவரையும் செயற்படத் தூண்டுவதாகவும் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரெய்சி, எக்ஸ் சமூகதளத்தில் நேற்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.

“அமெரிக்கா ஒன்றும் செய்ய வேண்டாம் என்று கேட்கும் அதேநேரம் இஸ்ரேலுக்கு அவர்கள் பரந்த அளவில் ஆதரவு வழங்கிறார்கள். அமெரிக்கா எதிர்ப்பாளர்களுக்கு செய்தி அனுப்புகின்றபோதும் போர்க்களத்தில் தெளிவான பதில் ஒன்று வழங்கப்படும்” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிராந்தியம் எங்கும் இஸ்ரேல் மற்றும் அதன் மேற்குல கூட்டாளிகள் மீது கோபம் திரும்பியுள்ளது. இதில் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை வைத்திருக்கும் நாடுகளும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

ஸ்தன்பூலில் ஆயிரக்கணக்கானவர்கள் பங்கேற்க பலஸ்தீன ஆதரவு போராட்டத்தில் துருக்கிய ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவான் சனிக்கிழமை உரையாற்றினார். அதில் “மேற்குலமே காசா மீதான படுகொலைகளின் பிரதான சூத்திரதாரி” என்று அவர் குற்றம்சாட்டினார்.

லண்டன், பிரான்ஸ், அமெரிக்க, இந்தியாவில் இடம்பெற்ற பலஸ்தீன ஆதரவு பேரணிகளில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

ஐக்கிய நாடுகளின் அழைப்பை அடுத்து காசா விவகாரம் குறித்து பேசுவதற்கு ஐ.நா பாதுகாப்புச் சபை இன்று (30) மீண்டும் கூடவுள்ளது. எனினும் இந்த விவகாரம் தொடர்பில் அண்மைய நாட்களில் பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட நான்கு தீர்மானங்கள் தோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது.

காசாவின் நிலைமை தொடர்ந்து போசமாகி வருவதாகவும் இந்தப் பயங்கரத்தை முடிவுக்குக் கொண்டுவர போர் நிறுத்தம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார்.

## இஸ்ரேலிய தரைப் படைகளுக்காக காத்திருப்பதாக ஹமாஸ் அறிவிப்பு

இஸ்ரேல் காசாவில் தரைவழி தாக்குதலை ஆரம்பித்திருக்கும் நிலையில் அவர்களுக்காக காத்திருப்பதாக ஹமாஸ் ஆயுதப் பிரிவான அல் கஸ்ஸாம் படையின் பேச்சாளர் அபூ ஒபைதா தெரிவித்துள்ளார்.

வீடியோ அறிக்கை ஒன்றை வெளியிட்டுப் பேசிய அவர், போதுமான மனிதாபிமான உதவிகளை அளிக்கத் தவறியிருப்பதற்கு சாடியதோடு கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்ள தவறியதற்கு இஸ்ரேல் மீது குற்றம் சாட்டினார்.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடந்த சனிக்கிழமை (28) வெளியிட்ட அறிவிப்பில், போரின் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், காசாவுக்கு தரைவழி நடவடிக்கை விரிவுபடுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த அபூ ஒபைதா, “அவர்களை நாம் தொடர்ந்து எதிர்பார்த்து வருகிறோம்” என்றார்.

“இறைவனின் பலத்தினால், அவர்களை நாம் சோதனைக்கு உட்படுத்துவோம். எதிர்பார்க்கப்படும் அல்லது பயப்படுவதை விடவும் மிகப்பெரிய தோல்வி ஒன்றை ஏற்படுத்துவோம்” என்றார்.

இதன்போது காசாவில் உள்ள பொதுமக்களுக்கு போதுமான மனிதாபிமான உதவிகளை வழங்காதது தொடர்பில் அரபு உலகையும் அவர் சாடினார்.

“அரபு நாடுகளின் தலைவர்களே நாம் உங்களுக்கு உங்களது படைகள் மற்றும் டாங்கிகளை அணிதிரட்ட கூறவில்லை, இறைவன் பாதுகாக்க, காசாவில் உள்ள அரபு மற்றும் இஸ்லாமிய சிறுவர்களை பாதுகாக்கவே கூறுகிறோம்” என்றார்.



“ஆனால், நிவாரண மற்றும் மனிதாபிமான உதவிகளை அனுப்ப முடியாத நிலையை அடைந்துவிட்டீர்களா?” என்று கேள்வி எழுப்பினார்.

ஐக்கிய அரபு இராச்சியம், ஜோர்தான் மற்றும் துனீஷியா உட்பட பல அரபு நாடுகளும் காசாவுக்கு அனுப்புவதற்காக எகிப்துக்கு உதவிப் பொருட்களை அனுப்பியுள்ளன. எனினும், ராப எல்லையை கடப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்ட உதவிகளுக்கே அனுமதி அளிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, ஒப்பந்தம் ஒன்றை எட்டுவதற்கு கைதிகள் விவகாரம் குறித்து பல்வேறு தொடர்புளை ஏற்படுத்தியதாக அபூ ஒபைதா குறிப்பிட்டார். எவ்வாறாயினும் இஸ்ரேல் உடன்பாட்டுக்கு வர முன்வராத நிலையில் அது தோல்வி அடைவதற்கு இஸ்ரேலே காரணம் என்று தெரிவித்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 30ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# இப்பாகமுவ பிரதேச சபை

## 2024ஆம் வருடத்தின் நிகழ்ச்சித்திட்ட வரவு-செலவுத் திட்ட ஆவணம்

இப்பாகமுவ பிரதேச சபையின் 2024ஆம் வருடத்திற்கான வரவு-செலவுத் திட்ட ஆவண நகல் வரைவு 2023 ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி முதல் 2023 நவம்பர் மாதம் 08ஆம் திகதி வரையில் (அரச விடுமுறை மற்றும் ஞாயிறு நாட்கள் தவிர) அலுவலக நேரத்தினுள் இப்பாகமுவ பிரதேச சபை அலுவலகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என வரவு-செலவுத் திட்ட வழங்கல்களை செயற்படுத்தும் சட்ட விதியின் 10.2 (ஆ) சட்டத்தின் பிரகாரம் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**2023 ஒக்டோபர் 31ஆம் திகதி**
**இப்பாகமுவ பிரதேச சபை அலுவலகம்,**
**இப்பாகமுவ.**

**எச்.எம். நிரோஷா ஹேரத்,**
**செயலாளர்,**
**இப்பாகமுவ பிரதேச சபை,**
**இப்பாகமுவ.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# பெறுகை அறிவித்தல்

## மாகாண சமூக சேவைகள் திணைக்களம் வடமத்திய மாகாணம்

01. வடமத்திய மாகாணத்தின் சமூக சேவைகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவராகிய என்னால் வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு 2024ஆம் வருடத்திற்கு இயைபாக 2024-01-01ஆம் திகதி முதல் 2024-06-30ஆம் திகதி வரையில் பின்வரும் வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களைத் தெரிவு செய்துகொள்வதற்காக இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இல. | வழங்கல்கள் மற்றும் சேவைகள் தொடர்பான விபரங்கள் | அளவு | 105 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி | மீளளிக்கப்படாத விலைக் கோரல் கட்டணம் |
|---|---|---|---|---|
| NCP/SS/F05/01/01-2024 | உலர் உணவுப் பொருட்களை வழங்குதல் (தானிய வகைகள்) சாலியபுர முதியோர் இல்லம் | விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவு | ரூ. 45,000/- | ரூ. 1,000.00 |
| NCP/SS/F05/01/02-2024 | உலர் உணவுப் பொருட்களை வழங்குதல் (பலசரக்கு வகைகள் மற்றும் அதுசார்ந்த உற்பத்திகள்) - சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 18,000/- | ரூ. 1,000.00 |
| NCP/SS/F05/01/03-2024 | உலர் உணவுப் பொருட்களை வழங்குதல் (கருவாடு மற்றும் பிரதியீடு உற்பத்திகள்) - சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 16,000/- | ரூ. 1,000.00 |
| NCP/SS/F05/01/04-2024 | உலர் உணவுப் பொருட்களை வழங்குதல் (பான வகைகள் மற்றும் அதுசார்ந்த உற்பத்திகள்) - சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 12,000/- | ரூ. 1,000.00 |
| NCP/SS/F05/01/05-2024 | உலர் உணவுப் பொருட்களை வழங்குதல் (மா மற்றும் பிரதியீடு உற்பத்திகள்) - சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 6,000/- | ரூ. 1,000.00 |
| NCP/SS/F05/01/06-2024 | மரக்கறி வழங்குதல் - சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 60,000/- | ரூ. 1,000.00 |
| NCP/SS/F05/01/07-2024 | பழங்கள் வழங்குதல் - சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 25,000/- | ரூ. 1,000.00 |
| NCP/SS/F05/01/08-2024 | தேங்காய் வழங்குதல் - சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 16,000/- | ரூ. 1,000.00 |
| NCP/SS/F05/01/09-2024 | மீன், கோழியிறைச்சி, முட்டை வழங்குதல் - சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 65,000/- | ரூ. 1,000.00 |
| NCP/SS/F05/01/10-2024 | அரிசி மா இடியப்பம் வழங்குதல் - சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 8,000/- | ரூ. 1,000.00 |
| NCP/SS/F05/01/11-2024 | பாண் வழங்குதல் - சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 11,000/- | ரூ. 1,000.00 |
| NCP/SS/F05/01/12-2024 | வெற்று சவப்பெட்டிகள் வழங்குதல் - சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 7,000/- | ரூ. 1,000.00 |
| NCP/SS/F05/01/14-2024 | சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குதல் (சாலியபுர மற்றும் புல்நேவ முதியோர் இல்லங்கள் மற்றும் சுவதேச நிலையம்) | மாதத்திற்கு 4500 மணித்தியாலம் | ரூ. 70,000/- | ரூ. 1,000.00 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் விலைமனுக்கள் கோரப்படும்

03. மேற்குறிப்பிடப்பட்ட வழங்கல் மற்றும் சேவைகளுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் விலைமனுதாரர்கள் ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைகள் தொடர்பில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வடமத்திய மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் 025-2224173 எனும் தொலைபேசியினூடாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் (மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணிவரை) விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பாக்கலாம்.

05. ஒவ்வொரு வழங்கலுக்காகவும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை வடத்திய மாகாண சமூக சேவையாளர் பணிப்பாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2023-10-27ஆம் திகதி முதல் 2023-11-06ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.30 மணி முதல் பி.ப. 03.30 மணி வரையில் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. மேற்படி அட்டவணையில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட 2024-03-02ஆம் திகதி வரை 105 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வடத்திய மாகாண சமூக சேவையாளர் பணிப்பாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட நிபந்தனையற்ற பிணை முறி அல்லது அந்தப் பெறுமதிக்கான பணத்தை ''வட மத்திய மாகாண சமூக சேவையாளர் பணிப்பாளர்'' பெயரில் வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை ஒவ்வொரு விலைமனுவுடனும் வெவ்வேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.

07. சகல விலைமனுக்களும் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 77 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.

08. வடமத்திய மாகாண சமூக சேவைகள் திணைக்களம், இல. 372, தர்மபால மாவத்தை, அனுராதபுரம் எனும் முகவரியில் 2023-11-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று இடம்பெறும் என்பதுடன் இதில் விலைமனுதாரர்கள் கலந்துகொள்ளலாம்.

09. ஒவ்வொரு பெறுகையின் பொருட்டும் விலைமனுக்களை இரு பிரதிகளில் தயாரித்து ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என வெவ்வேறாகக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் 'இயைபுடைய வழங்கல் வகை மற்றும் வருடம்' என்பவற்றைக் குறிப்பிட்டு 2023-11-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ''மாகாண சமூக சேவைகள் திணைக்களம், சமூக சேவைகள் திணைக்களம், இல. 372, தர்மபால மாவத்தை, அனுராதபுரம்'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது இந்தத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்ததும் சகல வழங்கல் மற்றும் சேவைகளுக்குமுரிய விலைமனுக்கள் உடன் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

10. சகல கேள்விதாரர்களும் பெறுகை அறிவுறுத்தல் படிவத்தின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படல் வேண்டும் என்பதுடன் அமைச்சுப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**பணிப்பாளர் / தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இல. 372, தர்மபால மாவத்தை,**
**அனுராதபுரம்.**
**2023-10-27.**

The Housewives' companion
Classifieds on
Daily News

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதி, போக்குவரத்து கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு, நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் கிராமிய அபிவிருத்தி அமைச்சு மேல் மாகாணம்)

### ஏ.பீ.சீ கலப்புக்கல் மற்றும் மணல் பெற்றுக்கொள்ளல்

### நீர்கொழும்பு மற்றும் அவிசாவளை மற்றும் நிறைவேற்று பொறியிலாளர் பணிமனைக்காக PRDA/WP/PRO/2023/97

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையில் கீழ்க்காணும் நிறைவேற்று பொறியியல் அலுவலகத்திற்கு தேவையான ஏ.பீ.சீ கல் (கலப்புக்கல்) மற்றும் மணல் பெற்றுக்கொள்வதற்கான திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்வி சுருக்கம்**

| தொடர் இல | அலுவலகம் | மூலப்பொருள் | அலகு | அளவு | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | காசாக அல்லது | வங்கி/ காப்புறுதி கம்பனி |
| 01 | நீர்கொழும்பு நிறைவேற்று பொறியலாளர் பணிமனைக்கு உரிய திரு. கெரவலபிட்டியவின் வீதிக்காக (வழங்கி ஒப்படைத்தல்) | ஏ.பீ.சீ கலப்பு கல் | M3 | 385 | 15,500.00 | 31,000.00 |
| 02 | அவிசாவளை நி.பொ. அலுவலகம் (வழங்கி ஒப்படைத்தல்) | ஏ.பீ.சீ கலப்பு கல் | M3 | 200 | | |
| 03 | நீர்கொழும்பு நிறைவேற்று பொறியலாளர் பணிமனைக்கு உரிய திரு. கெரவலபிட்டியவின் வீதிக்காக (வழங்கி ஒப்படைத்தல்) | ஆற்றுமணல் | M3 | 18 | | |

03. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.10.30 முதல் 2023.11.13 மு.ப 9.00 முதல் 2.30 வரை கேள்விப்படிவக் கட்டணம் ரூ. 1150.00 (அதிகார சபையின் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) உட்பட்டு, இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக கேள்விப்பிணையை காசாக பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல் 2023.11.14 மு.ப 2.30 இற்கு இவ் அலுவலகத்தில் இடம்பெறுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்**
**பெறுகைக்குழு**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)**
**இல. 59, சென் செபஸ்டியன் மேடு**
**கொழும்பு-12**
**தொ.பே இல : 011-4849825, 0114849845**

# வெளிமடை பிரதேச சபை

## டெண்டர் அறிவித்தல்

1.1 கீழ் உள்ள 1.6 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் 2024 ஆண்டிற்குரிய 2024.01.01 முதல் 2024.12.31 வரையான காலத்திற்கு வியாபார உரிமையை குத்தகைக்கு வழங்கள் தொடர்பாக அச்சிடப்பட்ட டெண்டர் பத்திரம் (விலைமனு கூறல்) 2023.11.14 ம் திகதி மு.ப. 9.00 மணி முதல் ஏற்றுக்கொள்ளப்படும்.

1.2 டெண்டர் படிவப் பத்திரம் 2023.10.31 ம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023.11.13 ம் திகதி மு.ப.10.00 மணி வரை வழங்கப்படும்.

1.3 டெண்டர் படிவப் பத்திரத்தினை இவ் அலுவலகத்திற்கு வருகைதந்து பெற்றுக் கொள்ள முடியும்.

1.4 டெண்டர் விதிமுறைகள் மற்றும் மேலதிக தகவல்களை சபைச் செயலாளரினூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

1.5 உரிய டெண்டர் படிவம் 2023.11.14 ம் திகதி மு.ப. 9.30 மணிக்கு திறக்கப்படும். டெண்டர் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

1.6 உப அட்டவனை

**டெண்டர் விலை கூறல்**

| தொ. இ | தொ. இ | இடம் | குறைந்தபட்ச ஏலம் | மீண்டும் செலுத்தும் டெண்டர் வைப்பு | மீண்டும் செலுத்தப்படாத டெண்டர் படிவக்கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | 1.6.1 | வெளிமடை புதிய வியாபார வளாகத்தில் இல. 51 கடை அறை (களஞ்சிய வசதிக்காக ) | 45,900.00 | 4,000.00 | 5,800.00 |
| 02 | 1.6.2 | வெளிமடை புதிய வியாபார வளாகத்தில் இல. 53கடை அறை (களஞ்சிய வசதிக்காக) | 45,900.00 | 4,000.00 | 5,800.00 |
| 03 | 1.6.3 | வெளிமடை புதிய வியாபார வளாகத்தில் இல. 54 கடை அறை (களஞ்சிய வசதிக்க-ாக ) | 45,900.00 | 4,000.00 | 5,800.00 |
| 04 | 1.6.7 | வெளிமடை புதிய வியாபார வளாகத்தில் இல. 59 மாட்டு இறைச்சிக் கடை | 1,919,016.00 | 10,000.00 | 5,800.00 |
| 05 | 1.6.9 | குருதலாவை பள்ளி, இல. 10 மாட்டு இறைச்சிக் கடை | 3,300,011.00 | 10,000.00 | 5,800.00 |
| 06 | 1.6.11 | குருதலாவை மஹதென்ன மாட்டு இறைச்சிக் கடை | 2,155,600.00 | 10,000.00 | 5,800.00 |
| 07 | 1.6.14 | புதிய கிழமைச்சந்தை தொகுதியில் இலக்கம் 01 F மீன் கடை | 135,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 08 | 1.6.15 | புதிய கிழமைச்சந்தை தொகுதியில் இலக்கம் 02 F மீன் கடை | 135,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 09 | 1.6.16 | புதிய கிழமைச்சந்தை தொகுதியில் இலக்கம் 03 F மீன் கடை | 135,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 10 | 1.6.17 | புதிய கிழமைச்சந்தை தொகுதியில் இலக்கம் 04 F மீன் கடை | 135,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 11 | 1.6.18 | புதிய கிழமைச்சந்தை தொகுதியில் இலக்கம் 05 F மீன் கடை | 135,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 12 | 1.6.19 | புதிய கிழமைச்சந்தை தொகுதியில் இலக்கம் 01 C சிற்றுண்டிச்சாலை | 450,000.00 | 10,000.00 | 5,800.00 |
| 13 | 1.6.20 | புதிய கிழமைச்சந்தை தொகுதியில் இலக்கம் 01 C சிற்றுண்டிச்சாலை | 450,000.00 | 10,000.00 | 5,800.00 |
| 14 | 1.6.21 | புதிய கிழமைச்சந்தை தொகுதியின் பொது மலசலக்கூடத்தின் கட்டணத்தினை அறவிடும் உரிமையினை குத்தகைக்கு விடல் | 135,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 15 | 1.6.22 | வெளிமடை மணிக்கூட்டு கோபுரத்தின் அருகில் பொது மலசலக்கூடத்தின் கட்டணத்தினை அறவிடும் உரிமையினை குத்தகைக்கு விடல் | 241,650.00 | 4,000.00 | 5,800.00 |
| 16 | 1.6.25 | கெப்படிபொல நகரில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணத்தினை அறவிடும் உரிமையினை குத்தகைக்கு விடல் | 135,000.00 | 10,000.00 | 5,800.00 |
| 17 | 1.6.26 | வெளிமடை பொது வணிக வளாகத்தில் பொது கழிப்பறை அமைப்பின் குத்தகைக்கட்டணம் | 495,000.00 | 10,000.00 | 5,800.00 |

கவனத்திற்கு 1.6.9, மற்றும் 1.6.11 உரிமை தொடர்பாக பொறுத்தமான இறைச்சிக் கடை அறைகள் டெண்டர்காரர்களால் வழங்கப்பட வேண்டியதுடன், டெண்டர் விண்ணப்பப் படிவத்துடன் பொருத்தமான கடை அறையினை தேர்வு செய்து கொண்டதாக எழுத்து மூலம் ஆதாரத்தினை முன்வைக்க வேண்டும். அனைத்து மாட்டு இறைச்சிக்கடைகள் மற்றும் ஆட்டு இறைச்சிக் கடைகளுக்கு அங்கீகாரம் பெற்ற கொலையிடல் வசதிகளை உங்களாலே வழங்கப்பட வேண்டியதோடு சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக உள்ளது என சுகாதார பரிசோதகரின் சான்றிதழை முன்வைத்தல் வேண்டும்.

**2023.10.26**
**வெளிமடை பிரதேச சபை அலுவலகத்தில்**

**மன்ற செயலாளர்**
**வெளிமடை பிரதேச சபை**

## சியம்பலாண்டுவ பிரதேச சபை

# பெறுகை அறிவித்தல்

சியம்பலாண்டுவ பிரதேச சபைக்குச் சொந்தமான பின்வரும் 01ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வாரச்சந்தைகளை 2024 ஜனவரி 01ஆம் திகதி முதல் 2024 டிசம்பர் 31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு குத்தகை உரிமையை வழங்குவற்கான பெறுகைகள் கோரப்படுகின்றன.

இதன்பொருட்டான பெறுகை கோரல் படிவங்களை 2023-10-23ஆம் திகதி முதல் 2023-11-13ஆம் திகதி வரையில் பி.ப. 2.00 மணி வரை சியம்பலாண்டுவ பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பெறுகை விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்யலாம் அல்லாவிடில் அலுவலகத்தின் பெறுகைப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிட்டு பெறுகைகளைச் சமர்ப்பிக்கலாம். 2023-11-14ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

01. பிரதேச சபையினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் மொனராகலை மாவட்டத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட தொண்டர் அமைப்புகள் மட்டுமே விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கலாம்.

02. விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும்போது தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக தேசிய அடையாள அட்டை மற்றும் வதிவிடத்தை நிரூபிப்பதற்காக அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம சேவையாளரின் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**01 அட்டவணை**

| தொ. இல. | வாரச்சந்தையின் பெயர் | மீளளிக்கப் படாத பெறுகைப் படிவக் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப் படும் பெறுகை வைப்புத் தொகை (ரூபா) | ஆகக் குறைந்த விலைக்கோரல் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | சியம்பலாண்டுவ வாரச்சந்தை | 5,000.00 | 25,000.00 | 3097200.00 |
| 02 | தொம்பகஹவெல வாரச்சந்தை | 5,000.00 | 25,000.00 | 4506000.00 |
| 03 | பல்லேவெல வாரச்சந்தை | 5,000.00 | 25,000.00 | 3217200.00 |
| 04 | அத்திமலே வாரச்சந்தை | 5,000.00 | 25,000.00 | 1933200.00 |

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் அலுவலகத்திற்கு வருகை தந்தோ அல்லது 055-2279166, 055-2279171 எனும் தொலைபேசி எண்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பீ.எம்.யூ.என்.கே. பஸ்நாயக்க,**
**சபைச் செயலாளர்,**
**பிரதேச சபை, சியம்பலாண்டுவ.**

**2023-10-20ஆம் திகதி.**

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59 (2)பிரிவின் பிரகாரம் வழங்கப்படும் அறிவித்தல்

யுரெகா டெக்நொலஜி பாட்னர்ஸ் (பிறைவட்) லிமிடட் (கம்பனிப் பதிவிலக்கம் பீவீ 21765) ஆனது அதனது பதிவு செய்யப்பட்ட முகவரியாக 2 வது மாடி பேர்னாட் பிஸ்னஸ் பார்க், இலக்கம் 106, துட்டுகெமுனு வீதி, தெஹிவளையை கொண்டுள்ளதோடு, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59 (2) பிரிவின் பிரகாரம் வழங்கப்படும் பகிரங்க அறிவித்தல் வழங்கப்படுவதோடு, அதற்கு ஏற்ப அதன் கூறப்பட்ட மூலதனத்தை இலங்கை ரூபாய் நூற்று முப்பத்தி நான்கு மில்லியன் ஐந்நூற்று ஐம்பதாயிரத்து நாநூற்று எழுபத்தைந்து தசம் ஆறு ஐந்து (LKR 134,550,475.65) இலிருந்து இலங்கை ரூபாய் இருபத்து ஆறு மில்லியன் எண்ணூற்று பத்தொண்பதாயிரத்து தொள்ளாயிரமாக (LKR 26,819,900) குறைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**கோபரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடட்**
**செயலாளர்கள்,**
**யுரெகா டெக்நொலஜி பாட்னர்ஸ் (பிறைவட்) லிமிடட்**

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

## காணி சுவீகரித்தற் சட்டம் (அதிதியாயம் 460)

### 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல : 3/6/2019/45
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல: 4-3/7/2020/HW/140

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2023.09.18 ஆம் திகதிய 2350/14 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் :- வடமேல்

மாவட்டம் :- குருணாகல்

பிரதேச செயலாளர் பிரிவு :- பொல்கஹவலை

கிராம நிலதாரி பிரிவு :- இல. 898, ஹந்துகல

கிராமத்தின் பெயர் :- ஹந்துகல

வரைபட இலக்கம் :- க.வ. இல. 421720, தொகுதி இல. 02, தாள் இல. 1

காணியின் பெயர் :- க்வீன்ஸ்லன்ட்வத்தை உற்பட்ட காணி துண்டு இல 02

விஸ்தீரணம் :- 0.1699 ஹெக்டயார்

**டீ அனோமா திசாநாயக்க**
**பிரதேச செயலாளர்,**
**பொல்கஹவலை.**

